# காதல் நெஞ்சம்



வித்துவான் புலவர்
பி. ஆனந்தராயர் 'வேல்மாறன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/800/4652

# காதல் நெஞ்சம்

வித்துவான் புலவர்

பி. ஆனந்தராயர் 'வேல்மாறன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் முதற்பதிப்பிற்கு (1969) வாழ்த்துரை வழங்கிய
அமரர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களையும்,
அணிந்துரை நல்கிய அமரர் முதலியார் செ. முத்துத்தம்பி
அவர்களையும்,
நூலை தாமே வெளியீடுசெய்து தமிழ் நெஞ்சங்கள்
மத்தியில் என்னை அறிமுகப்படுத்திய வள்ளல் அமரர்
ச. குமாரசுவாமி அவர்களையும்,
அச்சுப்பிரதிகளை என் கையெழுத்து மூலங்களோடு
ஒப்புநோக்கிய எம் அன்புக்குப் பாத்திரமான நண்பர் அமரர்
புலவர் சோ. கனகரத்தினம் அவர்களையும்
இக்காலகட்டத்தில் நெஞ்சுருக நினைத்து, இரண்டாவது
பதிப்பான இந்நூலை அவர்கள் திருமுன் நன்றியோடு
சமர்ப்பிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நூல் | : காதல் நெஞ்சம் |
| விடயம் | : தமிழ் இலக்கியம் |
| ஆசிரியர் | : பி. ஆனந்தராயர் 'வேல்மாறன்' |
| | 9, ஓடைக்கரை வீதி, யாழ்ப்பாணம். |
| பக்கங்கள் | : 160 + xii |
| முதற் பதிப்பு | : ஒக்டோபர் 1969 |
| இரண்டாம் பதிப்பு | : ஆனி 2007 |
| பதிப்புரிமை | : ஆசிரியர் |
| வெளியீடு | : நியோ கல்சரல் கவுன்சில் |
| | 28/1, சென். ஜேம்ஸ் மேற்கு வீதி, யாழ்ப்பாணம். |
| கணினி வடிவமைப்பு அட்டை மீளாக்கம் | : ஜெயந்த் சென்ரர் |
| | 28 , மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். |
| அச்சுப்பதிப்பு | : ஏ. சி. எம். அச்சகம் |
| | 464, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| பிரதிகள் | : 500 |
| விலை | : 250/= |

| | |
|---|---|
| Name of Book | : KATHAL NENJAM |
| Subject | : Tamil Literature |
| Author | : Francis. Anandarayar ' Velmaran' |
| | No. 9, Odaikkarai Road, Jaffna. |
| Pages | : 160 + xii |
| First Edition | : October 1969 |
| 2nd Edition | : June 2007 |
| Copy Right | : Author |
| Published by | : Neo Cultural Council |
| | 28/1, St. James West Street, Jaffna |
| Computer Layout | : Jeyanth Centre, |
| | 28, Martyn Road, Jaffna. |
| Print by | : A.C.M. Press, |
| | 464, Hospital Road, Jaffna. |
| Copies | : 500 |
| Price | : 250/= |

ISBN 955-1629-00-0

9789551629007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்
மனம் உவந்து அளித்த

## வாழ்த்துரை

அறத்துக்குப் பயன் 'மனத்துக்கண் மாசிலன் ஆதல்'. மனந் தூயோர், 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும்', 'யார் யார் வாய்க் கேட்பினும்', சுட்டப்படும் பொருளை வைத்துக்கொண்டு, அப்பொருள் மூலம் நிலையாய மெய்ப்பொருளைத் தலைப்படுவர். அன்றி, உலகியற் காதலின்பத்தை, புணர்ந்தாற் புணருந்தொறும் புதுமை பயப்பதாய பேரின்பத்துக்கு வாயில் செய்துங் கொள்வர்.

இவ்வாற்றால், 'ஆற்றி னொழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை'யைப் பயந்து, பயன் செய்வதொரு காதலின்பமே இந்நூலில் விரித்துரைக்கப்பட்டதென்று கொள்க.

இந்த முறையில் இந்நூலுக்கும், நூலாசிரியருக்கும் என் வாழ்த்து உரியதாகுக.

**சி. கணபதிப்பிள்ளை**

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
**05.09.1969.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் யாழ். மாநகர சபை அங்கத்தவர்,

அறநெறிக் காவலர்,

## முதலியார் செ. முத்துத்தம்பி

அவர்கள் மனம் உவந்து அளித்த

# அணிந்துரை

காதலையும் வீரத்தையும் இரு கண்ணென மதித்துப் போற்றி வாழ்ந்த சங்க காலத் தமிழன், இன்று காதலற்றவனாய் – கோழைத்தனம் உள்ளவனாய் – பொய்யும் பித்தலாட்டமும் நிறைந்தவனாய் – தன்னம்பிக்கை அற்றவனாய் வாழ்கின்றான்.

இந்த இழிந்த நிலை ஏனோ? நாளாந்தம் இவன் மத்தியில் கொலையும், களவும், கொள்ளையும், மலிந்து காணப்படுவது ஏனோ?

இவற்றுக்கெல்லாம் காரணம் என்ன? 'காதல் நெஞ்சம்' இவனிடம் இல்லாமற் போனதுதான்.

ஆணும் பெண்ணும் ஒருவரை யொருவர் கண்டு – உள்ளம் நெகிழ்ந்து – நெஞ்சம் கலந்து – களவொழுக்கம் பூண்டு வாழ்வதும் பின்பு கற்பொழுக்கத்தில் திளைத்து – மக்களைப் பெற்று – சுற்றத்தைப் பேணி – உலகுக்கே நன்மக்களாய் வாழ்வதும் இவையெல்லாம் இன்று இவனுக்குப் புரியாத புதிராகிவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னம் தன் வலிமையையும், உழைப்பையும், ஆக்கத்தையும் கண்டு வாழ்ந்த ஆண் மகன் தனக்குரிய வாழ்க்கைத் துணையாளைத் தானே தேடிக்கொண்டான். தேடிக்கொள்ளும் அவளிடம் அழகையும், குணத்தையும், குடிப் பிறப்பையுந்தான் கண்டானே தவிர, பணத்தையோ – வீடு வளவையோ – பொருளையோ – கண்டானில்லை.

இன்றுள்ள ஆண் மகன் தன் குடும்ப வாழ்க்கைக்குப் பெண்ணைவிட பெரும் பணக் குவியலையே எதிர் பார்க்கின்றான். அவன் காதலிப்பது, தன் அமர வாழ்வுக்குக் கைப்பிடித்த பெண்ணையன்று காசைத்தான். மாமன் மாமியரிடம் எதிர்பார்க்கக்கூடிய வீடு வளவைத்தான்.

இன்றோ திருமணம் நாளையோ சச்சரவு மறுநாளோ கோடு இப்படித்தான் இக்காலத்து மனைவாழ்க்கை.

தமிழன் வாழும் இக்காலத்திய அவக்கேட்டை உணர்ந்துதான் என்னவோ வித்துவான் - புலவர் பி. ஆனந்தராயர் (வேல்மாறன்) அவர்கள் இவ்வரிய 'காதல் நெஞ்சம்' என்னும் ஒப்பற்ற நூலைத் தந்துள்ளார் போலும்.

'காதல் நெஞ்சம் மாசுமறுவற்றது. தெய்வசந்நிதானம் நினைத்தாற்கூடக் காதலைப் பிரிக்க முடியாது.'

இதைப் போன்ற எண்ணற்ற தன் கருத்தினை குறளின், அகநானூற்றின், ஆழ்ந்த புதைபொருளின் செறிவோடு இடையிடையே இழைத்து அமுதமாகக் காதல் மழை பொழிகின்றார் ஆசிரியர்.

வீடுதோறும், நாடுதோறும் காதல் நெஞ்சுடையோர் பெருக வேண்டும்! பொய்மை நிறைந்த வஞ்சக வாழ்க்கை அடியோடு அழிய வேண்டும்! மீண்டும் தமிழ் சமூகம் அகத்திலும் புறத்திலும் தன் உண்மையான வாழ்வினைக் காட்ட வேண்டும்!

– இதற்கெல்லாம் இந்நூல் பேருதவியாக இருக்கும் என நம்புகிறேன். தமிழ்ப் பெருமக்களின் ஒவ்வொரு இல்லத்தையும் வேல்மாறனின் காதல் நெஞ்சம் அலங்கரிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணப் பரிசாக மணமக்களுக்கு வழங்குவதற்கு இந்நூல் ஒன்றே போதுமானது.

ஆசிரியரின் இனிய எழுத்திலும், பேச்சிலும், கலை ஞானத்திலும் இரண்டறக் கலந்து மெய்மறந்தவருள் நானும் ஒருவன். இவரின் அரும்பணிகள் இன்னும் எத்தனையோ நூல்களாக வெளிவரவிருக்கின்றன.

புலவரின் பெரும்பேறான இப்பணிக்கு என் மன மகிழ்ச்சியான பாராட்டைத் தெரிவிப்பதோடு, இந்நூலை அழகாக அச்சிட்டு வெளியிட்ட ஸ்ரீ சண்முகநாத அச்சக உரிமையாளர் உயர்திருவாளர் ச.குமாரசுவாமி அவர்களுக்கு நம் தமிழ் சமூகத்தின் சார்பாய் நன்றியும் கடமைப்பாடும் உள்ளவராய் இருக்கின்றோம் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

உயர்திரு.ச.குமாரசுவாமி அவர்களின் அருந்தொண்டு வாழ்க! புலவர் 'வேல்மாறன்' அவர்களின் தமிழ்ப் பணி வளர்க! – என வாயார வாழ்த்துகிறேன்.

செ. முத்துத்தம்பி

'தமிழகம்'
பாவட்டங்காடு
யாழ்ப்பாணம்.
06.09.1969.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

*காதல்! காதல்! காதல்!*

- இச்சொல் என்று தோன்றியதோ, அன்றே மானிடத்தின் உள்ளுணர்வு உயிர்ப்பையும் உயர்வையும் பெற்றுவிட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

பழந்தமிழ் இலக்கியங்களின் தோற்றுவாயும் அவற்றின் வளர்ச்சிப் பரப்பளவும் மானிடத்தின் அக உணர்வில் விளைந்த காதலுக்கே அதிக இடத்தை விட்டுச் சென்றுள்ளன.

ஆண் பெண்ணின் அகவுணர்வின் உறவு நிலைகளை அன்பு, நட்பு, காமம், காதல் என்னும் சொற்களால் பழந்தமிழ்ப் புலவர்கள் விளக்கிய போதிலும் இவற்றுள் 'காதல்' என்னும் சொல்லே அன்றும் இன்றும் ஒரே நிலையில் சாகாவரம் பெற்று விளங்குகின்றது.

சாகாவரம் பெற்ற இக்காதலுக்காக இவ்வுலகில் வாழ்கின்ற அனைத்து ஜீவன்களுமே போராடுகின்றன. மேலும், அப்போராட்டத்தில் பூரணத்துவமாகிவிட துடியாய்த் துடிக்கின்றன. இப்போராட்டத்திலும் துடிப்பிலும் மானிட ஜீவன்களின் வாழ்வே வரலாற்றாகவும் இலக்கியமாகவும் அவற்றின் படிப்பினைகளாகவும் பேசப்படுகின்றன.

இந்நிலையில் இன்றைய நவீனத்துவ இளைஞர் 'காதல்' என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்ளாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணை மூடிக்கொண்டு பால் உறவில் மாத்திரமே சுகம் காணத் துடியாய்த் துடித்து பந்தயம் கட்டி ஓடுகின்றனர். அவ்வோட்டத்தின் நடுவிலே தட்டுத் தடுமாறி தலை குப்புற விழுந்து உலகத்தாரின் சாபத்தையும் பெறுகின்றனர்.

உலகத்தார் என்று பார்க்கும்போது அவர்களுள் சிலர் காதலைப் புரிந்தும் புரியாதவர் போல் அதில் பெரும் மயக்கத்தையும் குழப்பத்தையும் புகுத்தி புனிதமான அவ்வுறவுக்கு சேற்றினை வாரிப் பூசி விடுகின்றனர். இவர்களுக்கெல்லாம் இந்நூல் நன்மை பயக்கும் என்றால் தமிழ் கூறும் நல்லுலகின் பழந்தமிழ் நூல்களுக்கு ஏற்படக்கூடிய மகிமையாய் இருக்கட்டும்.

'மலரினும் மெல்லிது காமம்'

அம் மென்மையின் தன்மையை இந்நுலில் கடைசிவரை காட்டியுள்ளேன்.

பழந்தமிழ் இலக்கிய நூல்களான திருக்குறள், அகநானூறு இவற்றின் ஆழ்ந்த கருத்து வளங்களை ஆய்வு செய்யும் களமாக மாத்திரம் இந்நுலை நான் படைக்க முற்படவில்லை. சாதாரணமாகத் தமிழ் அறிந்த எவரும் பழைய இலக்கியக் கருவூலங்களை இன்றைய சிறுகதை, நாவல்களின் இலக்கியப் போக்குக்கு ஏற்ப சுவை குன்றாமல் அறிந்துகொள்ளும் பொருட்டாகவே இந்நூலைப் படைத்துள்ளேன்.

திருக்குறள் காமத்துப்பாலை களவியல், கற்பியல் என்று இரு பாகங்களாகப் பிரித்து, அவற்றுள் பல அத்தியாயங்களை வகுத்து, அவற்றை ஒன்றுக்கொன்று தொடர்நிலையான கதை வடிவமாய் அமைத்துள்ளேன். இதில் பேசப்படும் கதாபாத்திரங்களும், அவற்றின் நிகழ்வுகளும், உள்ளுணர்வுகளும் குறளின் பொருள்நிலை குன்றாமல் அமைந்துள்ளன.

அடுத்துவரும் ஐந்திணையியல் பகுதியில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைக்குரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் ஒழுக்கங்களான இருத்தல், புணர்தல், ஊடல், இரங்கல், பிரிதல் ஆகிய உரிப்பொருளைக் காட்டுதற்கு அகநானூற்றுப் பாடல்களையே எடுத்தாண்டுள்ளேன்.

இன்று இந்நூல் இரண்டாவது மறுபதிப்பாக வெளிவரும் இக்காலகட்டத்தில் முதற்பதிப்பை 1969 ஆம் ஆண்டு வெளியிட்டு தமிழ் நெஞ்சுடையோர் மத்தியில் என்னை அறிமுகப்படுத்திய அமரர் ச. குமாரசுவாமி அவர்களையும், நூற்கு முதற்கண் மனமுவந்து வாழ்த்துரை வழங்கிய அமரர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களையும், அணிந்துரை வழங்கிய அமரர் முதலியார் செ. முத்துத்தம்பி அவர்களையும், அச்சுப்பிரதிகளை உற்றுநோக்கிய அமரர் புலவர் சோ. கனகரத்தினம் அவர்களையும், நூலுக்குரிய வண்ண அட்டைப்படத்தை வரைந்து நல்கிய ஓவியக் கலைஞர் திரு. ஆ. கைலாசபதி அவர்களையும் என் நெஞ்சம் எக்காலத்திலும் மறப்பதற்கில்லை.

வெறும் பட்டப் படிப்புக்காகத் தமிழ்மொழியை நான் பயிலவில்லை. மொழியின் ஊற்றையும் வளத்தையும் பல வாயில்களாக எமக்கு அளித்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தையும், குறிப்பாக சங்க இலக்கியங்களின் உள் உணர்வுகளை அமுதமாய் எமக்கு உரைத்த தமிழ்ப் பேராசிரியர் பண்டிதமணி இராமநாதன் செட்டியார், வித்துவான் அருணாசலம்பிள்ளை, வித்துவான் நடேச முதலியார் அவர்களையும் எம்மால் மறந்து வாழ முடியாது. அவர்கள் என் உள்ளத்தில் விதைத்த விதைகள்தாம் இவைகள்.

இந்நூலின் இரண்டாவது பதிப்புக்கான பிரதியை கணினியில் தட்டச்சு செய்து வழங்கிய எம் அன்புக்குரிய மாணவன் திரு. அன்ரனி அனஸ்ரன் றோச் **B.B.A (Hons)** அவர்களுக்கும், கணினி மூலம் நூலுக்குரிய வடிவமைப்பை மேற்கொண்டு, எழுத்துப் பிழைகளை ஒப்புநோக்கி, அட்டை ஓவியத்தை மீளாக்கம் செய்து, மொத்தத்தில் இந்நூலை அழகுற அச்சேற்றத் துணைநின்ற ஜெயந்த் சென்ரர் உரிமையாளர் திரு. கு. இராயப்பு அவர்களுக்கும், அவ்வப்போது என் கையெழுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கங்களையும், செய்யுட்களின் மூலங்களையும் அச்சுப்பிரதியோடு ஒப்புநோக்கிச் சரிசெய்வதற்குத் துணைபுரிந்த எம் மரியதாஸ் அறிவக மாணவி செல்வி கி.ஜெயப்பிரியா அவர்களுக்கும் என் நன்றி. மேலும், இந்நூலின் மறுபதிப்பை ஏற்றமுறையில் வெளியிட முன்வந்த 'நெயோ கல்சரல் கவுன்சில்' (Neo Cultural Council) நிறுவனத்திற்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

கடைசியாக இரண்டாரு வார்த்தைகள், -

பழந்தமிழ் இலக்கியங்களைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் தமிழ் மக்களிடம் இன்று அருகிவருகின்றது. இந்நிலையில் இதுபோன்ற ஆக்கங்கள் இலக்கியங்களைப் படிப்பதற்குத் தூண்டுகோலாய் அமையும் என்ற நம்பிக்கையோடு இந்நூலை மறுபதிப்பாக வெளியிடுகிறேன். குறிப்பாக பழந்தமிழ் இலக்கியங்களின் அகப் பண்பினைத் தெரிந்துகொள்வதற்கு ஆர்வமுள்ள உயர்கலை மாணவர், ஆசிரியர் உலகம் இந்நூலைப் படித்துப் பயன் காண்பது நன்றிலும் நன்று.

இந்நூலின் முதற் பதிப்பு வெளியானபோது தமிழ் அன்பர்களிடம் இருந்து வந்த பாராட்டுகளுக்கும், இனிமேல் வரப்போகும் நற்சான்றுகளுக்கும் முக்கிய உயிர்நாடியாய் விளங்குபவர் என் அன்பான அன்னைதான் என்பதைக்கூறி, அவரை இறைஞ்சி - வணங்கி என் உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்!

அன்புடன்,

**பிரான்சிஸ் ஆனந்தராயர்**

'வேல்மாறன்'

இல. 9, ஓடைக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
**22.06.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பாகம்

## களவியல்

இரண்டாம் பாகம்

## கற்பியல்

மூன்றாம் பாகம்

## ஐந்திணையியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள் அடக்கம்

## களவியல்


| | |
|---|---|
| அவனும் அவளும் | 1 |
| காதற் குறிப்பு | 6 |
| கடல் போன்ற காமம் | 12 |
| காதல் இன்பத்தின் நிறைவு | 18 |
| நலம் புனைந்து உரைத்தல் | 23 |
| காதற் சிறப்பு உரைத்தல் | 28 |
| குறை நிலா | 34 |


## கற்பியல்


| | |
|---|---|
| மணமும் பிரிவும் | 41 |
| இலட்சியக் கனவு | 47 |
| தூங்காத கண்கள் | 52 |
| பசலைக் கோலம் | 57 |
| தனிமையின் தாக்கம் | 63 |
| நினைந்து அவன் புலம்பல் | 68 |
| நினைந்து அவள் புலம்பல் | 73 |
| கனவும் நினைவு | 77 |
| துன்பமாலை | 80 |
| எண்ணத்தின் சுழற்சி | 85 |
| மீட்சி | 88 |
| நாணத்தை மறந்தேன் | 91 |
| ஊடலும் கூடலும் | 96 |


## ஐந்திணையியல்


| | |
|---|---|
| துணை வாழ்க்கை | 101 |
| குறித்த இன்பம் | 106 |
| மருதநிலக் காதல் | 116 |
| அழிந்து உருகும் நெஞ்சம் | 133 |
| செவிலித் தாயின் புலம்பல் | 151 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பாகம்

# களவியல்



'களவியல்' என்பது தலைவன் தலைவி இருவரும் தமரும் பிறரும் அறியாதவாறு களவாகக் காதல் ஒழுக்கம் பூணுவதாம். அதாவது திருமணம் ஆவதற்கு முன்னமே ஒருவரை ஒருவர் கண்டு காதலுற்று வாழ்வதாகும். இப்பகுதியில், தலைமக்கள் ஒருவரை ஒருவர் காண்பதும், காதற் குறிப்பை வெளிப்படுத்துவதும், இடையீடு இல்லாத புணர்ச்சியை எதிர்பார்த்து உள்ளம் அழிதலும் முதலியன இப்பகுதியில் அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனும் அவளும்

**வா**னமெங்கும் வெள்ளிய நுரைகளைச் சிதறிச் சிந்தும் பல அருவிகள் வீழும் பாங்கான மலை, அம்மலையின் அடிவாரத்தில் குறிஞ்சிப் பூக்கள் பெருந்தேனோடு தேங்கிக் காணப்படும். பனித்துளிகள் படர்ந்த பசுமையான காந்தள் மலர்கள் நன்றாய் அலர்ந்து, வீயாகி நிலத்தில் வீழ்ந்து, எங்கும் பரவலாய்க் கிடக்கும். வேங்கைப் பூக்கள் அசோக மரத்தின் இளந் தளிர்களோடு பிணைந்து அகில் மரத்தின் உயர்ந்த கிளைகளை வருடிக்கொண்டே நிற்கும். தேக்கமரத்தில் தென்போடு வாழும் கிளிகள் கூட்டம் கொஞ்சும் மொழிதனைப் பேசும். அப் பேச்சு ஒவ்வொன்றுக்கும் அபிநயம் பிடிப்பதுபோல் மூங்கிலின் அடர்ந்த புதர்களெங்கும் தம் தோகையை விரித்து மயில்கள் களிப்புற ஆடும். இத்துணை பொலிவுக்கு இருப்பிடமான அப்பூம்பொழிலில் அழகின் வடிவமே எடுத்ததுபோல் ஓர் ஒப்பற்ற ஆரணங்கு விளையாடி மகிழ அவ்விடம் நோக்கி தன் தோழியருடன் வந்தாள்.

வந்தவள், இடை வழியில் தோழியர் நீங்கவும் ஊழ்வினை வசத்தால் தனியனானாள். தனித்த அவளோ ஓரிடத்திலுள்ள குறிஞ்சி மலரைப் பறித்து அதன் மெதுமையான இதழ்களை வருடிக்கொண்டே நின்றாள்.

அப்போது வேட்டையாட விருப்புற்று வந்த ஓர் ஒப்பற்ற தலைமகன் விதிவசத்தால் உந்தப்பட்டவனைப் போல் அவ்விடத்தேதான் வந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த அவனோ, தன் வேல் கொண்டு விருப்போடு தாக்குதற்குரிய களிற்றைக் கண்டானல்லன். கவின் படைத்த காரிகையைத்தான் கண்டான்!

கோதையின் அழகு முனைகள் ஒவ்வொன்றும் அக்காளையின் நெஞ்சைக் கொள்ளை கொண்டுவிட்டன. அவளைப் பார்த்த மாத்திரத்திலேயே அவனுடைய உள்ளம் அதிக பிரமிப்பைத்தான் அடைந்தது. காரணம், இது வரைக்கும் அவன் இத்துணை அழகின் பேர்உருவைக் கண்டிராத நிலைதான்.

– "கனத்த குழையை உடைய இவள் தன் அழகால் பிறரைத் தாக்கித் தன் வசமாக்கக்கூடிய அணங்கோ? பல மயில்களுள்ளும் தெரிந்தெடுக்கப்பட்ட ஆய்மயிலோ? அல்லது ஒரு மானிட மாதுதானோ? என் நெஞ்சம் இவளை இன்னவள் என்று துணிய மாட்டாது மயங்குகின்றதே!"

***அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை***
***மாதர்கொல் மாலும்என் நெஞ்சு.***

*(குறள் - 1081)*

இவ்வாறு அவளுடைய அழகின் சாயல் அவனுக்குப் பெரும் மயக்கத்தையே அளித்தது. அம்மயக்கத்திலே அவளையே மீண்டும் மீண்டும் பிரமித்து நோக்கி நின்றான் தலைமகன்.

அவளோ வைத்த கண் இமையாது அவனையே எதிர் நோக்கிக் கற்சிலையாக நின்றாள்.

அந்நோக்கு – தானே தன் அழகால் பிறரைத் தாக்கி வருத்தித் தன் வசம் ஆக்கக் கூடிய அணங்கு, தான் மாத்திரம் நின்று தாக்காது – தன்னைப் போன்ற எண்ணற்ற பல அணங்குகளைக் கொண்ட பெரும்படையைக் கொண்டு தாக்குவதைப் போலவே அவனுக்கு இருந்தது.

***நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு***
***தானைக்கொண் டன்ன(து) உடைத்து.***

*(குறள் - 1082)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணங்கின் தாக்குதலுக்கு எதிர்த்தாக்குதல் செய்யக்கூடிய சக்தியோ அல்லது அத்தாக்குதலைத் தாங்கக் கூடிய வன்மையோ அவனிடம் ஏது? உடலில் இருந்து உயிரைக் கவரக் கூடிய கூற்றம் பற்றிப் பலரும் பலவிதமாகச் சொல்லக் கேட்டிருக்கிறானே தவிர, இதுவரையும் அக் கூற்றத்தை நேரிலே பார்த்தறியான்.

ஆனாலும், 'இன்றே அக் கூற்றம் தன் எதிரிலே நிற்கும் பெண் தகையாளின் நீண்டு அகன்ற கருமையான கண்கள்தாம்'* என்பதை இப்பொழுதுதான் கண்டு உணர்ந்தான்.

உண்மையில் அவனுடைய உயிரை அவள் பார்த்த ஒவ்வொரு பார்வையும் உண்டுவிட்டது. மேலும் அவனுடைய நெஞ்சின் வலிமை அவளுடைய நாணத்தால் ஒளிவீசும் நெற்றிப் பரப்புக்கும், இளமை பொருந்திய மார்புக்கும் அடிமை பூண்டுவிட்டது.

தலைமகளோ பெண்மையுள்ளவள். அந்தப் பெண்மையில் அடங்கியுள்ள மடநோக்கும், அந்நோக்கில் புரையோடிய நாணும் அவளுக்கு இயல்பாய் அமைந்த அணிகள்தாம். இத்துணைப் பெண்மை அழகை அவளிடம் அவன் முழுமையாகவே கண்டான். இனி அவளை அவன் மறப்பதோ, துறப்பதோ, முடியாததொன்று. அவளோடு இணைந்து இன்பங் காணும் வாழ்வுதான் அவனுக்குப் பெருமகிழ்ச்சியை அளிக்க முடியும். அம்மகிழ்ச்சியைப் பெறுவதானால் முதலில் அவளுடைய உள்ளக் குறிப்பையன்றோ தெரிந்து கொள்ளவேண்டும். அவள் உள்ளத்தை முற்றாக இன்னது என்று அறிவதற்குள்ளாகவே அவளைக் கண்ட மாத்திரத்தில் அவளோடு இணைந்து, பெறவல்ல இன்ப நுகர்ச்சியிலேயே அவனது உள்ளம் ஈடுபாடு கொண்டு விட்டது. அந்த ஈடுபாட்டின் பிடிப்பில் அவனுடைய சிந்தனை ஓட்டம் வெகுதூரம் வேலை செய்திருக்க வேண்டும். அவ்வோட்டத்தில் தேங்கிய உணர்ச்சிப் பெருக்கில் எதையோ தன் நெஞ்சுக்குள்ளேதான் சொன்னான்!

"அடப்படும் நறவு — நன்கு பதப்படுத்தி செய்தகள் இருக்கின்றதே! – அது, தன்னை உண்டாரிடத்திற்தானே மகிழ்ச்சியை அளிக்கின்றது; காமம்போல் கண்டாரிடத்தும் மகிழ்ச்சியைச் செய்தலுடைத்து இல்லையே!"

* *குறள் – 1083*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உண்டார்கண் அல்ல(து) அடுநறாக் காமம்போல்*
*கண்டார் மகிழ்செய்தல் இன்று.*

*(குறள் - 1090)*

தலைவன் சொல்லிய இந்த மொழி வெறும் காமத்தால் விளைந்த மயக்கமன்று, அத்தனையும் தத்துவாம்சம் நிறைந்தன.

கள் உண்டாரிடத்து மகிழ்ச்சியை அளிக்கின்றது. காமமோ கண்டாரிடத்து மகிழ்ச்சியை அளிக்கின்றது. மகிழ்ச்சி அளிப்பதைப் பொறுத்தவரையில் கள்ளும் காமமும் ஒன்றுதான் என்று ஒருசேரச் சொல்லிவிட முடியாது.

கள்ளை உண்பதால் பெறும் மகிழ்ச்சி, உண்ணும் அளவைப் பொறுத்து நாவின் சுவைப் புலனோடு கூடி – ஏனைய புலன்களைச் சோர்வடையச் செய்து – சிறுபொழுது மாத்திரம் நின்று தீர்ந்துவிடும். காமமோ கண்டாரிடத்து மகிழ்ச்சியைச் செய்வதோடு நில்லாது, கண்டார்கட்புலனையும் கடந்து அவர் உள்ளத்தையே ஆட்கொண்டு விடுகின்றது. அதன்பின் அக்காமத்தையே உண்டு படுத்திய அவளைக் கண்டுதான் இன்பத்தைப் பெறவேண்டும் என்ற நிலையும் அதற்கு இல்லை. தன் மனம் என்னும் கண்ணால் அவளை அவன் என்றுங் காண முடியும். அவ்விதம் காணுந்தோறும் காணுந்தோறும் அவள் உருவம் அவனுக்கு மகிழ்ச்சியை அளித்துக்கொண்டுதான் இருக்கும்.

காமம் மென்மை உடையது. அம்மென்மையின் இன்பத்தை – மகிழ்ச்சியை – ஒருவர் தனித்து நின்று பெற முடியாது. இருவருடைய உள்ளமும் இரண்டறக் கலந்த நிலையில்தான் அவ்வின்பத்தைப் பெற முடியும்.

தலைவன் தலைவியைத் தனியிடத்தேதான் கண்டான். அவன் உள்ளம் அவள் வசமாகிவிட்டது என்பது வெளிப்படை.

ஆனால், அவள் உள்ளம்
'உள்ளத்தின் இணைப்புதான் காதல்!'
'அவள் உள்ளமும் அவன் வசமாகிவிட்டால்!'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டார் நிலையிலே மாத்திரம் நின்று காமத்தின் மகிழ்ச்சியைப் பெற வேண்டிய நிலை இனித் தலைவனுக்கு ஏற்படவே ஏற்படாது. உள்ளத்துப் புணர்ச்சியால்* இரண்டறக் கலந்த செவ்விதான இன்பத்தையே அவன் அவாவுற்று நின்றான்.

அவனுடைய அவ் அவாப்பெருக்கினைப் போலவே மாலைக்காலத்துக் கதிரவனும் மேற்குவானின் அடிப்புறத்தே புதையுண்டு உருகிக்கொண்டே இருந்தான்!

* *உள்ளத்துப் புணர்ச்சி என்பது காதலர் உள்ளத்தால் ஒன்றித்தல், அதாவது தலைவன் தலைவி இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்த அக்கணமே ஒருவர் உள்ளத்தில் ஒருவர் இடம்பெற்று விடுதல் என்பதாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதற் குறிப்பு

**கா**வியத்திலும் எழுத முடியாத கவின் கன்னி! ஓவியத்திலும் வரைய முடியாத ஒயில் மங்கை! சிற்பத்திலும் செதுக்க முடியாத சேயிழையாள்!

அவ் ஆயிழையாளை முதன்முதலாக அவன் பார்த்தபோது, தெய்வ உலகத்து தெரிசனமோ? ஏழில் அணங்கோ? இப்புவிதான் ஈன்றெடுத்த பூமகளோ? – என்று பலவாறு எண்ணினான்.

அவ்வெண்ணம் தலைப்படும் நேரத்திலே அவள் உடல் அசைவைக் கண்டும், புருவ இமையைக் கொண்டும் இத்தரணி ஈன்ற தையல் என்பதைத் தெளிந்தான்; துணிந்தான்!

அவன் அவளை எத்தனை விசை நோக்கினானோ தெரியவில்லை. அவன் நோக்கிய நோக்குக்கு எதிர்நோக்காக அவளும் அவனையே பலமுறை நோக்கினாள்.

அந்நோக்குதலில் இரண்டுவகை நோக்கைக் கண்டு கொண்டான் தலைமகன்.

"ஒருநோக்கு அவன் மட்டில் நோய் செய்யும் நோக்கு; மற்றொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நோய்க்கு மருந்தாகும் நோக்கு."

***இருநோக்(கு) இவள்உண்கண் உள்ள(து) ஒருநோக்கு***
***நோய்நோக்கொன்(று) அந்நோய் மருந்து***

*(குறள் - 1091)*

ஒருநோக்கு நோய்செய்ய, அந்நோயினால் பாதிக்கப்பட்டவனாய் சிறு பொழுது சோர்ந்தான். அச்சோர்வின் தருணம் பார்த்து அவன் அறியாவண்ணம் அவள் அவனையே களவில் நோக்கினாள். அந்தக் களவு நோக்கு, அவன் வேண்டப்படுகின்ற புணர்ச்சியின் பாதி அளவை மாத்திரம் காட்டாது, அப்பாதியிலும் பெரிதான அளவையன்றோ காட்டியது. அதனால்தான் அவன் நோக்காதபோது அவள் அவனை அன்போடு நோக்கினாள் போலும்.

வெறும் அன்பு நிறைந்த நோக்கோடு நின்றாளா?

இல்லை இல்லை!

எதையோ ஒன்றை உட்கொண்டவளைப்போல் அவன் நோக்கியவிடத்து நாணுற்றுத் தலை குனிந்தாள்!

அவன் நோக்காதவிடத்து அவள் அவனை அன்போடு நோக்குவதும்; அவன் நோக்கியவிடத்து எதையோ உட்கொண்டவளைப் போல் நாணுற்று இறைஞ்சு (தலைகுனி) வதும்; இவையெல்லாம் இருவர் உள்ளத்திலும் தோன்றிய காதல் என்னும் பயிருக்கு - அதன் வளர்ச்சிக்கு - அவளே தானாக வார்க்கின்ற நீரைப் போலல்லவா விளங்குகின்றது.

***நோக்கினாள்; நோக்கி இறைஞ்சினாள்; அ∴தவள்***
***யாப்பினுள் அட்டிய நீர்.***

*(குறள் - 1093)*

நோக்கினாலும், நோக்கிலே புரையோடிய நாணத்தினாலும் அவள் உள்ளத்தை ஓரளவு புரிந்துகொண்ட தலை மகனோ, தலைமகளை மீண்டும் நோக்கினான். அவன் நோக்கியவிடத்து அவள் நிலத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்குவதும், நோக்காதவிடத்து அவனைப் பார்த்து மெல்ல நகுவதும் இவையெல்லாம் அவன் மனத்துக்கு என்னவோபோல் இருந்தன.

எதையோ தன் நெஞ்சுக்குள் சொல்லிக்கொண்டான்!

–"யான் நோக்குமிடத்து என்னை நோக்காது தலை கவிழ்ந்து நிலத்தை நோக்கினாள். யான் நோக்காதவிடத்து தான் என்னை நோக்கி – மெல்லச் சிரிக்கின்றாள்!'' அத்தோடு மட்டுமா! மேலும் "என்னைக் குறித்துப் பார்த்துப் பாராமுகம் செய்யுமாப்போல் கடைக் கண்ணைச் சிமிட்டியும் சிரிக்கின்றாள்.''

***யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்***
***தான்நோக்கி மெல்ல நகும்.*** *(குறள் - 1094)*

***குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்***
***சிறக்கணித்தாள் போல நகும்.***

*(குறள் - 1095)*

இதை அவன் தனக்குள் சொன்னதோடு நில்லாது, மெல்ல அவள் அருகே நெருங்கவும் தொடங்கினான். நெருங்கியதும் அவளோ அசைவற்ற கற்சிலையானாள். அத்தருணம் அவனோ நெஞ்சுத் தைரியத்தோடு – ஆண்மையோடு பல அன்பு மொழிகளைத் தன் உள்ளந் திறந்து சொன்னான். அவன் சொல்லி வாய்மூடவில்லை. அதற்கிடையில் பெண்களின் கலகலப்பான சிரிப்பொலியும் பேச்சொலியும் தலைமக்களின் செவிகளுக்கு ஈட்டியைப்போல் பாய்ந்தன.

அப்பெண்கள் வேறு யாருமில்லை; அவள் உள்ளம் கவர்ந்த தோழியர்தாம்.

தோழியர் வந்ததுதான் தெரியும், உடனே ஒன்றுமே அறியாதவள் போன்று தலைமகள் பதற்றத்தோடு ஏதேதோ பேசினாள். அவள் பேசிய ஒவ்வொரு சொல்லும், புறத்தே அயலார் – அன்பிலார் – சொல்லும் சொற்களைப்போலவே தொனித்தன. என்றாலும், உண்மையில் அவள் சொல்லியவை அத்தனையும் அப்படிப்பட்டவையாக இருக்குமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்தே அன்பு கொண்டவரின் குறிப்பு இருக்கின்றதே! - அக்குறிப்பு, பகை கொள்ளாத கடுஞ் சொல்லாயும், பகைவர்போல் பார்க்கும் பார்வையாகத்தான் இருக்கும். புறத்துக்கு அவை ஒவ்வொன்றுமே அயலாரின் வடிவமாகத்தான் காணப்படும். இவ்வுண்மையைச் சிறுபொழுதிலேயே அவளிடம் கண்டு தெளிந்தான் தலைமகன்.

–"என்னை அகற்றுகின்ற அயலார் அன்பிலார் போன்ற ஓரிரு சொற்களை அவள் சொன்னாலும், மீண்டும் யான் இரங்கி இவளை நோக்கியவழி – என் நோக்கத்தை அறிந்து – தன் உள்ளம் நெகிழ்ந்து – சிறு ஓசை தன்னும் எழாமல் மெல்லச் சிரிக்கின்றாளே! இந்தச் சிரிப்பு இவளிடம் காணப்படும் இயல்பான அழகுக்கு அழகாயன்றோ விளங்குகின்றது."

*அசைஇயற்(கு) உண்டுஆண்டோர் ஏர்யான் நோக்கப்*
*பசையினள் பைய நகும்.*

*(குறள் - 1098)*

இதை அவன் புறத்தே சொல்லாவிட்டாலும் தன் அகத்தே தெரிந்து தெளிந்துதான் சொன்னான்.

தம்முள் உள்ளங்கலந்த காதலர் ஒருவரை ஒருவர் அறியாதவர் போன்று எத்தனை நாழிகைதாம் பொது நோக்கோடு பார்த்து நிற்பது! மாலைப் பொழுதோ மெல்ல மெல்ல அழிந்து தேய்ந்து அந்தி நேரமாகிவிட்டது. கதிரவன் தன் உடல் முழுதையும் மேற்குவானின் அடித்தளத்தில் புதைத்து மறையத் தொடங்கினான்.

காதலர் அவ்விடத்தை விட்டு ஒருவரை ஒருவர் பிரியப்போகும் நேரமும் நெருங்கி விட்டது.

அவளுக்கோ அவ்விடத்தை விட்டு ஒருகணமேனும் பிரிய உள்ளூர மனமில்லை.

பிரியுமுன் தன் சிந்தையை அவனுக்கே சொந்தமாக்கி அவனையே இமைகொட்டாது நோக்கினாள்! அவனும் அவளையே நோக்கினான்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந் நோக்கில் இருவருடைய கண்களுமே இணைந்து ஒன்றாயின!

'காதற்குறிப்போடு – கண்களோடு கண்கள் ஒரு சேர ஒத்து நோக்குமாயின் வாயினால் சொல்லும் சொற்களுக்கு என்ன பயனும் இல்லாமல் போய்விடுகின்றனவே!'

***கண்ணொடு கண்இணை நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள்***
***என்ன பயனும் இல.*** *(குறள் -1100)*

நெஞ்சத்திரையினுள் ஒளிந்து கிடக்கும் உள்ளுணர்ச்சிகளைக் கண் என்னும் கண்ணாடி காட்டி விடுகின்றது. அவனும் அவளும் ஒருவரையொருவர் நோக்கியபோது அந்நோக்கில் அவ்விருவருடைய ஒன்றித்த காதல் உணர்வுகளும் வெளிப்பட்டன.

அவளோடு புணர்ந்து – மகிழ்ந்து – அழியாத இன்ப வாழ்வைப் பெறவேண்டுமென்றுதான் அவன் உள்ளம் துடித்தது. அத்துடிப்புக்கு இணைவாக அவள் உள்ளம் இதுவென அறியாமல் மயக்கம் அடைந்த தலைமகனுக்கு இனி மயக்கம் என்பதே இல்லை. இந்நிலைக்கு அவனை அவள் விட்டுவைக்கவேயில்லை. முற்றிலும் அவன் வசமாகிய தன் உள்ளத்தைப் பலகோணங்களில் வைத்து தன் கண் என்னும் கண்ணாடியால் காட்டிவிட்டாள்.

உள்ளத்தின் ஒன்றிப்பை வாயினால்தான் சொல்ல வேண்டுமென்ற நிலை காதலர்க்கு இல்லை. காதலின் முழுமையான உண்மைவடிவம் சொல்லிலும் அடங்காதது. சொல்லிலும் அடங்காத ஒன்றைச் சொல்லில் இழைத்துச் சொல்வதில்தான் என்ன பயன்?

தன் உள்ளத்தை அவன்மீது உடைமையாக்கிய நிலையையும், அவனோடு புணர்ந்து இன்பந் துய்ப்பதற்குரிய அவாவையும், அவள் எப்படித்தான் வாயால் சொல்ல முடியும்!

அவன் தன்னை நோக்கியபோது நாணுற்றுத் தலை கவிழ்ந்த நிலையையும் துறந்து – தன் வாயினாற் சொல்ல முடியாத அதே இரகசியத்தை அவள் தன் கண்களால் சொன்னாள். அத்துடன் அவனுந்தான் சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் சொல்லிய அத்தனை சொற்களும் மொழியால் வடிவம் பெறாவிட்டாலும் உள்ளத்தால் வடிவம் பெற்றன. அவ்வுள்ளங்களின் வடிவம் ஒன்றோடொன்று புணர்ந்து கலந்தபின் இனி அவர்களிடையே மெய்யுறு புணர்ச்சி* என்ற ஒன்று நிகழவும் வேண்டுமா?

* *மெய்யுறு புணர்ச்சி என்பது காதலர் உடலால் ஒன்றித்தல்; அதாவது தலைவன் தலைவி இருவரும் ஒருவரை ஒருவர் தழுவி உடலுறவால் பெறும் புணர்ச்சி என்பதாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் போன்ற காமம்

**கா**லை புலர்ந்தது!

கதிரவனின் பொற்கோடுகள் பனைமட்டையால் செய்யப்பட்ட குதிரைமீது படர்ந்து ஒளிவீசின!

அக் குதிரையின் முதுகுப் புறத்தில் கையூன்றியவாறு ஓர் எடுப்பான ஆண்மகன் பிரமித்து நின்றான். அவனுடைய ஏறிய புருவமும் பிதுங்கிய விழிகளும் ஏதோ பலமான திட்டமொன்றில் அவன் ஈடுபட்டு இருக்கின்றான் என்பதைக் காட்டின. அத் திட்டத்தை நிறைவேற்றுதற்குத் துணையாகத்தான் அந்தப் பனை மட்டையால் செய்த குதிரை ஆடாமல் – அசையாமல் – பெயராமல் – அவன் கூட நிற்கின்றது போலும்.

ஒருமுறை குதிரையை ஏற இறங்கப் பார்த்தவாறு – வலம் வந்து – ஏகப் பெருவெளியை நோக்கி நின்று நெடுமூச்செறிந்தான். அவன் அக் குதிரையைச் சுற்றி வலம் வந்ததையும், ஏகப் பெருவழியை நோக்கி நின்று நெடுமூச்செறிந்ததையும் நல்லவேளை யாரேனும் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் அவனைப் பைத்தியம் என்றுதான் சொல்வார்கள்.

உண்மையில் அவனுக்குப் பைத்தியந்தானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் கண்ணுக்கு அவனுடைய செயல்கள் யாவும் நகைப்புக்கு இடமாகத்தான் விளங்குகின்றன.

"உலகம் ஒருவன் மட்டில் அழுவதற்குப் பதிலாக நகைக்கின்றது. நகைப்பதற்குப் பதிலாக அழுகின்றது." தலைவனின் நிலை, பிறர் பார்த்துப் பரிதாபப் பட வேண்டிய நிலை – அழவேண்டிய நிலை! இந் நிலையிலே அவன் படுந் துன்பம் அவனுக்குத்தான் தெரியும்!

–"அறிவில்லாத பலர் யாமே கண்ணாற் காணுமாறு எம் எதிரில் எம்மைக் கண்டு நகைக்கின்றனர். உண்மையில் யாம் பட்ட துன்பங்களைத் தாம் படாததினால்தானோ இவ்விதம் எம்மைப் பார்த்து நகைக்கின்றனர்?'

*யாம்கண்ணிற் காண நகுவர், அறிவில்லார்*
*யாம்பட்ட தாம்படா வாறு.* (குறள் - 1140)

இதைத்தான் அவன் பல முறை தன் நெஞ்சுக்குள்ளே சொல்லிக் கொண்டான். அவன் சொல்லிய இந்த மொழி – வெறும் பைத்தியக்காரன் உளறுகின்ற மொழியல்லவே.

நமக்கு இருப்பது இரண்டே இரண்டு கண்கள்தாம். ஆனால், நம்மைப் பார்ப்பதற்கோ இவ்வூர்க்கு ஆயிரங்கண்கள் இருக்கின்றன. தலைவிமீது தான் கொண்டுள்ள காதல் தன் உள்ளத்தே பிறர் அறியாதவாறு இருப்பதாகத்தான் தலைவன் எண்ணினான். ஆதனால்தான் தலைவி வாழும் இல்லத்தின் தெருவில் பலமுறை நடமாடினான் போலும். அந்த நடமாட்டத்தின் மறை பொருள் இன்று சந்தி சிரிக்கும்படியாகவும் ஆகிவிட்டது.

நாளாந்தம் தலைவியினுடைய அன்பின் கலப்பைப் பெறுவதற்கு சுற்றிச் சுழன்று கடைசியில் அவன் கண்ட பயன் அறிவில்லாதவர் எல்லோரும் தன்னைப் பார்த்து எள்ளி நகைக்கும்படியான பயனே தவிர வேறொன்றுமில்லை.

தெரு நகைக்கின்றது! ஊர் நகைக்கின்றது! நான் இப்போது நகைக்கப்படும் பொருளாகி விட்டேன். இனிமேல் நகைக்கின்ற இந்த அறிவற்ற உலகம் தொடர்ந்து நன்றாக நகைக்கட்டும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் நெஞ்சில் பீறிட்டு எழுந்த உணர்ச்சிப் பெருக்கினால்தான் மடலேறும் இந்தப் பரிதாபமான முடிவுக்குத் தலைவன் வந்தானோ?

'உண்மையில் காமத்தால் சதா துன்புற்று - காதலியின் அன்பின் கலப்பைப் பெறாமல் வருந்தினார்க்கு, அவ்வருத்தத்தைத் தீர்ப்பதற்குரிய காவலான - வலிமையான - துணையாய் அமைந்திருப்பது மடலூர்தலைத் தவிர வேறொன்றுமேயில்லை!

*காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்*
*மடல்அல்ல(து) இல்லை வலி.* *(குறள் - 1131)*

தலைவனின் மடலேறும் போக்கை முன்னமே அறிந்தவன்போல் பாங்கனும் எவ்வித பரபரப்பும் கொள்ளாமல் நல்ல சமயம் பார்த்தே வந்தான். அவன் வரும்போது தலைவன் தான் விரும்பும் இதயக்கமலமான தலைவியின் முகத்தை மெல்லிய துணியில் வரைந்து கொண்டே இருந்தான். வந்த பாங்கன் பனங்கருக்கு மட்டையாலான பரியையும் தலைவனையும் மாறிமாறிப் பார்த்தான். பார்த்த சிறிது நேரத்தின் பின்னே அவனது மனம் ஆழ்ந்த வியப்பில் இறங்கியது. மடலேறும் விடயம் ஒரு சாதாரண - இலகுவான - விடயமென்றால் எள்ளளவேனும் அவ்வியப்பு அவனிடம் தோன்றி இருக்காது. ஆனால், இதுவிடயம் தலைவனின் ஆண்மைக்கு இழுக்காகவும், அவனது உயிர்க்கு ஆபத்தாகவும் முடியும். இவ்விதம் உயிர்க்கும் ஆண்மைக்கும் ஊறு விளைவிக்கும் விடயத்தில் தலைவன் இறங்கியதையிட்டு அவன் அன்புக்கே பாத்திரமான பாங்கன் வியப்போடு அச்சமும் கொள்ளாமல் எப்படித்தான் இருப்பான்! தலைவனின் உயிர் போவதை விட அவனது நல்லாண்மையும் ஆண்மைக்குரிய நாணமும் போய்விடுமே என்பதுதான் அவன் அச்சத்துக்கு முக்கிய காரணம்.

-"தலைவா! நன்றாக யோசித்துப்பார்! - இதனால் உன் ஆண்மைக்குத்தான் இழுக்கு! இதை உணராமல் மடல் ஏறுதற்கும் துணிந்து விட்டாயே!"

-"காமத்தினால் ஏற்பட்ட வருத்தத்தினைப் பொறுக்காத உடம்பும் உயிரும் என் ஆண்மைக்கே உரித்தான நாணத்தை நீக்கி நிறுத்தி விட்டு மடல் ஏறத் துணிந்ததில் என்னதான் வியப்பு இருக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணமும் நல்லாண்மையும் என்று சொல்கின்றாயே! - அதே நாணத்தையும் ஆண்மையையும் முன்பு பெற்றிருந்தேன் என்பது உண்மைதான். ஆனால், இன்று! - காமுற்றவர் ஏறும் மடலை உடையவனாக விளங்குகின்றேன்.''

*நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்*
*காமுற்றார் ஏறும் மடல்.* (குறள் - 1133)

'காமமோ கடுமையான வெள்ளம் போன்றது. அவ் வெள்ளந்தான் என்னிடமிருந்து நாணமும் நல் ஆண்மையுமாகிய புனையினை அடித்துக்கொண்டு போய்விடுகின்றதே.' மடலேறுதல் பெருந்துன்பந்தான். அத் துன்பமோ ஒரு நாளிலேயே - ஒரு சிறு பொழுதிலேயே - தீர்ந்து போகக்கூடிய துன்பம். அத்துன்பத்தைத் தந்த சிறு வளையல்கள் அணிந்த என் காதலி இருக்கின்றாளே! - அவளால் மாலைக் காலத்தே பெறும் துயரந்தான் கொடுமையிலும் கொடுமை! ஆறாத்துயரம் முழுக்க முழுக்க என்னை ஆட்கொண்டுவிட்டது. அத்துடன், பகலிலேதான் இம்மடல் ஏறுதலைப்பற்றி நினைக்கின்றேனா? இல்லை! இரவிலே, அதிலும் நள்ளிரவிலே - இதைப் பற்றிப் பலமாக - உறுதியாக - நினைக்கின்றேன். முற்றிலும் என் உள்ளம் காதலியின் வசமானதால் அப்பேதையின் தழுவலாற் பெறும் இன்பத்தின் பொருட்டுத்தான் என் கண்கள் உறங்காமல் இருக்கின்றன.'

*காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு*
*நல்லாண்மை என்னும் புணை* (குறள் - 1134)

*மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற*
*படலொல்லா பேதைக்குஎன் கண்.* (குறள் - 1136)

தலைவன் சொன்ன இந் நீண்ட உரை அவன் துயர வெள்ளத்தின் குமிழிகள்தாம் என்பதைப் பாங்கன் உணராமலல்லன். எப்படி இருப்பினும் மடல் ஏறும் முயற்சியில் இருந்து அவனை விடுவிப்பதே அவன் நோக்கமாய் இருந்தது.

'காமம் என்பது உணர்ச்சிப் பெருக்கு உள்ளது!'

தலைவன் தலைவிமீது கொண்ட காமம் ஒரு தலைக்காமம் அன்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் ஐந்திணை* வயப்பட்ட காமந்தான். அன்று ஒருவரை ஒருவர் பார்த்தபோதே இருவர் உள்ளங்களும் உறவாடித் தம்முள் தாமாகக் கலந்தன. உள்ளங்கலந்தாலும் ஒருவரை ஒருவர் தழுவப் பெறாத இன்பக் கலப்பைத்தான் இன்னும் பெறாத ஒரு குறைபாட்டில் காதலர் இருந்தனர். அக்குறையுள்ள தன்மையால் அவன் எவ்விதம் வருந்தினானோ! அவளும் அதேபோன்ற வருத்தத்தையே அனுபவித்தாள். அவனை வருத்தும் அதே வருத்தம் அவளையும் வருத்தியது.

'காமம் பரந்து விரிந்த கடல் போன்றது!'

எல்லையற்ற கடல் போன்ற காமநோயால் வருந்திய தலைவன் அவ்வருத்தத்துக்கு முடிவைக் காணத் துடித்தான். அத் துடிப்பே மடல் ஏறக்கூடிய அளவுக்கு அவனைத் தயார் படுத்தியது. காம நோயால் வருந்தும் தலைவன் தன் ஆண்மைக்கே உரித்தான நாணத்தைத் துறந்து மடல் ஏறத் துணியலாம். ஆனால், அத் துணிவின் சிறுபாதி கூடத் தலைவியிடம் ஏற்படுமா?!

ஏற்படாது என்பது வெளிப்படையாகத் தெரிந்ததுதான்!

–'கடல் போன்ற காமநோயால் வருந்தியும் மடல் ஏற நினையாத பெண் பிறப்பினைப்போல் மேம்பட்ட பிறப்பு வேறொன்றுமே இல்லை.'

***கடல்அன்ன காமம் உழந்தும், மடல்ஏறாப்***
***பெண்ணிற் பெருந்தக்க(து) இல்.*✔*** *(குறள் - 1137)*

காமத்தால் உழலும் தன் ஆருயிர்த் தலைவனின் நிலையையும், தலைவியின் நிலையையும் ஒப்பிட்டு நோக்கிய பாங்கனின் உள்ளத்தில் தலைவியின் மாசு மறுவற்ற பெண்மை வெட்டவெளிச்சமாகத் துலங்கியது.

காலையிலே எழுந்த கதிரவனின் குளிர்ந்த கோடுகள் மெல்ல

* *ஐந்திணை யுடையது அன்புடைக் காமம்*
*(நம்பி அகப்பொருள் அகத்திணை – 4)*

*✔ *எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்*
*பொற்புடை நெறிமை இன்மை யான.*
*(தொல் - பொருள் அகத்திணை – 38)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல வெப்ப அனலைக் கக்கத் தொடங்கின.

தலைவனின் உணர்ச்சிகள் ஏதோ திடீரென ஒடுங்கி மேற்குப் புறத்தின் ஒற்றைவழிப் பாதையிலே கவிழ்ந்தன! அவனுடைய கட்புலன் எல்லாம் ஒன்று திரண்டு அப்பாதையை நோக்கிப் படர்ந்தன.

பாங்கனும் அதே திசையையும் அதே பாதையையும் அவதானித்தான்.

அந்த வேளைதான் ஒரு மடந்தை மெல்ல மெல்ல அடிவைத்து, குறுகுறுப்பாய்ப் பனங்கருக்கு மட்டையாலான குதிரையின் உயிரற்ற தோற்றத்தையும் அதன் பக்கத்தே நிற்கும் தலைவனையும் பார்த்து வந்தாள்.

அவள், தலைவனின் உள்ளங் கவர்ந்த தலைவியின் ஆருயிர்த் தோழிதான் என்பது பாங்கனுக்கு நன்றாய்த் தெரிந்து விட்டது.

அவள் இந்த வேளை - அதிலும், அவசரமும் - நிதானமும் - விறுவிறுப்பும் கொண்டு வருவதில் ஏதோ ஒரு நற்செய்தி அடங்கி இருப்பதாகத் தலைவனும் பாங்கனும் தம்முள் முடிவுகட்டினர்.

தோழியைப் பார்த்த அதே கண்களால் தன் எதிர்ப்புறமுள்ள தலைவனைப் பாங்கன் ஒருமுறை பார்த்தான்.

அப்போது, தான் இதுவரையும் அடைந்த எல்லாத் துன்பங்களையும் தூர வீசி எறிந்தவன் போல் தலைவன் தென்போடு காணப்பட்டதல்லாமல் தன் கடைவாயில் குமிண் சிரிப்பையும் நிலைநிறுத்தி நின்றான்.

அச்சிரிப்பு, தன் ஆண்மைக்குரிய நாணத்தைத் துறக்கப்பண்ணிய காமத்தின் உழற்சியால் தானே தயார்படுத்திக் கொண்ட பனங்கருக்கு மட்டையாலான அக்குதிரையைப் பார்த்து பரிகாசப் படுத்துவதைப் போலவே இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் இன்பத்தின் நிறைவு

மஞ்சள் வெயில் மாலை!

அதே பொழில்! அதே இடம்!

மலரைத் தொடுத்த அவள் மதிமுகத்தையும், கயலை இணைத்த கருவிழியையும், முகிலைச் சுமந்த நெடுங்கூந்தலையும், பொன்னால் அணிந்த மென் உடலையும் அவன் கண்ணாரக்கண்டு களித்தான். தன் உள்ளத்தோடு இணைந்த அவள் அன்பான மொழியை அன்றுதான் கேட்டான். பவள இதழில் ஊறும் பாகுநீரைச் சுவைத்துக் கொண்டு, அவள் இதழோடு இதழாய் எண்ணற்ற முத்தங்களைப் பொழிந்தான். நெளிந்த கூந்தலில் இணைந்த கொத்து மலரோடு தன் முகத்தை மெத்தென வைத்து அவளிடத்தில் பிறக்கின்ற மணத்தையெல்லாம் முகர்ந்தான். விம்மிய இளமுலைகள் தன் நெஞ்சோடு நெஞ்சாய் அடங்கிப் புதையும்படி அவள் உடல் முழுவதையும் தன் உடலோடு உடலாய் வாரி அணைத்தான்.

***கண்டுகேட்டு உண்(டு),உயிர்த்து உற்று,அறியும் ஐம்புலனும்***
***ஒண்டொடி கண்ணே உள.***

*(குறள் - 1101)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புணர்ச்சியால் பெறும் இன்ப நலனை நினைந்து வருந்திய தலைவனுக்கு அவ்வருத்தத்தின் நோய் அவளைப் புணர்ந்தமட்டில் தீர்ந்துவிட்டது. உண்மையில் 'பிணிக்கு மருந்து அப்பிணிக்குத் தொடர்பற்ற வேறானதாகவே இருக்கின்றது. ஆனால், அணியிழையாள் இடத்து ஏற்பட்ட நோய்க்கு அவளே மருந்தாக இருக்கின்றாள்.'

*பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை*
*தன்நோய்க்குத் தானே மருந்து.* *(குறள் - 1102)*

'இந்திரனது சுவர்க்கம் இனிது இனிது என்று பலரும் கூறக் கேட்டிருக்கின்றான். அவ்வினிய தன்மை, தம்மால் விரும்பப்படுவாரது மென்மையான தோளை இடமாகக் கொண்டு துயிலும் இனிமையைவிட மேலானதாக இருக்க முடியாது.'

*தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்*
*தாமரைக் கண்ணான் உலகு.*

*(குறள் - 1103)*

இந்த முடிவு – அவன் கற்றுத் தெரிந்த தன்று; அத்தனையும் அவள் தோள் நலம் பெற்றுத் தெரிந்த முடிவாகும்!

'முதன் முறையாக அவளை அவன் கூடியபின் அவள் பிரிந்து சென்றான். அப்பிரிவு அவனுக்குச் சூடாகவே இருந்தது! மறுபடியும் அவளைக் கூடினான். அக்கூடல் அவனுக்குக் குளிராகவே இருந்தது! இவ்வாறு ஒருசேரச் சூட்டையும் குளிரையும் தன்னகத்தே பெற்ற வியப்பினும் வியப்பான தீயை இவள் எங்குதான் பெற்றாள்.

***நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்***
***தீயாண்டுப் பெற்றாள் இவள்.*** *(குறள் - 1104)*

ஒருநாளல்ல; இருநாளல்ல; பலநாட்களாகவே குறியிடத்தே வந்து தாழ்ந்த கூந்தலையுடையாள் தோளை அணைத்து மகிழ்ந்தான் தலைவன். அவளை அணைக்குந்தோறும் அணைக்குந்தோறும் அவன் உயிர்க்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்பேறியது. அமிழ்தினால், அவள் தோள் செய்யப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதே அவன் எண்ணம்.

*உறுதோ(று) உயிர்தளிர்ப்பத் தீண்டலால், பேதைக்(கு)*
*அமிழ்தின் இயன்றன, தோள்.* (குறள் - 1106)

களவிலே பிறர் அறியாமல் வந்து தலைவியின் தோளைத் தழுவிப் பெறும் புணர்ச்சி இன்பந்தான் அவனுக்குத் தெரிந்த ஒரே இன்பம்! அவ்வின்பத்துக்கு மேலாக அவளைத் திருமணம் புரிந்து – உலகோர்க்குப் பயன் அளிக்குமாறு – இல்லறத்தின் கற்பினால் பெறக்கூடிய புணர்ச்சி இன்பத்தை அறியாதவன்போல் அவன் போக்கு இருந்தது. இந் நிலையை அறிந்த தலைமகளின் ஆருயிர்த்தோழி, 'இவளைத் தனக்கு உரியவளாக வரைந்துகொண்டு – திருமணம் செய்து கொண்டு உலகோர் பயன் துய்க்குமாறு இல்லறத்தில் ஒழுகுதல் நன்று' என்று காலமும் இடமும் பார்த்து அவனிடமே சொன்னாள். மேலும் மேலும் அவன் நெஞ்சத்தில், அவ்வஞ்சியாளைத் திருமணம் புரிந்து வாழ்தலுக்குரிய உயர்ந்த எண்ணத்தை ஏற்படுத்தவே முயன்றாள்.

–'ஒத்த அன்புடையவர்க்கு இடைவிடாத தழுவல் தான் இனியது' என்றாள் தோழி.

அவள் கூறிய மொழிகள், விரைவில் தான் தலைவியை வரைந்துகொள்ள – திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்பதை அறிவுறுத்தும் குறிப்பு மொழிகள்தாம் என்பதை முற்றாக உணர்ந்தான் தலைவன். அவ்வுணர்வின் எல்லையில் நின்றுதான், 'காற்றாலும் இடையறுக்கப்படாத தழுவல்தான் ஒத்த காதலுடையார் இருவர்க்கும் இனிதாகும். மேலும், ஊடுதலும், ஊடல் தீர்தலும், பின்னே புணர்தலும் என்னும் இவை யாவும் அன்பினால் கூடினார் பெற்ற பயன்' என்றான்.

***வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை***
***போழப் படாஅ முயக்கு.*** (குறள் - 1108)

***ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்***
***கூடியார் பெற்ற பயன்.*** (குறள் - 1109)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றையெல்லாம் அவன் வாயால் கேட்டபின்னும் தோழி, மேலும் தலைமகனுக்குக் கற்பின் வாழ்வை அறிவுறுத்த என்னதான் இருக்கின்றது!

எப்படியோ களவில் பிறர் அறியாதவாறு தினமும் வந்து தலைவியுடன் கூடித் தழுவிப் புணரும் இன்பத்தில் திருப்திகரமான ஒரு நிறைவைத் தலைவன் பெறாதவனாகவே இருந்தான். அதனால்தான், அன்றும் அவன் இரவெல்லாம் அவளைத் தழுவப் பெற்றும் நிறைவு பெறாதவனாய்த் தன் மனத்துள்ளே ஒன்றைச் சொன்னான்.

–'யாதேனும் ஒன்றை அறியுந்தோறும் அறியுந்தோறும் அறியாமை தோன்றுகின்றதே! அதைப்போல இச் சேயிழையாள் இடத்துக்கொண்ட புணர்ச்சி வேட்கையும், புணருந்தோறும் தணியாது மேலோங்குகின்றதே!'

*அறிதோ(று) அறியாமை கண்டற்றால் காமம்*
*செறிதோறும் சேயிழை மாட்டு.*

*(குறள் - 1110)*

இதை அவன் சொல்வதற்கும் தலைவி குறியிடத்தைவிட்டு அகன்று மறைவதற்கும் நேரம் சரியாகவே இருந்தது.

அறிவு என்பது கற்குந்தோறும் பெருகவல்லது. ஒன்றன் உட்பொருளை அறிகின்றோம். தொடர்ந்து அறிகின்றோம். அப்படி அறியுந்தோறும் அறியுந்தோறும் கடந்த காலத்தில் நாம் அறிந்த அத்தனையும் நமக்கு அறியாமையாய்ப் படுகின்றன. சேயிழையாளைக் களவிலே வந்து புணர்ந்து இன்பந் துய்ப்பது அருமையிலும் அருமையுடையது. ஒருமுறை தலைவன் வந்து தலைமகளுடன் இன்பந்துய்த்து – மறுமுறையும் தொடர்ந்து அதேபோல் இன்பந்துய்ப்பது என்றால் எத்துணை கடினம் என்பதைச் சொல்ல வேண்டியதேயில்லை. அதிலும், அவன் எதிர்பார்த்து வருவதுபோல் அவன் நெஞ்சம் நிறைவு பெறக்கூடியதாகப் புணர்ச்சிக்கு வசதியும் வாய்ப்பும் நிகழ்வதுமில்லை. எப்படியோ ஒரு வாய்ப்பு நிகழ்ந்து விட்டால் குறுகிய காலத்தும், அதிலும் எத்தனையோ இடையீடுகளின் மத்தியிலுந்தான் புணர்ச்சி இன்பத்தை அவன் பெறமுடியும். தலைவன் எதிர்பார்க்கும் புணர்ச்சி இன்பம் இடையீடு அற்ற முழுமையான இன்பம்! அவ்வின்பம் களவுக் காலத்திலே பெறவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. திருமணமானபின் நிகழக்கூடிய கற்புக் காலத்திலேதான் அதைப் பெறமுடியும். கற்புக் காலத்தில் பெறவல்ல முழுமையான புணர்ச்சி இன்பத்தைக் களவுக் காலத்தில் பெறலாம் என்று எதிர்பார்ப்பது எத்துணை அறிவீனமான செயல்.

நூலைக் கற்குந்தோறும் முன்னே கொண்ட அறிவீனம் பளிச்சென்று தெரிவதுபோல் களவுக் காலத்தில் சேயிழையாளோடு புணருந்தோறும் புணருந்தோறும் களவிலே பெற்ற புணர்ச்சி இன்பத்தின் குறைபாடும் தலைவனுக்குத் தெரியத் தொடங்கியது.

தலைவன் தலைவியிடத்துக் களவுக் காலத்தே பெறும் புணர்ச்சி இன்பம் - குறைவுள்ள இன்பந்தான். அவ்வின்பத்தின் நிறைவை இடையீடின்றி தொடர்ந்து அவன் பெறுவது எக்காலத்தில்தானோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலம் புனைந்து உரைத்தல்

தளிர் போன்ற மேனி; முத்துக்களைப் பதித்தது போன்ற பல்வரிசையின் முறுவல்; நீலக் கடலலைபோன்ற நெடுங்கூந்தலில் இணைத்த எழிற் பூக்களின் நறியமணம்; வேல்போன்று தாக்கி – கண்டார் உயிரை உண்ணும் வேல்போன்ற கரிய கண்கள்; மூங்கில் போலும் தோள்கள்; இவையாவும் அவளின் இளமை ததும்பும் அழகைச் சொல்லிக்கொண்டே இருக்கும்.

*முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்*
*வேல்உண்கண் வேய்த்தோள் அவட்கு.*

*(குறள் - 1113)*

ஆயிரம் மலர்களை நான் பார்த்திருக்கிறேன். முன்பு பார்த்த போதெல்லாம் அவை எனக்கு மயக்கத்தைத் தரவில்லை. ஆனால், அவளை என்று என் கண்ணால் கண்டேனோ அன்றிருந்தே ஒவ்வொரு மலரைப் பார்க்குந்தோறும் அவள் மலர்க் கண்ணைப் போன்றே பெருமயக்கத்தைத் தருகின்றது. அதிலும், முதன்முதலாக அவளை நான் பார்த்தபோது நாணுற்று நிலம் பார்த்தாளே! அப்பார்வையின் நிலை இன்னும் என் மனக்கண்ணைவிட்டு அகலவில்லை. அதைப் போன்றல்லவோ குவளை மலர் யாவும் மாட்சிமைப்பட்ட இழையினை அணிந்த என் அகத்தாள் கண்ணுக்குத் தாம் ஒப்பாக இருக்குந் தன்மையற்றோம் என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிழ்ந்து நிலம் பார்க்கின்றன.

ஒருநாள் பகற்குறிக்கண்ணே* என் சிந்தைக்கினிய இவ்வேந்திழையாள் வந்துகொண்டே இருந்தாள்.

நானும் அவளையே எதிர்நோக்கிக்கொண்டேயிருந்தேன். ஆவள் வரும்போதே அவள் இடையானது துவண்டு ஒடிகின்ற தன்மை; ஆமாம், முற்றிலும் ஒடிந்து விழாத குறையில்தான் அவள் வருகை காணப்பட்டது.

ஏதோ ஒருவகை அதிர்ச்சியில் தாக்குண்டவனைப் போல் அவளையே வெறிக்கப் பார்த்து நின்றேன். என் பக்கத்தே வந்தும் விட்டாள். வந்ததும் அவள் கூந்தலில் சூடிய அனிச்ச மலர்தான் என் கண்களை ஈர்த்தது.

மலரை நன்றாகப் பார்த்தேன்! அதன் காம்புகள் ஒடிக்கப்படவில்லை! காம்புகளை ஒடிக்காமலே அனிச்ச மலரைச் சூடியதனால்தான் இடையின் நோக்காடு இத்துணையாக இருந்தது. தொடர்ந்தும் இப்படிக் காம்புகளை ஒடிக்காமலே மலரைச் சூடினாள் என்றால் – இனிமேல் இவள் இடைக்கு நல்ல பறை ஒலிக்க மாட்டாது! உண்மையில் சாப்பறைதான் ஒலிக்கும்! – என்று என்னை அறியாமலே என் நெஞ்சம் அவள் மட்டில் அனுதாபங்கொண்டு நொந்து சொன்னது.

*அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு*
*நல்ல படாஅ, பறை.*

*(குறள் - 1115)*

அனிச்சப் பூக்கள் செறிந்த சோலையில்தான் என் காதற் கன்னியாளுடன் கலந்து மகிழ்கின்றேன். பகற்குறியிலே பாகுமொழி பேசும் பைந்தமிழ்ப் பாவையாளை அணைக்கும் போதெல்லாம் அவள் தங்கமேனி எத்துணை மென்மையாக இருக்கும்! அம்மென்மை எங்கே! அனிச்ச மலரின் மென்மை எங்கே! இவ் இரண்டுக்குமுள்ள மென்மையின் இடைவெளியை நான் எண்ணியபோது அருகே நிமிர்ந்து நிற்கும் அனிச்சப்பூ என்னைப் பார்த்து நகைத்தது என்று எனக்கு நன்றாகத் தெரியும். தெரிந்தும்

* *பகற்குறி என்பது பகற்பொழுதிலே காதலர் சந்திக்கும்; கூடி மகிழும் இடம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாதவன் போல் அம்மலரைப் பார்த்து நிதான புத்தியோடு ஒன்றைச் சொன்னேன்.

–'அனிச்சப் பூவே! நீ நல்ல நீர்மை – மென்மையை உடையாய்! எம்மால் விரும்பப்பட்டவள் உன்னைவிட மென்மையள் என்பதை நீ அறியமாட்டாயா?'

யான் சொல்லியதை ஆமோதிப்பது போல் அப்பூவும் மெல்லெனத் தன் தலையை அசைத்தது.

இரவுக் குறி! –

புகற்குறியிலே அவளுடன் கலந்து மகிழ்ந்து இன்பங்காணும் நான் முதன்முதலாக அன்றுதான் இரவுக்குறியிடத்தே அவளுடன் கலந்தேன்; மகிழ்ந்தேன்!

–'அன்பே! வானத்தைப் பார்! ஏத்தனையோ விண்மீன்கள் இருக்கவேண்டிய வானில் இன்று ஒரு சில விண்மீன்கள் தாம் ஏதோ தம்முள் கலவரப்பட்டுத் திரிகின்றன; ஏன் தெரியுமா?'

–'சொல்லுங்கள் அத்தான்!'

–'வான்மதியினையும், என் உயிரோடு இணைந்த மடந்தையாகிய உன் முகத்தினையும் கண்டுதான்!...'

–'ஏன் அத்தான்!'

–'இவற்றுள் உண்மையான மதி எது? என்பதைத் தெரிந்துகொள்ள முடியாமல்தான்!'

இதை நான் சொன்ன மாத்திரத்தில் அவள் இதழில் மெல்லிய கோடு நெளிந்தது.

–'கண்ணே! முன் குறைந்து நாளுக்கு நாள் வளரும் மதியிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுவுண்டு; உன் முகத்திலே சிறு மறுகூட இல்லையே!'

-'என் முகம் அப்படித் தங்களுக்குத் தெரிகின்றது போலும்'

-'பூவாய்! நான் ஏதோ புனைந்து கூறுகிறேன் என்று நினைக்கின்றாயோ?'

-'ஐயனே! என்மீதுள்ள காதலின் நிமித்தந்தானே இப்படிக் கூறுகின்றீர்கள்!'

-'ஆமாம், ஆமாம்; அப்படி என்றால், மதியே! நீ இம் மாதர் முகம்போல் ஒளிவிடவில்லையாயின் உண்மையில் நீயும் எம்மால் காதலிக்கப்படுகின்றாய்! மேலும், இம்மலர் போன்ற கண்ணினையுடையாள் முகத்தை நீ ஒத்திருக்கின்றாயன்றோ! ஆதலால், நான் காண மாத்திரம் தோன்று; பிறர்காணத் தோன்றாதே!'

***மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்***
***காதலை வாழி மதி.***

*(குறள் - 1118)*

***மலரன்ன கண்ணாள் முகம்ஒத்தி யாயின்***
***பலர்காணத் தோன்றல் மதி.***

*(குறள் - 1119)*

-'போதும், போதும் தாங்கள் என்மீது மாத்திரந்தான் காதல் உடையவர் என்று எண்ணினேன். ஆனால், இப்போது வான் மதியிலும் உங்கள் மனம் ஈடுபடுகின்றதே! நாளடைவில் இத்தையலை மனதார மறந்து மதியைத்தான் நாடுவீர்களோ?'

-'கண்ணே! உன்னை யான் மறப்பதாவது! என் சிந்தையில் முழுவடிவம் பெற்ற வண்ணமே! இன்னும் ஒருமுறை அப்படிச் சொல்லாதே! சொன்னால் என் நெஞ்சம் கசிந்துவிடும்!'

-'அத்தான்!'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

–'அமுதமே!'

அன்று இப்படி நமக்குள்ளே நடந்த உரையாடலில் நேரம் சென்றதே தெரியவில்லை. வான்மதியும் எம் உரையாடலைக் கேட்டும் கேட்காததைப்போல் மெல்லமெல்ல மேற்கு வானின் அடித்தளத்தில் மண்டியிட்டு மறைவதற்கு இடந்தேடியது.

தலைவியோ தோழியின் அதட்டலால் குறியிடத்தைவிட்டு அகன்றாள். அவள் அகலும்போது அவளுடைய மெதுமையான அடியின் அசைவுகள் ஒவ்வொன்றிலும் அவளுடைய பெண்மை நிறைந்த மென்மையின் தேக்கத்தைக் கண்டேன்.

–'நெஞ்சே! ஆனிச்ச மலரும் அன்னத்தின் சிறகும் மென்மை உடையன என்பர். ஆனால், அவ்விரண்டின் மென்மையும் என் நெஞ்சத்தின் வஞ்சியாள் அடிக்குப் பொருத்தமாகுமா? உண்மையில் பொருந்தவே பொருந்தாது! அவைகூட அவளுக்கு நெருஞ்சி முள்ளைப் போன்றுதான் இருக்கும்.'

***அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்***
***அடிக்கு நெருஞ்சிப் பழம்.***

*(குறள் - 1120)*

இதை நான் சொல்லி முடிப்பதற்குள் அவள் என் கண்களின் பார்வையிலிருந்து அகன்று கொண்டே இருந்தாள்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதற் சிறப்பு உரைத்தல்

**ச**லசலவென்று ஓடும் தெள்ளிய நீரோடையருகே பசுமையான புற்றரையில் – பைந்தமிழ்த் தலைவனின் அகலாத அரவணைப்பில் புதையுண்டு கிடந்தாள் அப்பூவை. எங்கும் இருள் கௌவும் நள்ளிரவில் – அந்நங்கையின் பளிங்கு வதனத்தில் அவன் முகப்பரப்பு நன்றாகப் பதிந்தது. ஒளிவிடும் அவள் பற்களின் ஊடே ஊறும் அமுத நீர் வற்றுமாறு – அவள் செவ்விதழ்களை ஆயிரந் தடவைகள் முத்தமிட்டான்.

அவள் கொடி என்றால், அவன் கொம்பு! அவள் நிலவென்றால், அவன் ஒளி! அவள் மலர் என்றால், அவன் மணம்! உடலுக்கும் உயிருக்கும் எவ்விதமான தொடர்பு இருக்கின்றதோ, அவ்விதமான இணைப்புத்தான் அவனும் அவளும்.

அவனில்லாது அவளில்லை! அவளில்லாது அவன் இல்லை!

–'என் அன்பே! காலமெல்லாம் உன்னைவிட்டு அகலாத வாழ்க்கையன்றோ இன்பமான வாழ்க்கை!'

–'அத்தான்! வானத்தின் நித்தில மணிகள் எறிக்கும் இந் நள்ளிரவு நீண்ட இரவாக இருக்கக் கூடாதா?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

–'கண்ணே! உன் நெஞ்சம் போல் அவ்விரவின் இன்பநாள் கனியத்தான் போகின்றது.'

–'கண்ணாளா! அந்தக் கனிகின்ற நாள்தானே இந்தப் பனிமலர்ப் பாவைக்கு இனிதான நன்நாள்!'

–'மங்காய்! அப் பொங்கிவரும் நாளின் புனிதத்தன்மை வற்றாமல் இருப்பதற்குத்தான் வழியொன்றைத் தேட முயல்கின்றேன்!'

–'ஐயனே! தாங்கள் முயல்வது எந்த வழியோ?'

–'பொருள் தேடும் வழிதான்.'

–'பொருளா?! அதைத் தேடுவதா?!'

–'ஆமாம் அதைத் தேடுவதென்றால் உன்னைப் பிரிந்துதான் தேடவேண்டும்!'

பிரிவென்ற சொல்லையே கேட்டறியாத தலைவி, தன் தலைவன் வாயால் பிரிவென்னும் சொல் வந்ததுதான் தெரியும், உடனே பேர் அதிர்ச்சியால் தாக்குண்டவளைப்போல் திகைப்புற்றாள். திகைத்தாலும் ஒருவாறு தன் நிலைமையைச் சமாளித்துக்கொண்டு மீண்டும் பேச்சைத் தொடங்கினாள்.

–'அத்தான்! தாங்கள் பிரிந்து வாழவேண்டுமா? ஒரு நாள் இரவுக் குறியிற்தன்னும் தங்கள் வருகை பொய்த்துவிட்டாலே, இப்பூவை அடையும் துன்பத்துக்கு எல்லையுண்டோ!'

–'அன்பே! உன்னைப் பிரிந்து நான் மாத்திரம் இன்பமாக வாழமுடியுமா! என் ஆருயிரே! உண்மையைக் கூறுகின்றேன்! உன்னை அகலாமல் இருக்கும்போதுதான் உயிர் வாழ்கின்றேன்! அல்லாமல் பிரிந்தவிடத்து, சதா சாகின்றேன்! சதா சாகின்றேன்!'

***வாழ்தல் உயிர்க்குஅன்னள் ஆயிழை சாதல்***
***அதற்குஅன்னள் நீங்கும் இடத்து.*** *(குறள் - 1124)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கேட்டதும் இதுவரை உணர்ச்சிவசப்பட்ட தலைவி உணர்வின் வழிப்பட்டாள்.

–'அத்தான்! எல்லாவற்றையும் உணர்கின்றேன்...'

இதற்குமேல் அவளால் ஒன்றும் பேச முடியவில்லை.

–'தேனே பொறுத்திரு! ஆறே ஆறு தினங்களில் திரும்பி விடுவேன் மானே!'

–'அத்தான்!'

–'அமுதமே!'

–'அத்தான்!'

–'ஆருயிரே!'

–'என் உள்ளக் கோவிலின் மெய்யனே! இப்பேதையின் உயிர் உங்களுடையது!' – என்று சொல்லிக்கொண்டே அவன் கரத்தைத் தன் மார்போடு அணைத்துக்கொண்டாள் தலைவி.

–'என் செல்வமே! நேரமாகின்றது, வரட்டுமா?' என்று தலைவன் விடை கேட்டபோதுதான் அவள் கிழக்கு வானைப் பார்த்தாள்.

வானத்தின் கிழக்குப்புற அடியிலே மெல்லிய வெளிப்புக் கோடுகள் தெரியத் தொடங்கின. நெய்யற்ற தீபங்களைப்போல் நட்சத்திரங்கள் மங்கி மறையத் தொடங்கின.

காதலர் குறியிடத்தைவிட்டு ஒருவரை ஒருவர் பிரியத் தொடங்கினர்.

எப்படியோ நாளும் பொழுதும் கழிந்து திங்கள் ஆறாகிவிட்டன. இவ்வளவு காலமும் தலைமகனின் பிரிவு தலைமகளுக்குச் சொல்லொண்ணாத் துயரத்தையே அளித்தது. அத்துயரத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பாட்டை ஓரளவு மறைக்கவே முயன்றாள். பொருள் ஈட்டும் பொருட்டுப் பிரிந்த அவனுடைய பிரிவை ஆற்றியிருப்பது தன் கடமையுள் ஒன்றுதானே என்பதை உணர்ந்தாள். எப்படியோ தன் துயரத்தின் உள்ளீட்டை வெளியிற் காட்டிக்கொள்ளாதவாறு நடந்தாள். ஒரு நாள் வீட்டில் யாருமே இல்லாத சமயம் பார்த்துத் தோழியும் வந்தாள். அவள் ஏதோ குத்தலாக ஒன்றைச் சொல்லவேண்டும் என்ற நிலையோடுதான் வந்தாள். அந்நிலை என்ன என்பது தலைவிக்குத் தெரியாமலன்று. ஏதோ தான் வருந்துவதாகவும், வருத்தத்துக்குத் தலைவனின் பிரிவுதான் காரணம் என்றும், அவ்வருத்தத்தின் கொடுமையை அவனே அளித்தவனென்றும், இப்பழி எல்லாவற்றையும் தலைவன் மேலே போட்டு அவன் இயல்பைப் பழித்து உரைக்கத்தான் தோழி வந்தாள் என்பது அவளுக்கு நன்றாகத் தெரிந்ததுதான்.

தோழி வந்ததும் வராததுமாய் முதலில் பேச்சைத் தொடங்கினாள்.

–'தலைவி! எதையோ பறிகொடுத்தவள்போல் வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டு நிற்கின்றாயே! உன் சஞ்சலம் எனக்குத் தெரியாமலன்று. இதற்கெல்லாம் உன் தலைவர்தான் காரணம். எப்படியாயினும் இப்படி உன்னைச் சஞ்சலப்படுத்தும் விதமாகத் தலைவர் அறிவில்லாதவர்போல் பொருளில் மயங்கி பிரிந்திருக்கவே கூடாது!'

–'தோழி! வெறிக்க வெறிக்க எதையோ பார்க்கிறேன் என்கிறாயே! நான் எதைப் பார்க்கணும் – எவரைப் பார்க்கணும்?! யான் இவ்வுலகத்தில் பார்ப்பது என் உள்ளக் கோவிலில் குடிகொண்ட தலைமகனின் உருவத்தைத் தவிர வேறு எதுவாக இருக்கமுடியும்! 'எம்முடைய காதலர் எம் கண்ணகத்துள் நின்றும் போகாதவராய் என்னுள்ளே இருக்கும்போது யான் ஏன் துன்பப்பட வேண்டும்! அதிலும், நாம் அறியாது இமைத்தோமாயினும் அதனால் வருந்துவதும் செய்யாரடி. அப்படிப்பட்ட நுண்ணியரான – அறிவுள்ள – என் கண்ணகத்துள்ள தலைவரை* அறிவில்லாதவர் என்கின்றாயே!'

–'சரி சரி, நீ உன் கண்ணுக்கு அஞ்சனம் தீட்டாததன் காரணம் இப்போதுதான் புரிகின்றது.'

* *குறள் - 1126*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

–'ஆமாம்; ஆமாம். எம் காதலர் என் கண்ணினுள்தான் இருக்கின்றாரடி! ஆதனால்தான் நாமும் எம் கண்ணுக்கு அஞ்சனத்தை எழுதாமல் இருக்கின்றோம். ஏனென்றால், அப்படி எழுதும்போது தீட்டும்போது எம் நாயகரைச் சற்று நேரம் காணாமல் இருக்க நேருமே என்பதற்காகத்தான்.'

***கண்ணுள்ளார் காதல் அவராகக் கண்ணும்***
***எழுதேம் கரப்பாக்கு அறிந்து.***

*(குறள் - 1127)*

அப்போதுதான் தலைவிக்காப் பாகோடு கலந்து நன்றாய்க் காய்ச்சிய பால் ஒரு குவளையில் இருப்பதை தோழி அவதானித்தாள்.

–'தலைவி, இதோ பாகோடு கலந்த பால்! இதைக்கூட இதுவரையும் அருந்தாமல் இருக்கின்றாயே!'

–'எம்மால் காதலிக்கப்பட்டவர் எம் நெஞ்சத்துள் இருக்கின்றாரடி! அதனாற்தான் காய்ச்சிய சுட்ட பாலையும் அருந்துதற்கு அஞ்சுகின்றேன்!'

***நெஞ்சத்தார் காதல் அவராக வெய்துஉண்டல்***
***அஞ்சுதும் வேபாக்கு அறிந்து.***

*(குறள் - 1128)*

–'தலைவி! உன் காதல் நெஞ்சத்துக்கு என் ஆயிரம் வாழ்த்துக்கள்! – ஆனால் ஊணற்று – உறக்கமற்று – இப்படி நீ தவக்கோலம் பூண்டால் ஊர் என்ன சொல்லும்!'

'ஊரைப்பற்றி எனக்குக் கவலை இல்லையடி! ஊரோ பலதைச் சொல்லும்; பத்தைச் சொல்லும். கண்ணிமைத்து யான் உறங்கினால் என் நாயகர் என் கண்ணகத்தை விட்டு மறைந்துவிடுவார் என்று அஞ்சுகிறேன்! இதே வேளை இவள் நித்திரை கொண்டாளில்லை; இப்படி இவள் நித்திரையற்று வாழ்வதற்கு அவர்தான் காரணம். உண்மையில் அவர் அன்புள்ளவர் என்றால், இப்படிப்பட்ட ஒரு துன்ப நிலையை இவளுக்கு விட்டு வைக்கவே மாட்டார். இவள்பால் ஏதிலார் அயலார் –


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பிலார் என்பதினால்தானே இந்நிலைக்கு இவளை ஆளாக்கினார் என்றெல்லாம் ஊரே வாய்க்கு வந்தபடி பேசுகின்றது. மேலும், எம் நெஞ்சத்தோடு நெஞ்சமாய் மகிழ்ந்து உறைகின்ற நம் தலைவரின் அன்பு நிலையை அறிந்து கொள்ளாமல் – புரிந்துகொள்ளாமல் – அவரை, ஏதிலராய் நீங்கி உறைகின்றார் என்று அவர்மேலேயே இந்த ஊர் பழி போடுகின்றதே!'

***இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே***
***ஏதிலர் என்னும்இவ் வூர்.*** *(குறள் - 1129)*

***உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்***
***ஏதிலார் என்னும்இவ் வூர்.*** *(குறள் - 1130)*

காதல் தூய்மையானது; தெய்வீகமானது. அதன் தூய்மையையும், தெய்வீகத்தையும் புரிந்து கொள்ளாத உலகம் – அதைப் பித்தலாட்டத்துக்கு உள்ளாக்கி வேடிக்கை பார்க்கின்றது. வேடிக்கை பார்ப்பதற்குக் காதல் ஏளனமானதன்று. பொய்மையானதுமன்று.

மெய்மை நிறைந்ததுதான் காதல்!

அவள் நெஞ்சகத்தே உள்ள தலைவனை, அவள்தானே அறிய முடியும்! பிறர் கண்ணுக்குத் தலைவன் ஏதிலான் – அன்பில்லாதவன் போலத் தோன்றலாம். ஆனால், அவள்மட்டிலே அவன் அன்பின் முழுமையான சொரூபமாகத்தானே விளங்குகின்றான்.

உள்ளம் என்பதுதான் கோவில். அக் கோவிலில் எழுந்து முழுமையோடு இருப்பவன்தான் இறைவன்.

அவள் உள்ளம் என்னும் கோவிலிலே அவனோ இறைத்தன்மையோடு முழு உருவம் பெற்று அவளுக்கு என்றும் மகிழ்ச்சி அளிக்கக் கூடியவனாகவே இருக்கின்றான். அம்மகிழ்ச்சிப் பெருக்கை – அதன் தகுதிப் பாட்டை – இன்னது என்று அறிந்துகொள்ள முடியாத ஊரை நினைத்துப் பெருமூச்செறிவதைவிட, அவ்வூரின் அறியாமையையிட்டு அவளால் என்னதான் செய்யமுடியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறை நிலா

**வா**ய்க்கு அவல் கிடைத்த மாதிரி ஊரிலே உள்ள முதுவாய்ப் பெண்டிர்க்கு அவனும் அவளும் கிடைத்து விட்டனர் போலும். ஊர் அகத்தே உள்ள ஆற்றின் நீராடுதுறை, பொதுமரக்காவின் மூலைமுடுக்குகள் எங்கும் தலைவன் தலைவி இருவரும் கொண்ட காதல் உறவு பற்றிய அம்பலும் அலரும் எழுந்தன.* இதனால் அப் பூங்கொடிக்கோ வீட்டிலே அதிக காவல். அத்துடன் அவள் தாயோ அவள் கொண்ட களவொழுக்கம் பற்றிய கடிந்துரைகளைப் பொரிந்து கொண்டே இருந்தாள். ஊரகத்தே அலர் எழுந்தாலும், வீட்டிலே காவல் மிகுந்தாலும், தாயின் ஏச்சுப் பொரிந்தாலும், அவள் அவனை மறந்தோ – அவன் அவளை மறந்தோ – வாழப் போவதில்லை. காதலர் இருவரும் ஒருவரையொருவர் இரவுக்குறியிடத்தே களவிற் சந்தித்து அநேக நாட்களாகிவிட்டன. அவன் வரவை எதிர்நோக்கிய எத்தனையோ இரவுகளில் அல்ல குறிப் பாட்டால் குறி பொய்த்தவிடத்து அவனைக்

---

* *அம்பலும் அலரும் களவுவெளிப் படுத்தலின்*
*அங்கதன் முதல்வன் கிழவ னாகும்.* (தொல்.பொருள் - 137)

*அம்பல் என்பது முகிழ்த்தல். அதாவது தலைமக்களின் களவாகிய காதல் ஒழுக்கம் பற்றி ஒருவரை ஒருவர் முகக் குறிப்பாற் காட்டி பிறர் அறியுமாறு வெளிப்படுத்தல். அலராவது சொல்லுதல். அதாவது தலைமக்களின் களவொழுக்கம் பற்றி ஊரகத்துள்ளோர் யாவரும் அறிந்து கொள்ளுமாறு ஒருவரை ஒருவர் கூடிப் பேசுதல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணும் பேற்றை அப்பேதையாள் இழந்து பேதுற்றுத் தவித்தாள்.

இன்றும் அவள் எதிர்நோக்கும் அதே நள்ளிரவு வந்துவிட்டது!

கட்டிலில் கிடந்தவாறே, மங்கலாய் எரிந்து கொண்டு இருக்கும் சுடர் விளக்கில் சுற்றுப்புறம் யாவையும் நோட்டம் விட்டுப் பார்த்தாள் தலைவி.

சிறிது நேரத்தின்பின் வீட்டின் பின்புறத்தே உள்ள மரத்தின் கிளையில் வாழும் அன்னப்பறவை சிறகடித்து எழுகின்ற அரவம்! - அந்த அரவம் தலைவன் எழுப்பும் அரவமா? அல்லது வேறு யாதேனும் காரணத்தால் பறவைகள் தாமாகவே எழுப்பும் அரவமா? இப்படித் தினமும் அரவத்தைக் கேட்பதும்; எழுந்து சென்று பார்க்குமிடத்து அங்கு தலைவன் இல்லாமை கண்டு ஏமாற்றம் நிறைந்த கவலையோடு மீண்டும் வந்து கட்டிலில் புரள்வதும்,* பின்பு உண்மையிலேயே தலைவன் வந்து பறவையின் வாயிலாக அரவத்தை எழுப்பும்போது அது அவன் எழுப்பும் அரவமல்ல என்று பிழைபாடாய் நினைத்து வெளியில் வராதிருப்பதும்; மறுநாட் பகற்பொழுதில் குறியிடத்தே சென்று பார்க்கும்போது முன் இரவிலே தலைவன் வந்து சென்ற அடையாளங்களைக் கண்டு மனம் வருந்தி அழிவதும்; இப்படிப் பல நாட்கள் கழிந்தன என்றாலும், இன்றும் அதே மாதிரியான ஏமாற்றம் தலைவனுக்கு ஏற்படாது இருக்க வேண்டும் என்ற நிதான புத்தியோடு மீண்டும் அதே அரவத்தை உன்னிப்பாகக் கேட்டாள் தலைவி.

அது தலைவன் எழுப்பும் அரவந்தான் என்பது அவளுக்கு நன்றாகத் தெரிந்தது. உடனே நேரம் தாழ்த்தாது பக்கத்துக் கட்டிலில் நித்திரையின் பிடியில் மிதந்து கொண்டு கிடந்த தோழியை எழுப்பி, அவளையும் உடன் கொண்டு குறியிடத்தே சென்றாள்.

இருவரும் வருவதைக் கண்ட தலைவன் அடர்ந்த மருதமரத்தின் பின்னாடி மறைந்தான். அவன் நின்றதையும், தாம் வருவது கண்டு மறைவதையும், தலைவி தோழி இருவரும் வரும்போதே பார்த்துவிட்டனர்.

* *அல்லகுறிப் படுதலும் அவள்வயின் உரித்தே*
*அவன்குறி மயங்கிய அமைவொடு வரினே.* *(தொல்.பொருள் - 131)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தாலும் தாம் பார்த்ததாகக் காட்டிக் கொள்ளாது சுற்றும்முற்றும் தலைவனைப் பார்ப்பதுபோல் பார்த்து, அவன் மறைந்து நின்ற மருதமரத்தின் அருகிலேயே ஏமாற்றம் அடைந்த பேதைமையைக் காட்டி, மேல்மூச்சு வாங்க அவ்விடத்தே இருவரும் அமர்ந்தனர்.

–'தலைவி, இன்னும் நமக்கு ஏமாற்றந்தானா?'

–'இல்லையடி! எப்படியும் இன்று அவர் வரத்தானடி செய்வார். அவரைக் காணப்பெறாது அநேக நாட்கள் வீணே கழிந்துவிட்டன. யான் அவரைக் கண்ணுறப் பெற்று மகிழ்ந்தது ஒருநாட் பொழுதுதானே! அப்படி இருந்தும் அதனாலாய அலரோ திங்களைப் பாம்பு கொண்டது (சந்திர கிரகணம்) போல் உலகெங்கும் பரந்து அம்பலமாகி விட்டதடி!'

***கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்***
***திங்களைப் பாம்புகொண் டற்று.*** *(குறள்- 1146)*

–'ஆமாம், ஆமாம்; அது எல்லோர்க்குந் தெரிந்ததுதானே!'

–'அதிலும், யான் தலைவருடன் கொண்ட காம நோயாகிய பயிர் என் மட்டில் நன்றாக வளர்வதையும், அவ் வளர்ச்சிக்கு இந்த ஊரார் என்னைப் பற்றியும், என் தலைவரைப் பற்றியும் எடுத்து மொழியும் அலர் எருவாகவும், அதனைக் கேள்வியுற்ற என் அன்னை என்னைப் பார்த்தும் பாராமலும் கடிந்து ஏசுஞ் சொல் நீராகவும் அமைந்திருப்பதை இந்த ஊரார் அறிவாரோ? என் அன்னைதான் உணர்வாளோ? மேலும், இந்தப் பாழும் ஊரவர் அலரினால் எப்படியும் எம் காதலை அவிப்போம் இல்லாது ஒழிப்போம் என்று பகற்கனவு காண்கின்றனர். அப்படிக் காண்பது நெய்யினால் நெருப்பை அவிப்போம் – நூர்ப்போம் என்பது போல்தான் முடியும்!'

***ஊரவர் கௌவை எருவாக, அன்னைசொல்***
***நீராக நீளும்இந் நோய்.*** *(குறள் - 1147)*

***நெய்யால் எரிநுதிப்பேம் என்றற்றால் கௌவையால்***
***காமம் நுதிப்பேம் எனல்.*** *(குறள் - 1148)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

–'தலைவி! அலரினால் நீ படுந்துயரை யான் அறிகின்றேன்! உணர்கின்றேன்! இதுபற்றி நம் தலைவர் அறிவாரோடி? உணர்வாரோடி? யாதேனும் ஒரு கவலையும் அற்றவர்போல் வரைவிடை வைத்துப் பொருள் தேடும்* பொருட்டு உன்னைச் சில காலம் பிரிந்தாரே! திரும்பியும் வினை முடித்து வந்தாரே! வந்ததிலிருந்து உன்னை வரைந்து இல்லறம் நடத்துதல் பற்றிச் சிறு எண்ணத்தையேனும் இதுநாள் வரையும் வெளிப்படுத்தினாரா? அவருக்கென்ன! அவரோ ஆண்பிள்ளை. எப்படி இருப்பினும் நாம் பெண்குலத்தார்தானே! களவொழுக்கத்தால் எழும் அலரால் நமக்கென்றே பல துன்பங்கள் வரத்தான் செய்யும். ஆதற்கு நீ அஞ்சுவதா?'

தலைவி சொன்னதும்; அதற்கு மறு கூற்றாகத் தோழி சொன்னதும்; எல்லாமே தலைவனின் மென்மையான நெஞ்சத்தை நெருடியது. ஆயினும் தலைவி மீண்டும் தொடர்ந்து சொல்லப்போகும் தன்மை என்னவாக இருக்குமோ என்பதில்தான் அவனது எண்ணம் சுழலத் தொடங்கியது.

–'என் அருமைத் தோழி! அஞ்சுவது என்கின்றாயே! நானா அஞ்சுகின்றேன்! அதிலும் முதன்முதல் என்னை ஆரத்தழுவியபோது, 'உன்னை ஒரு கணமேனும் பிரியமாட்டேன். அஞ்சாதே' என்றார். அப்படிக் கூறியவரே இன்று கண்டார் பலரும் நாணும்படி நம்மைக் கைவிட்டு நீங்கியவிடத்து ஏதிலார் – அயலார் கூறும் அலருக்கு நாம் எப்படித்தான் அஞ்சி இருக்க முடியும்!'

–'பெண்ணிற் பெருந்தகையளே! உன் நெஞ்சின் உறுதிப்பாட்டை நான் வாழ்த்தாமல் இருக்க முடியுமா? எத்துணை அம்பலும் அலரும் தலைஎடுத்த போதிலும், உன் நெஞ்சத்தின் தளராமையைக் கண்டு நான் மாத்திரமென்ன – உன் தலைவரே இதை அறிந்தால் பெருமைப்படத்தானே செய்வார். முன்னம் ஒருகால் இரவோடு இரவாக எம் பெற்றோர், சுற்றம், இல்லம் ஊர் அத்தனையையும் துறந்து, தலைவருடன் உடன் போவதற்குக் காரணம் எதையேனும் ஆவலோடு எதிர்நோக்கி இருந்தோம் அல்லவா! அக் காரணம் – இன்று நம் பொருட்டு

* *வரைவு என்பது திருமணம். திருமணத்தை ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிற்போட்டு பொருள்தேடும் பொருட்டுத் தலைவன் தலைவியை விட்டுப் பிரிவான். இதைத்தான் பழைய இலக்கண நூலார் 'வரைவிடை வைத்துப் பொள்வயிற் பிரிதல்' என வகுத்தனர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்துள்ள அம்பலும் அலருந்தானே! உண்மையாகப் பிறர் நம்மைப் பார்த்துக் குத்தலாகக் கூறும் மொழிகளைத்தாமே எதிர்நோக்கினோம்! நாம் ஆவலோடு தலைவருடன் உடன் போவதற்கு ஏதுவான அக்குத்தல் மொழியான அலரைத்தானே இன்று இவ்வூர் எடுத்திருக்கின்றது! நாம் எதிர்பார்த்தலை அவரிடம் வேண்டினால், அவரே அதனைச் செய்ய ஆவலோடு முன் வருவார் அல்லவா!' இனிமேல் யாம் அலரையிட்டு அஞ்சவும் வேண்டியதில்லை. அதை வெறுக்க வேண்டியதுமில்லை. ஏனென்றால், இந்த அலர் தக்க தருணம் பார்த்து நமக்கென - நாம் தலைவருடன் உடன்போய் இன்பகரமான நல்வாழ்வை அமைப்பதற்கென - நன்றாய் வந்திருக்கின்றதன்றோ!'

***தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்***
***கௌவை எடுக்கும்இவ் வூர்***

*(குறள் - 1150)*

இதற்குமேல் இருவரும் பேசுதற்கு என்னதான் இருக்கின்றது! தலைவனுக்கு எதை எதை அறிவுறுத்த வேண்டுமென்று இருவரும் எண்ணி வந்தனரோ, அதை ஆணித்தரமாகச் சொல்லிவிட்டனர்.

தலைவியும் தோழியும் காணாதவாறு சிறைப்புறத்தானாக மறைந்து இருந்த தலைவன் வெளிப்புறத்தானாகத் தோன்றினான். உடனே குறிப்பறிந்து தோழியும் அவ்விடத்தே விட்டு நீங்கினாள்.

-'அன்பே! உனக்கு அதிகமான சஞ்சலத்தைத் தந்துவிட்டேன்; அப்படித்தானே!

-'அப்படிச் சொல்லாதீர்கள் அத்தான்! நீங்களாவது எனக்குச் சஞ்சலத்தைத் தருவதாவது!'

-'நீ அப்படிச் சொல்லாமல் இருக்கலாம். ஆனால், என் நெஞ்சம் உனக்கு அதிக சஞ்சலத்தை - தாங்கொணாத துன்பத்தைத் தருவதாகவே சொல்லிக் கொண்டு இருக்கின்றது. ஊர் அலர் எடுப்பதும், உன் அன்னை ஏசுவதும் இனி வேண்டாம்! வேண்டவே வேண்டாம்! இத் திங்கள் முடிவதற்குள்ளாகவே உன்னைக் கடிமணம் - திருமணம் புரிந்து,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறத்தைத் தொடங்குதற்கு முனைந்துள்ளேன். அதைச் சொல்வதற்காகத்தான் பல இரவுகள் வந்தேன்!' என்று தன் நெஞ்சம் முழுவதையும் திறந்து சொன்னான் அவளுக்கு. அவளோ கவிழ்ந்த முகத்தோடு தன் தலைவன் நெஞ்சம் புண்படுமாறு ஒன்று இரண்டைக் கூடுதலாகப் பேசிவிட்டோமே என்றுதான் மனம் வருந்தி நின்றாள்.

தலைவன் அவளுடைய இருகரங்களையும் இலாவகமாகப்பற்றி 'வருகிறேன் அன்பே! இனிமேல் மனக் கவலை வேண்டாம்!' — என்று சொல்லி அவளை விட்டு அகன்றான்.

அப்போது பின் நிலவு குறை நிலாவாக முகிலாடைக்குள் முக்காடிட்டு, வானில் தண்ணொளியோடு பிரகாசித்துக்கொண்டே இருந்தது.

தலைவனோ அவளுடைய அகலாத பார்வையில் இருந்து வெகுதூரம் மறைந்தான். அவனது மறைவில் குறைநிலாவையே அழுத்தமாகப் பார்த்து நெஞ்சம் பொருமினாள் தலைவி.

இன்று இந்நள்ளிரவில் ஒளிவிடும் குறைநிலா பிறை நிலாவாக இருந்தால் நாளைக்கே அவள் திருமணம் நிறைவேறுமல்லவா!

உண்மையில் அதையிட்டுத்தான் அவள் நெஞ்சம் பொருமினாளோ?!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் பாகம்

# கற்பியல்



'கற்பியல்' என்பது திருமண வாழ்வைக் குறிப்பது. அதாவது, தலைவன் தலைவி இருவரும் திருமணம் புரிந்து இல்லற வாழ்வை ஆரம்பிப்பதாம். இப்பகுதியில் இவர்கள் இருவருக்கிடையே ஏற்படக்கூடிய இன்ப துன்ப இயல்புகளும், ஊடலும், கூடலும் முதலியன அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமும் பிரிவும்

**ஆ**னித் திங்கள் ஆறாம் நாள்! -

முழுநிலாப் புதன் நாளில் - முத்தமிழ்த் துறைவனுக்கும், அவன் சிந்தைக்கினிய செந்தமிழ்ச் சேயிழைக்கும் நெய்தல் நிலத்தார் நெஞ்சங் குளிரத் திருமணம் நடந்தேறியது.

யாழிலே பிறக்கும் பாணரின் இசையமுது வெள்ளம் கரைகாண முடியாத நீலக் கடலோடு இரண்டறக் கலந்து அடங்கின. கரையின் உயர்ந்த வெண்மணற் குன்றுகள் தோறும் அடப்பம் பூவை மாலையாகக் கோத்து அணிந்த விறலியரின் ஆடலும் பாடலும் ஓய்ந்தன. எடுபிடியாய் ஆரவாரத்தோடு நின்ற உற்றவரும் சுற்றவரும் அவரவர் மனை நோக்கி சென்றும் விட்டனர்.

முன்னிரவு கழிந்து நள்ளிரவு மலர்ந்தது!

காற்றில் அசைந்தாடும் கண்டல் மரத்தின் உயர்ந்த கிளைகளுக்கிடையே கவின் நிலாக் கோடுகள் பலவிதமான கோலங்களைப் போட்டு அமுத ஒளியைப் பரப்பிக் கொண்டே வானில் தனி ஆட்சி செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளம்பூவின் இதழ்களும் முண்டகப் பூவின் தளிர்களும் பரவிய பசுஞ்சோலையின் நடுவே அமைந்த உயர்ந்த மனையிலே காதலர் இருவரும் ஒருவரையொருவர் தழுவி இன்ப வெள்ளத்தில் மிதந்தனர். நெய்தற் பூக்கள் சூடிய அவள் கார்குழலை முகர்ந்தவாறு வாழைக் குருத்துப் போன்ற அவள் தோள்களைத் தன் நெஞ்சோடு நெஞ்சாய் அணைத்தவாறு – 'அன்பே!' என்று கூறி அவளுடைய பவள இதழ்களை இதுவரையும் அவன் எத்தனை விசை முத்தமிட்டுச் சுவைத்தானோ தெரியவில்லை.

–'அன்பே! முழுவெண் திங்களில் பிறவாத மாசற்ற ஒளியை உன்பால் வதனத்தில் பார்க்கின்றேன். உந்தன் ஒளி இருக்க – இந்தமனைக்கு வேறு எந்த ஒளிதான் வேண்டும்! கயலிலே பிறந்த உன் கருமையான நீண்ட விழிதானே என் நெஞ்சத்தை அன்று கௌவியது. எம் பாண்டி நாட்டின் முத்துக்கு ஆயிரம் பொன் என்றால் – உன் பல்வரிசைக்கு எத்தனை ஆயிரம் பொன்னாகும் என்பதை நம் தமிழ்ப் புலவர் அறிவாரோ?'

–'அத்தான்! தாங்கள் உண்மையிலேயே தண் தமிழ்ப் புலவராய்ப் பிறந்திருக்க வேண்டியவர்.'

–'மறுபிறப்பில் அந்தப் பாக்கியம் எனக்குக் கிடைத்தால் என் காவியத்தின் தலைவியும் நீதானே!'

–'கண்ணவரே! என் மனம் கவர்ந்த காதல் மன்னவரே! மறு பிறப்பென்ன – நம்மை எழுபிறப்பிலுமே பிரிக்கமுடியாது!'

–'அன்பே!'

–'அத்தான்!'

இதற்குமேல் காதலரிடையே எவ்வித பேச்சும் எழவேயில்லை. அவள் செவ்விதழ்களைச் சுவைத்தவாறு அவள் தளிர்மேனி முழுவதையும் தன் உடலுக்குள் புதையுண்டு மறையும்படி வாரி அணைத்துக் கொண்டான் தலைவன். அவள் நெடுங்கூந்தலில் சூடப்பட்ட நெய்தல் மலர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொன்றும் கட்டுக் குலைந்து உதிரத் தொடங்கின. முழுவெண்திங்கள் மனையின் மேற்குப் புறமுள்ள புன்னை மரத்தின் கீழ்க் கிளைக்குள் மறைந்து கொண்டே இருந்தது.

புதுக்குடித்தனம் நடத்தும் காதலர் பொழுதெல்லாம் இன்பங்கண்டு மூன்று திங்கள் ஆகிவிட்டன. அதற்குள்ளாகத் தலைவன் பிரிந்து வாழவேண்டியநிலை தலைகாட்டத் தொடங்கியது. முடியுடை வேந்தன் பாண்டியன் ஆணைக்கிணங்கி அன்புத் தமிழ்த் துறைவன் அழகுநிலா மங்கையை விட்டுப் பிரிந்து பகைவினை முடித்து வர வேண்டுமாம்! இதை அவன் தன் இல்லக் கிழத்திக்கு இன்னும் சொல்லாமலே இருந்தான். சொன்னால் துயருற்றுத் துடிதுடித்துப் புலம்பிச் சோர்ந்துவிடுவாளே என்ற தயக்கந்தான் இதுவரையும் அவளிடம் அவன் சொல்லாததற்குக் காரணமாய் இருக்கவேண்டும். தன் நிலையைத் தோழிக்குத் தெரிவித்தால் அவள் மூலமாகத் தலைவியின் துன்ப நிலையை ஒருவாறு சமாளிக்கலாம் என்று எண்ணி முழு விபரத்தையும் அவளுக்கே நேரில் தெரிவித்து விடலாம் என்றுதான் இருந்தான்.

அவ்விதம் எண்ணி இருக்கும் போதுதான் ஒருநாள் காலைப் பொழுதிலேயே அவசர அவசரமாகத் தலைவன் வேந்தன் அரண்மனைக்குச் செல்லும் நேரம் பார்த்துத் தோழியும் வந்தாள்.

தலைவன் சென்றதும், அவன் மேற்கொள்ளப் போகும் தவிர்க்கமுடியாத வினையையும், வினை முடிப்பதற்குச் சில காலம் வேற்றூர்க்குச் சென்று தனித்துத் தங்கவேண்டிய அவனது நிலையையும் ஒன்றும் விடாமல் தோழி தலைவிக்கு எடுத்துரைத்தாள்.

தலைவியோ எதுவித இயக்கமும் அற்றவளாய் ஏதோ ஒருவித தாக்கத்தால் அடிபட்டவளைப்போல் சற்று நேரமாக அசைவற்று நின்றாள்.

–'என்னடி சொன்னாய்! தலைவர் என்னைவிட்டுப் பிரிந்து வாழ்வதா? ஆமாம், ஆமாம் ஒரு சில நாட்களாக அவருடைய போக்கைத்தான் பார்க்கின்றேனே! முன்னம் அவர் என்னைப் பார்க்கின்ற போதெல்லாம் அவருடைய பார்வையில் இன்பத்தின் ஒளிதான் இலங்கும். ஆனால், இன்றோ அவருடைய பார்வையில் ஒருவித துன்பத்தின் சாயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியத்தான் செய்கின்றது. அறிவுடையவரிடத்தும் பிரிவு ஒரு காலத்தில் உள்ளபடியால் உன்னைவிட்டுப் 'பிரியேன்! பிரியேன்!' என்று ஆயிரந்தடவைகள் என்னிடம் ஏன்தான் சொன்னாரோ! சொல்லிய அந்த உறுதி யாவும் வெறும் வாயளவில்தானா! அதுமட்டுமா! ஏனோ என் மனம் அவருடைய போக்கினைக் கண்டு அவர் என்றோ ஒருநாள் என்னைப் பிரிந்து வாழக்கூடும் என்று பல முறை தானாகவே சொல்லியதுமுண்டு. அப்பொழுதெல்லாம் என்னை அறியாமலே ஓர் ஆழ்ந்த சஞ்சலத்தின் தாக்குதல் என்னைத் தாக்கி வருத்துமடி! அக்கணமே என் வருத்தத்தைப் புரிந்து கொண்டவர்போல் 'அஞ்ச வேண்டாம் கண்ணே! அஞ்ச வேண்டாம் கண்ணே!' என்று பலமுறை என்னை அணைத்து அன்போடு தேற்றுவாரடி! அப்படி அவர் தேற்றிக் கூறிய உறுதி மொழியை நம்பி, அது உண்மைதான் எனத் தெளிந்தேனல்லவா! அது என் தவறு தானடி! என் தவறுதான்! உண்மையில் அவர் சொன்னது போல் என்னைக் காத்துக் கொள்வதானால் கடைசிவரை என்னுடன் இணைந்து வாழவேண்டுமன்றோ! இதை உணராமல் அவர் பிரியவும் முற்பட்டு விட்டார். பிரிந்தால் மீண்டும் என்னுடன் கூடுதல் அரிது என்பதை அவர் உணர்ந்தாரானால் இன்று அவர் பிரியவும் முற்படுவாரா?'

***அளித்துஅஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்***
***தேறியார்க்கு உண்டோ தவறு.*** *(குறள் - 1154)*

கரைபுரண்டு ஓடும் காட்டாற்று வெள்ளம்போல் அவளுடைய உணர்ச்சிப் பெருக்கும் நீண்ட வாக்கியங்களாக உயிர்பெற்றுத் துடித்தன.

–'தலைவி, யான் சொல்வதைக் கேள்! – உன்னைப் பிரிந்து வாழவேண்டும் என்று அவர் ஏற்கனவே எண்ணியதுமில்லை. அதற்காகப் பல திட்டங்களைத் தானாகப் போட்டதுமில்லை. மன்னவன் ஆணை! அவ்வாணையைத் தலைமேற்கொண்டு வினை முடித்து வருவது அவர் கடமைதானே! ஆதலால், அவர் வருந்துணையும் ஆற்றியிரு. எப்படியும் விரைந்து திரும்பிவிடுவாரடி.'

–'தோழி, நீ கூட என் நிலையை இன்னும் புரிந்து கொள்ளவில்லையே! அவர் என்னைவிட்டுப் பிரிந்து செல்லாத நிலைமையாக இருந்தால் எனக்குத் தாராளமாகச் சொல்! அப்படி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல் பிரிந்து விரைந்து திரும்புவார் என்பதை மாத்திரம் சொல்லாதே. ஏனென்றால், அவர் பிரிந்து திரும்பி வருந்துணையும் உயிர் வாழக்கூடிய நிலைமையில் நான் இல்லை. ஆதலால், திரும்பி வருந்துணையும் உயிர் வாழக் கூடிய வல்லார்க்கன்றோ இதைச் சொல்ல வேண்டும்.'

***சொல்லாமை உண்டேல் எனக்குஉரை மற்றுநின்***
***வல்வரவு வாழ்வார்க்கு உரை.*** *(குறள் - 1151)*

-'தலைவி! தலைவர் பிரிந்தாலும் உன்மீது அவருக்கு இருக்கும் நினைவு - விரைந்து அவரை வினைமுடிக்கச் செய்து உன்பால் திருப்பிவிடும். ஆதலால், ஒருவாறு உன்மனதைத் திடப்படுத்தி ஆற்றியிருப்பதுதான் உன் பெண்மைக்கு அழகு!'

-'ஏடி, விரைந்து திரும்பிவிடுவார் - திரும்பிவிடுவார் என்கிறாயே! இப்போது எம் நிலை உணராது தன் பிரிவைப் பற்றித் தெரிவிக்கும் வன்கண்ணராக கல்நெஞ்சராகத்தானே நம் தலைவர் இருக்கின்றார். அப்படிப்பட்டவர் திரும்பி வந்து மீண்டும் என்பால் அன்பினை நல்குவார் என்னும் ஆசையை எம் உள்ளத்தில் வளர்ப்பது பயனற்றதொன்றுதானே!'

***பிரிவுரைக்கும் வன்கண்ணர் ஆயின் அரிதுஅவர்***
***நல்குவர் என்னும் நசை.*** *(குறள் - 1156)*

இதற்குமேல் தலைவி ஒன்றுமே பேசவில்லை! இனி மேலும் அவள் பேசுவதற்கு என்னதான் உண்டு. காதலன் பிரிந்தான்! கரைகாண முடியாத துன்பக் கடலில் காரிகையோ மிதந்தாள்! ஊனற்று உறக்கமற்று அவளுடைய தளிர்மேனி நாளுக்கு நாள் மெலிந்து தளர்ச்சி காணத் தொடங்கியது. இரு கைகளிலும் பொலிவுறக்கிடந்த வளையல்கள் ஒல்வொன்றும் அவளை அறியாமலேயே கழன்று விழத்தொடங்கின. அவை விழுகின்ற ஒவ்வொரு ஒலியும் தலைவன் விட்டுப்பிரிந்த மகா கொடுமையின் செய்தியை ஊரறியப் பலர் முன்னிலையிலே தெரிவித்து அவனது செயலைத் தூற்றுவதைப் போலவே ஒலித்தது.

***துறைவன் துறந்தமை தூற்றாகொல் - முன்கை***
***இறைஇறவா நின்ற வளை.*** *(குறள் - 1157)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையின் முன்புற நடுவாசல் உட்புறத்தே நெய்யினை நன்றாக வார்த்து இரவின் வருகைக்காகத் தீபத்தை ஏற்றினாள் தோழி. தலைவன் கூட இருக்கும்போது அளவு கடந்த இன்பத்தை அளித்த இரவின் ஆரம்ப வாயில் இப்பொழுதெல்லாம் பெரும் துன்பத்தையே காட்டியது. அவளது துன்ப மயமான வடிவத்தை இரவு மங்கை பார்த்துத் தெரிவதற்காகத்தான் என்னவோ தோழி தீபத்தை ஏற்றினாளோ!

நெய்யை உறிஞ்சி எடுத்துக் கொண்டு தீபத்தின் திரியானது நன்றாக எரியத் தொடங்கியது.

எரியும் தீயை உன்னிப்பாய்ப் பார்த்துக்கொண்டே ஓர் உண்மையைப் புரிந்து கொண்டவள்போல் ஏதேதோ வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டாள் தலைவி.

–'தீ கொழுந்துவிட்டு நன்றாக எரிகின்றது. என் நோய்க்குக் காரணமான காமம் இருக்கின்றதே! – அதுவும் ஒருவகையில் தீயைப் போன்றதுதானே! தீயானது தொட்டாற்தான் சுடும். என்னை ஆட்கொண்ட காமத்தீ அப்படியில்லையே! விட்டு நீங்கிய இடத்தும் – ஆமாம், என் உள்ளத்தில் உணர்ச்சியோடும் உணர்வோடும் மூண்ட காமமாகிய தீக்குக் காரணமான என் தலைவன் என்னை விட்டுப் பிரிந்தவிடத்தும் சுடுகின்றதே!'

***தொடிற்சுடின் அல்லது காமநோய் போல***
***விடிற்சுடல் ஆற்றுமோ தீ ?*** *(குறள் - 1159)*

இதைத்தான் அவள் பேருண்மை கண்ட ஞானியைப் போல் தெரிந்து - தெளிந்து - தன் வாய்க்குள் முணுமுணுத்துச் சொன்னாள். தனிமையில் அவள் முணுமுணுத்துச் சொல்வதையும், பெருமூச்சு விட்டு அறையின் உட்புறமுள்ள திண்ணையில் இருப்பதையும், யாரேனும் பார்த்தால் அவளைப் பைத்தியம் என்றுதான் சொல்வார்கள்.

துன்பத்தின் அளவுகடந்த நிலை பைத்தியத்தின் நிலைதானோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியக் கனவு

**ந**ள்ளிரவு!

செல்வமனையின் பள்ளியறைச் சாளரத்தின் ஊடே படுக்கை நொந்தபாவையாய் இரவின் பயங்கரமான அமைதியின் கோலத்தைப் பார்த்துக்கொண்டே நின்றாள் தலைவி.–

பேரிரைச்சலோடு ஓயாது இரைந்து இரைந்து முழங்கிக்கொண்டே தன் அலையின் கரங்களை எழுப்பும் பரந்த நீலக் கடல்கூட அமைதியுடன் தவக்கோலம் பூண்டுவிட்டது. கண்டல் மரத்தில் வாழும் சிறிய புள்ளினங்கள் – உயர்ந்த வெண்மணற் கரைகள் தோறும் அடர்ந்து காணப்படும் மனைகளில் வாழும் மனித ஜீவன்கள் – அனைத்தும் உறக்கத்தின் போதையில் மெய்மறந்து மிதக்கத் தொடங்கின.

மன்னுயிர்கள் அனைத்தையும் துயில வைத்துத் தான் மாத்திரம் எல்லா உயிர்களுக்கும் காவல் புரிவது போல் விழித்துக் கொண்டிருக்கும் இரவின் பரிதாபகரமான நிலையை எண்ணி எண்ணி இவ்விரவின் மீதே இரக்கங்கொண்டாள் தலைவி. தன்னைத் தவிர அதற்கு வேறு துணை இல்லையே என்ற அனுதாபந்தான் அவளை அதன் மட்டில் இவ்வளவு தூரம் இரங்கும்படி செய்திருக்கவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையிலேயே இரவின்மீது இரக்கங்கொண்டாளா? அல்லது, தன் நாயகன் பிரிவால் துன்பத்தின் மெலிவு நாளுக்குநாள் படர, அப்படர்ச்சிக்கு வித்திடும் இரவை - இரவின் நிலையை - இரங்குமாப்போல் கடிந்து கொண்டாளா?

காதலருடன் கூடிக் கலந்து உறையும் கன்னியர்க்கு இரவானது ஒரு புறம் ஈடிணையற்ற இன்பத்தை அளிக்கின்றது. இன்னொரு புறம் காதலரின் பிரிவால் வாடும் பேதையர்க்கோ பெருந் துன்பத்தைக் கொடுக்கின்றது. அதிலும், திருமணமாகி மூன்று திங்கள் கூட ஆகாத நிலையில் அவன் அவளை விட்டுப் பிரிவதென்றால், அப்பிரிவினால் படரக்கூடிய நரக வேதனைக்கு அளவேயில்லை. வேதனையின் பிடியில் மீட்சி இல்லாதவளாய் இருக்கும் அவளுக்கு பகற் பொழுதைவிட இரவுப் பொழுது கழிவதுதான் பெரும்பாடு!

-'உலகத்தின் எல்லா உயிர்களையும் துயிலச் செய்துவிட்டுத் தான் மாத்திரம் விழிப்போடு இருக்கும் இரவுக்கு என்னைவிட வேறு துணையில்லை! ஆமாம் என்னைவிட வேறு துணையில்லை! இரவுக்குத் துணையாக யான் இருக்கலாம், ஆனால், எனக்குத் துணை! - சா... சா..., இரவாவது - எனக்குத் துணையாக இருப்பதாவது! என் ஆருயிர்த் தலைவனின் பிரிவால் துன்புற்று மெலிகின்ற இந் நாட்களிலே இந்த இராக்காலங்கள் நெடுநேரம் உடையனவாகக் கழிகின்றனவே. இரவின் ஒரு கணப்பொழுதைத் தன்னும் கழிப்பதற்கு யான் எவ்வளவு தூரம் வில்லங்கப்படுகின்றேன் என்பதை அறியாமற்தானே இந்த இரவும் நீண்டு செல்கின்றது! அத்துடன் இந்நீட்சி ஒரு நாளில் தீர்ந்துவிடுகின்றதா? பல நாட்கள்! அப்பப்பா; மகாகொடுமை! என்னை இந்த நிலையில் உள்ளாக்கிப் பிரிந்த கொடியவரின் கொடுமையைவிட இந்த இரவின் கொடுமைதான் மாபெரும் கொடுமையாக விளங்குகின்றது.'

***மன்உயிர் எல்லாம் துயிற்றி அளித்துஇரா***
***என்அல்ல(து) இல்லை துணை***

*(குறள் - 1168)*

***கொடியார் கொடுமையின் தாம்கொடிய - இந்நாள்***
***நெடிய கழியும் இரா.*** *(குறள் - 1169)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தன் மனதுக்குள் இரவின் நீட்சியையும் அதன் கொடுமையையும் எண்ணி எண்ணிப் புகைந்து கொண்டே சொன்னாள் தலைவி.

'காமம் மகிழ்விக்கும்போது அதன் இன்பம் காதலர்க்குக் கடலைப்போன்ற பெருக்கம் உடையதாகத்தான் இருக்கும். பின்பு ஒரு காலத்தில் அக் காமமே வருத்தத் தொடங்கிவிட்டால் அதனால் வருந் துன்பமோ கடலைவிடப் பெரியதாய் இருக்கும்.'

***இன்பம் கடல்மற்றுக் காமம் அஃ(து)அடுங்கால்***
***துன்பம் அதனின் பெரிது.***

*(குறள் - 1166)*

இன்பமும் துன்பமும் மாறி மாறிவரும் தன்மை உள்ளதுதான் இவ்வுலகம்.

'காமம் என்பது ஒரு நோய்தான். அந்த நோய் கடலைப்போன்றே விரிவுடையது. எப்படியோ அக் கடலை நீந்தி மறுகரையைக் காணத்தான் அவளும் முற்படுகின்றாள். ஆனால், அதற்குரிய புனைதான் அவளிடம் இல்லை.' *

இன்பத்தைத் தாமே தனித்து அனுபவிப்பவர் துன்பத்துக்கு மாத்திரம் துணையை நாடுவது எவ்வளவு பைத்தியக்காரத்தனம். தலைமக்களாகிய தலைவன் தலைவி இருவருமே காமத்தின் இன்ப நுகர்ச்சியைக் கரை காணாது அனுபவித்தனர் என்றால் அதனால் வருந்துன்பம் கடலைவிடப் பெரிதாக இருந்தபோதிலும் அதைக்கடப்பதும் அவர்களைப் பொறுத்ததாகத்தானே இருக்க வேண்டும். அதற்காகப் புனையையோ வேறு துணையையோ எதிர்பார்ப்பது அறிவீனத்திலும் அறிவீனமானதொன்றுதான். அதனால்தான் புனை இல்லாமலே காமக்கடலை நீந்தி முடிக்கத் தலைவியும் முற்பட்டிருக்கவேண்டும். நீந்தினாள்! வெகுதூரம் நீந்தினாள்! ஆனால், கரையைத்தான் அவளால் காணமுடியவில்லை.

* *குறள் - 1164*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

–'காமமாகிய கடுமையான வெள்ளத்தை நீந்தியும் அதன் கரையை யான் இன்னும் காணவில்லை. கரை காணாத திக்கற்ற நிலையில் அரையிருள் யாமத்திலும் யானே தனியனாய் இருக்கின்றேன்.'

***காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்;***
***யாமத்தும், யானே உளேன்.***

*(குறள் - 1167)*

இதைத் தன் நெஞ்சோடு நெஞ்சாய் அழுத்தித் தனக்குள்ளே சொல்லிச் சொல்லிப் படுக்கையில் புரண்டாள் தலைவி. வேதனை தாங்கமுடியாத நிலை! ஆந்த நிலை – காமமாகிய கடும் புனலை நீந்திக் கரைகாண முடியாது தத்தளிக்கும் அவலமான நிலை! இதற்கிடையில் யாமத்தின் நள்ளிரவிலும் தன்னந்தனியாக வேறு துணையில்லாது தான் இருப்பதாகப் பெற்றோரை மறந்து – தன்னை அன்புடன் வளர்த்த செவிலித்தாயை மறந்து – தன்னோடு என்றும் அன்பாகப் பழகும் அருமைத் தோழியை மறந்து – சுற்றம், அயலார், எல்லோரையும் மறந்து 'யாமத்தும் யானே உளேன்' என்று சொல்லும் அளவுக்குத் தலைவனின் பிரிவுத் துன்பம் அவளைச் சுற்றிக் கொண்டது. அச் சுற்றுதலின் பற்றுதலில் மெலிந்து இரங்கினாள் அம் மெல்லியலாள்.

'ஒரு பெண்ணின் வாழ்வு ஒருவனோடு இணைந்துவிட்டால் அந்த வாழ்க்கையில் அவள் பூசித்து வழிபடக்கூடிய ஒரேயொரு துணை அவனேதான். அவனின் துணை அவள் உடலோடு மாத்திரம் அல்லாது உயிரோடும் இணைந்து ஆத்மிகமாய்க் கலந்து விடுகின்றது.'

பகைவினை காரணமாகத் தலைவன் வேற்றூர் சென்றவிடத்து எடுபிடி வேலை தொட்டு வேறு எல்லாக் கருமங்களுக்கும் பல வேலையாட்களை அவளுக்குத் துணையாகவே விட்டுச் சென்றான். அப்படி இருந்தும் ஆத்மிகமாய்க் கலந்த தன் தலைவன் அருகில் இல்லாதபோது தன்னையே தனிமரமாக – அனாதையாக – எண்ணித்தான் 'யாமத்தும் யானே உளேன்' என்றாள் போலும்.

வெள்ளத்தில் நீந்துவது ஆபத்தானதொன்றுதான். அதிலும், காமமாகிய கடுமையான வெள்ளத்தில் நீந்துவதானால் அது எத்துணை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபத்தைக் கொடுக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. வெள்ளத்தை நீந்துதற்கு உடல் வலிமை இருந்தாலே போதும். ஆனால், காம வெள்ளத்தை நீந்துதற்கு உடல் வலிமையை விட மன வலிமையும் வேண்டும்.

பெண்மை என்பது எதையும் தாங்கி - தன் வருத்தத்தைப் பிறர் அறியாதவாறே பொறுமையுடன் இருந்து - தன் இலட்சியக் கனவுக்காகக் காத்திருக்கும் வன்மையுடையது.

திருமணமாகி மூன்று திங்கள்தாம் ஆகின. அதற்குள்ளாகவே அவனுடைய பிரிவு ஏற்பட்டுவிட்டது. எப்படியும் விரைந்து திரும்பி விடுவதாகவே கூறிச் சென்றான். அவன் வந்ததும் அவனோடு குடும்பம் நடத்தி, முழுமையான இல்லற இன்பத்தைத் தொடர்ந்து பெறுவதுதான் அவளுடைய இலட்சியக் கனவு! அக் கனவு நினைவாதலை எண்ணி எண்ணித்தான் தலையணையோடு தன் முகத்தின் ஒரு பாதியை அழுத்திக்கொண்டு - இரு கண்களிலும் பெருகும் கண்ணீர் வெள்ளத்தில் மிதந்து நீந்திக்கொண்டு - தன் காதலன் சென்ற இடத்துக்குத் தன் மனம் செல்வதுபோல் தான் செல்ல முடியாத துன்பம் நிறைந்த நிலையோடு பெருமூச்செறிந்து கொண்டே கிடந்தாள்!...

அப்போது, வானமென்னும் திரையில் பதிந்துள்ள முத்துச் சுடர்போன்ற விடிவெள்ளி தன் ஒளிக்கீற்றைப் பன்மடங்காகப் பிரகாசித்து - தலைவியின் உயிர்த் துடிப்பினைப்போல் படிப்படியாக மழுங்கத் தொடங்கியது. அவள் மட்டில் அதிக துன்பத்தைப் படரவிட்டு வேடிக்கை பார்க்கும் இரவானது அவள்மீது இரக்கங் கொள்ளத் தலைப்பட்டதுபோலும். அவ்விரக்கத்தின் வெளிப்பாட்டை உலகத்தார்க்கு அறிவுறுத்துவதுபோன்றே சேவலும் சிறகடித்து உரக்கக் கூவிக்கொண்டே இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூங்காத கண்கள்

'உலகமே நிம்மதியாக உறங்கிவிட்டது! -

எனக்கோ நிம்மதியுமில்லை; உறக்கமும் இல்லை. தணியாத காம நோய் என்னை ஆட்கொண்டபின் எப்படித்தான் உறக்கம் வரும். இக் காம நோய் எதனால் விளைந்தது! இந்த இரு கண்களினால்தாமே விளைந்தது! காம நோய்க்கு முக்கிய கொழுகொம்பாய் விளங்கும் நம் காதலரை முதலில் இக் கண்கள்தாமே காட்டின. அவரைக் காண நேர்ந்ததால்தானே இப்பொழுது இக்கண்கள் பரிதாபத்துக்கு உள்ளாக்கி அழுகின்றன. ஏன் இவைதாம் அழுகின்றனவோ? முன்பு அவரை நல்லவரா தீயவரா என்று ஆராய்ந்து உணர்ந்திருந்தால் இந்தக் கெதிதான் இதற்கு ஏற்பட்டு இருக்குமா? உடனே அவரைக் கண்ட மாத்திரத்தில் அவர் நல்லவர்தானா என்று ஆராய்ந்து உணராமல் அவரைக் காதல்கொண்டு விட்டதே! மையுண்ட என் அகன்ற கண்கள்! அப்பொழுதுதான் இவை தவறு செய்திருந்தாலும் இப்பொழுதாவது தன் தவறை உணரலாமல்லவா! அவ்விதம் உணராது அவர்மேல் அன்புகொண்டு துன்பத்தால் வருந்துவது எதற்குத்தானோ?! அன்று காதலரை எவ்வளவு தூரம் விரைந்து நோக்கிய இப்பாழுங்கண்கள், அவர் வினை முடித்துத் திரும்பி வருந்துணையும் ஆற்றி இருக்கின்றனவா?! எவ்வளவு தூரம் விரைந்து நோக்கினவோ, அவ்வளவுதூரம் அதிவிரைவாய் அழுது மாய்கின்றனவே! இதை நினைத்தாலே எனக்கு அழுகையோடு சேர்ந்து நகைப்பும் வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமேல் அழுவதற்குத்தான் என்ன மிச்சம் இருக்கின்றது. இத் துன்ப உழற்சியில் உய்ய முடியாதபடி தீராத காமநோயை என்னிடத்தில் உண்டாக்கி நிறுத்திவிட்ட இக் கண்கள் இனிமேல் தாமும் அழமுடியாதபடி நீரும் வற்றி உலர்ந்துவிட்டனவே! மேலும் தூங்க முடியாத பெருந்துன்பத்தால் வருந்துகின்றனவே! எமக்கு இந் நோயை உண்டுபடுத்தியதற்குப் பதிலாகத் தாமும் இவ்வாறு துன்பத்தால் வருந்துவது மிகமிகப் பொருத்தமானதுதான்! மிகமிகப் பொருத்தமானதுதான்! நம் காதலரைத் தாமாக விரும்பி – நெகிழ்ந்து கண்ட கண்கள் அல்லவா இவை! அவ்விதம் காணாதிருந்தால் இன்று இந்நிலை இதற்கு ஏற்பட்டு இருக்குமா? அதிலும், அவரை நினைத்து – உறக்கம் இல்லாது – துன்பத்தால் எஞ்சியுள்ள ஒரு சொட்டுக் கண்ணீரும் அற்றுப்போகும்படியாக வருந்தி வருந்திச் சாகின்ற இந் நிலை, மிகமிகப் பரிதாபத்துக்கு உரிய நிலையன்றோ!'

இவ்வாறு காதலனைக் காணவேண்டும் என்ற துடிதுடிப்பால் தன் துன்ப உணர்ச்சிகளை எல்லாம் கண்கள் மேல் ஏற்றி தன் நெஞ்சுக்குள் சொல்லிச் சொல்லி நெட்டுயிர்ப்பு விட்டாள் தலைவி.

பொழுதும் நன்றாக விடிந்துவிட்டது!

ஆனால், அத் தோகையின் துன்ப உழற்சிக்குத்தான் இதுவரை விடிவேயில்லை.

'வாழ்வு என்பது தெளிந்த அமைதியான நீரோடையன்று. சூறாவளியால் கொந்தளித்து எழுகின்ற பெரும் அலைகள் சூழ்ந்த ஆழ்கடல். அந்த ஆழ்கடலில் நீந்தி மறுகரை காண முடியாது இடையில் எத்தனையோ உயிர்கள் மாண்டு விடுகின்றன.'

அப்படியானால் தலைவியின் வாழ்வு? –

அவளும் கரையை நோக்கித்தான் தினமும் நீந்துகின்றாள். அவ்விதம் நீந்தியும் கரையின் மெல்லிய கீறலைத்தன்னும் இதுவரை அவளால் கண்டுகொள்ள முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பத்தின் குறியீடாகத் திரண்டு திரண்டு – உருண்டு உருண்டு – அவள் மலர் வதனத்தை நனைத்த கண்ணீர் வெள்ளமும் வற்றிவிட்டது. வற்றியதால் உலர்ந்து காய்ந்த அவள் முகத்தில் மிக்க துயரத்தின் படிவங்கள் உப்பிக் காணப்பட்டன.

தோழி அப்பொழுதுதான் வந்தாள்!

வந்தவள் கண்களுக்குத் தலைவியின் உடல் வாட்டத்தைவிட, நித்திரையில்லாது சிவந்து வெதும்பி – ஒளியற்றுப் பொலிவற்றுக் காணப்பட்ட அவள் கண்கள்தாம் கருவேல் முட்களைப் போல் குத்தின.

–'தலைவி! உன் கண்கள்தாம் என்ன?! அமைதியற்றுக் காணப்படுகின்றாயே!'

–'என்னடி செய்வேன்! உள்ளத்தால் விரும்பாமல் வெறும் சொல்லளவில் மாத்திரந்தான் விரும்பிப் பழகியவர் ஒருவர் இருக்கின்றாரடி! அவரைக் காணாமறந்தான் என் கண்கள் அமைதியற்று வரண்டு காணப்படுகின்றன.'

–'அப்படியானால், உன் உடம்புதான் என்னத்துக்கு ஆகும்! எப்படியும் வினை முடித்து விரைந்து திரும்பி விடுவார் நம் தலைவர். அவர் வருந்துணையும் ஆற்றியிருப்பது உன் கடமையன்றோ! அதல்லாமல், ஆற்றாது – துயிலாது வாழ்நாளைக் கழிப்பது எத்துணை அறிவீனமான செயல்!'

–'நீ சொல்வது சரிதானடி! அதை நான் முற்றிலும் உணர்கின்றேன். அப்படி உணர்ந்தாலும் நித்திரை என்பதுதான் எனக்கு இல்லை. காதலர் வராத காலத்தில் அவர் வரவை விரைந்து எதிர்பார்க்கின்றேன். எதிர்பார்க்கும்போது என் கண்கள் எப்படித்தானடி துஞ்சும்! அதல்லாமல், அவர் வந்த காலத்தே இக்கண்கள் துஞ்சுமா என்றால் – அதுவும் இல்லை. அப்போது கூட அவர் மீண்டும் என்னை விட்டுப் பிரிந்து விடுவாரோ என்று அஞ்சி அஞ்சித் துஞ்சாமல்தானடி இருக்கும். இவ்வாறு இரண்டு வழியாலும் என் கண்கள் துன்பமுற்று தவிக்குதடி!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

–'உன்னால் ஆற்றி இருப்பது மிகவும் கடினந்தான். ஆயினும், தலைவனின் நல்ல பெயருக்காகவாயினும் உன் துன்ப துயரத்தைப் பிறர் அறிய முடியாதவாறு உன்னுள்ளே மறைத்து நீ ஆற்றியிருக்கவேண்டாமோ! இப்படி நீ இருந்தால் உன் காதலரின் இயல்பினைத்தானே இவ்வூர் பழித்து வாய்க்கு வந்தபடி ஏதேதோ பேசும்!'

–'தோழி! நானும் என் துன்பத்தை மறைக்கலாம் என்றுதான் முயல்கின்றேன்! ஆனால், அறையப்படும் பறைபோல் என் கண்கள் துன்பத்தை வெளிப்படுத்துகின்றனவே! இப்படிப்பட்ட எம்மிடத்தில் நெஞ்சத்துள் ஆற்றிவைத்திருக்கும் ஒரு பொருளான – இரகசியமான செய்தியை இந்த ஊரார் எளிதாக அறிந்து கொள்வதில் வியப்பொன்றுமில்லையேடி!'

***பேணாது பெட்டார் உளர்மன்றோ – மற்றுஅவர்க்***
***காணா(து) அமைவுஇல கண்.***

*(குறள் - 1178)*

***வாராக்கால் துஞ்சா; வரின்துஞ்சா; ஆயிடை***
***ஆர்அஞர் உற்றன கண்.***

*(குறள் - 1179)*

***மறைபெறல் ஊரார்க்(கு) அரிதுஅன்றால் - எம்போல்***
***அறைபறை கண்ணார் அகத்து.*** *(குறள் - 1180)*

'காதல் என்பது உள்ளத்தால் பிணைப்புண்டது. வெறும் உடற் கவர்ச்சியின் ஈர்ப்புத்தான் காதல் என்று மயங்குவோர் கடைசியில் தலைகால் தெரியாமல் முகங்குப்புற விழுந்து – பிறர் எள்ளி நகைக்கக் கூடிய அளவுக்குத் தம் வாழ்வை மாய்த்துக் கொள்ளுகின்றனர்.

தலைவன் தலைவி இருவரும் ஒருவர்மேல் ஒருவர் கொண்ட காதல் உள்ளத்தால் பிணைப்புண்டது. வெறும் சொல்லளவில் மாத்திரந்தான் தலைவன் தன்னுடன் பழகினான் என்று தலைவி சொல்வதெல்லாம் அவளின் ஆற்றாமை உணர்ச்சியினால்தான். தலைவியின் உள்ளம் தலைவன் இடமாய் முழுவடிவம் பெற்றபின் அவள் மட்டில் காணப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவம் யாவும் அவன் வசமாகவே அவாவி நிற்கும். வினைமுடித்து விரைந்து வருவதாகத்தான் தலைவன் கூறிச் சென்றான். அவன் வருந்துணையும் ஆற்றியிருக்கும் நிலையில் அவள் இல்லை. அவன் விரைந்து திரும்புவதற்குள் அவளின் கட்புலனோ அவனை அதிவிரைவாய்க் காணத் துடிக்கின்றது. அவ் விரைவும் துடிப்புந்தான் அவளை இந்த நிலையில் துன்புற்று அழியும்படி செய்கின்றன. உண்மையில் அவளின் அழிவுக்கு – வருத்தத்துக்கு – அவள்தான் காரணமே தவிர, கண்கள் ஒருபோதும் காரணமாக இருக்கவே முடியாது.

நெஞ்சம் பல இரகசியங்களைக் கொண்ட அறையாக இருக்கலாம். ஆனால், எந்த அறைக்கும் வாசல் உண்டு அல்லவா!

தலைவியின் நெஞ்சத்துள் புதையுண்டு கிடப்பவை அவளைப் பற்றிய பல இரகசியங்கள்தாம். அவனைக் கண்டதும்; காதல் கொண்டதும்; தானும் அவனும் பகலென்றும் இரவென்றும் குறியிடத்தே பலமுறை கண்டு நெஞ்சங்கலந்து களவொழுக்கம் கொண்டதும்; அப்போது தலைவன், 'உன்னை ஒரு கணப்பொழுதேனும் பிரியேன்' என்று சொன்ன உறுதி மொழிகளும்; இவையெல்லாம் அவளை நெஞ்சத்தின் அறையினுள் உறைந்துள்ள இரகசியங்களேயல்லாமல் அம்பலமாகப் பிறர் அறியக்கூடிய செய்திகள் அல்லவே!

திருமணமாகி மூன்று திங்களுக்குள் காதலரிடையே பிரிவு ஏற்பட்டால் அதனால் வருகின்ற வருத்தத்தின் தன்மை காதலருக்குத்தான் தெரியும். அவ் வருத்தம் காமத்தை – புணர்ச்சி இன்பத்தை – நிறைவாக நுகர முடியாத நிலையில் ஏற்படும் வருத்தம்! இதுவும் அவள் நெஞ்சத்தினுள் தேங்கியுள்ள இரசவாத ஊற்றுக்கள்தாம். இவ்வூற்றுக்கள் அதிகமாகப் பீறிட்டு வெளிக்கிளம்பும்போது நெஞ்சத்தின் இரகசிய அறையின் வாசலான கண்களைத்தாம் ஊடறுத்து வெளிப்பாயும். இவ்வெளிப்பாடு அவளை அறியாமலே அவளிடத்தில் ஏற்பட்டதொன்று. இதை உணராமல், 'ஊரார் அறிந்தால் தலைவனைப் பற்றி என்ன சொல்வார்கள்! ஆதலால், ஆற்றியிருப்பதே நன்று!' – என்றெல்லாம் தான் தலைவிக்குச் சொல்வது எத்துணை அறிவீனமானது என்பதை எண்ணி எண்ணி தலைவியின் இல்லத்தில் இருந்து பக்கத்துத் தெருவில் உள்ள தன் மனைக்குச் சென்று கொண்டிருந்தாள் தோழி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசலைக் கோலம்

மாடத்தின் நடுவே வலப்புறம் அமைந்த அகன்ற அறை!-

அந்த அறையின் நடுவே ஒரு புறம் சாய்ந்து இலாவகமாக இருக்கக்கூடியதாகச் சந்தன மரத்தால் மயில் வடிவாய்ச் செப்பனிட்டுச் செய்யப்பட்ட அழகான கட்டில்; அக் கட்டிலில்தான் கட்டழகியான காரிகை தன் இரு கரங்களையும் முழங்கால்வரை நீட்டி - முடங்கிக்கொண்டு - தன் மார்பையும் தோளையும் மாறிமாறிப் பார்த்தவாறு நெடுநேரமாக இருந்தாள்.

அப்படி உன்னிப்பாய்ப் பார்ப்பதற்கு அவள் மார்பிலுந் தோளிலும் என்னதான் உண்டு?!-

பசலை!

ஆமாம்; அவள் தன் மார்பிலுந் தோளிலும் படைபடையாய்ப் படர்ந்து காணப்பட்ட நிற வேறுபாடான பசலையைத்தான் அவ்விதம் உன்னிப்பாய்ப் பார்த்துக்கொண்டு இருந்தாள். அப்படியானால், அப்பசலைக்கும் அவளுக்கும் யாதேனும் சம்பந்தம் உண்டோ?

நிறைய உண்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசலையின் படர்ச்சி உடலில் தோன்றும் வெறும் நிறவேறுபாடாக இருந்தால் அவ்வளவு தூரம் உன்னிப்பாக - அந்தரங்கமான தாக்கங்களோடு - அவள் பார்த்திருக்கவே மாட்டாள். அதல்லாமல், அந் நிற வேறுபாடு உடற் கோளாறினால் தோன்றியிருக்குமானால் இதுவரையும் அவளுக்கு நல்ல வைத்தியரைக் கொண்டே சிகிச்சை நடைபெற்று இருக்கும்.

'உடலிற் தோன்றும் காயங்களை மருந்தால் மாற்றலாம். ஆனால், உள்ளத்தால் தோன்றும் நோயை - அதன் வருத்தத்தை எந்த மருந்தாலும் மாற்றவே முடியாது.'

தலைவிக்கு ஏற்பட்டுள்ள இவ்வருத்தம் உள்ளத்தால் தொடர்புடையது.

திருமணமாகி, கற்பின் வாழ்விலே கலந்து இன்பந்துய்க்கவேண்டிய காலத்தில் அவன் பிரிந்து வாழ்வதென்றால், அவள் மனம் நொந்துதானே தீரும்! மேலும், அவர் பிரியும்போது வெறுமனே பிரிந்தாரல்லர். அவளிடம் இயல்பாய் அமைந்த சாயலையும் நாணத்தையும் பெற்றுக்கொண்டுதான் பிரிந்தார். பிரியும்போது தான் அவளிடம் இருந்து பெற்றதற்குப் பதிலாக இரண்டே இரண்டை அவரும் அவளுக்குக் கொடுக்க மறக்கவில்லை. கொடுத்தவர் தன் நினைவுச் சின்னமாக யாதேனும் இரு பொருட்களைக் கொடுத்திருந்தால் பரவாயில்லை. ஆனால், அவர் கொடுத்தவையோ, ஒன்று 'காமநோய்!' மற்றொன்று 'பசலை'*

காமநோய் அவள் அகத்துணர்வில் புதையுண்டு கிடப்பவை. அந் நோய் எத்துணைதான் துன்பத்தை அவளுக்கு அளித்தபோதிலும் அவளோடுதானே அதுவும் அமிழ்ந்திக் கிடக்கும். வெளிப்படையாக அந் நோய் பிறர்க்குத் தெரியப்போவதில்லை. ஆனால், பசலையோ அத்தன்மையில்லை. அவளைப் பார்ப்பவர்களுக்கு முதலில் பளிச்சென்று தெரிவது அதுதான். அது தெரியுந்தோறும் அவளிடம் ஒளிந்துள்ள காமநோயும் எத்துணைதாம் என்பதும் தெரிந்துவிடும். உண்மையில் அவளிடம் உள்ள காமநோயின் தன்மையைப் பிறர் அறிந்து கொள்வதற்கென்றே அமைந்த கண்ணாடித் துண்டுகளைப் போலன்றோ

* *குறள் - 1183*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மேனியின் பசலை விளங்குகின்றன!

அவள் துன்பம் அவள் நெஞ்சோடு புதையுண்டு நன்றாக அமிழ்ந்திக் கிடக்கட்டும். அமிழ்ந்திக் கிடந்துவிட்டால் அத்துன்பம் உலகத்தார்க்குத் தெரியவே தெரியாது. உலகத்தார் வெளிப்படையாகத் தெரிந்துகொள்ளும் அளவுக்குப் பசலையின் கோலமாகக் காட்சி தருவதுதான் அவளுக்கு என்னவோபோல் இருந்தது. தன் பிரிவின் ஆற்றாமையை – காமநோயின் விரகதாபத்தை – அளந்து கட்டி உலகத்தார்க்குப் பறை சாற்றுதற்கென்றே தன் உடலோடு உடலாய்ப் பசிய இளைய தாமரை இலைபோன்று வட்டம் வட்டமாய் ஒன்றோடொன்று பின்னப்பட்டுக் காணப்படும் பொன்னிறமான பசலையைக் காணுந்தோறும் காணுந்தோறும் அவளின் கவலையோ பன்மடங்காகி விட்டன. 'காதலனின் தழுவுதல் இல்லாததால் தன் உடல் இந்த நிலைக்கு ஆகிவிட்டது' என உலகத்தார்க்கு இனிமேல் இது பற்றிய பேச்சாகத்தான் இருக்கப்போகின்றது. இதை நினைக்குந் தோறும் அவளை அறியாமலே அவளுடைய காந்தள் விரல்கள், மேற்புறத்து மார்பின் நடுவே படர்ந்த பெரும் பசலையின் துருவக் கோடுகளை மறைக்குமாப்போல் தடவிக் கொடுத்துக்கொண்டே இருந்தன. அப்போது அப் பசலையைப் பொறுத்த மட்டில் கடந்த காலத்தின் நிகழ்ச்சி ஒன்று அவள் நெஞ்சகத்தில் நிழலிட ஆரம்பித்தது.

ஒரு நாள் பால்நிலா எறிக்கும் இரவு!–

அந்த இரவுப் பொழுதில் ஓர் அணு அளவு நேரங்கூட வீண் போகாமல் தலைவன் தன்னை அகலாமல் அணைத்துக் கொண்டு கிடந்தபோது தான் அவனைத் தழுவிக்கொண்டதும்; அது தற்செயலாகத் தான் அகன்றதும்; அகன்ற அத் தருணத்திலேயே தன் உடலில் பசலை அள்ளிக்கொண்டதும்; தன் உடலில் புதிதாகத் திடீரென்று தோன்றிய பசலையின் நிறம் கண்டு அவனே ஆழ்ந்த வியப்புக்குள்ளாகி மெல்ல நகைத்ததும்; அவன் நகைக்குந்தோறும் இப்போது தன் பசலையைத் தடவிக் கொடுக்கும் அதே விரல்களால் தன் கண்களை மூடி மறைத்ததும்; இவையெல்லாவற்றையும் நினைத்துப் பார்க்கின்றபோது அவளுக்கே இப் பசலையிடத்து ஒருவித ஆழ்ந்த அனுதாபமும் வரத்தான் செய்தது.

அன்று சிறுபொழுதே அவனைத் தழுவாததால் ஏற்பட்ட பசலையைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவன்தான் அறிவான். ஆனால், இன்று மன்னவன் வினை நிமித்தம் வேற்றூர் சென்றதால் இதுவரை அவனைப் பல நாட்கள் தழுவப்பெறாததால் ஏற்பட்ட பசலையைப் பலர் காணும்படியாயிற்று. பிறர் காணும்படியான நிலையில் பசலை தன் உடலை ஆட்கொண்டதே அவளுக்குப் பெருஞ் சங்கடந்தான். எடுத்த எடுப்பிலேயே இப் பசலை தலைவனின் தழுவல் இல்லாத குறையைப் பலர் அறியச் செய்துவிடுவதென்றால், எந்தப் பெண்தான் பசலை படர்தலை விரும்புவாள். அதிலும், 'இவள் பிரிவினால் வருந்திப் பசலை நிறம் அடைந்தாள் என்று இப்பொழுதே அவளைப் பழிசொல்ல ஆரம்பித்துவிட்டது உலகம். ஆனால், இவளைக் காதலர் துறந்தார் என்று ஒரு வார்த்தைகூட இவளுக்காகப் பேசுவோர் இல்லை.'

*பசந்தாள் இவள்என்ப(து) அல்லால் இவளைத்*
*துறந்தார் அவர்என்பார் இல்.*

*(குறள் - 1188)*

உலகம் எதிலுமே வெளித்தோற்றத்தைக் கண்டுதான் மயக்கம் அடைகின்றது. வெளித்தோற்றம் ஒவ்வொன்றுக்கும் அடிப்படையான உட்பொருள் இருப்பதை நினைத்துக்கூடப் பார்க்காத குழந்தைத் தனத்திலேதான் அது இயங்குகின்றது.

'இவளுக்குப் பசலைகூட ஏற்பட்டு விட்டதாமே! பெண் என்றால் ஆற்றி இருக்க வேண்டாமோ!' - என்று பேசும் உலகம், 'இவளுக்குப் பசலை ஏற்படக் காரணந்தான் என்ன?"- என்று சிறிதேனும் ஒரு வினாவை எழுப்பி விடைகாண முற்படுகின்றதா?! அவள் உயிரையும் உடலையும் முழுமையாக அவனே ஆட்கொண்டபின் அவன் இல்லாதபோது அவள் உடலில் மாற்றம் நிகழ்வதில் வியப்பொன்றுமில்லை. அதிலும், திருமணத்தின்பின் - கற்பிற் புணர்ச்சிக் காலத்தில் - அவனுடைய தழுவலில் அவள் உயிர்ப்புக் காணவேண்டிய இன்ப நேரத்தில் - அவன் பிரிந்து வாழ்வதென்றால், அவளுக்கு எவ்வளவு துன்பத்தை அளிக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா! சிறு பொழுதேனும் அவனைப் பிரிந்து வாழப்பொறுக்காதவள் ஒரு சில திங்கள் அவனைப் பிரிந்து வாழ்வதற்கு எப்படித்தான் பொறுப்பாள்! அவன் பிரிவோ எள்ளளவேனும் அவளுக்கு விருப்பமேயில்லை. எப்படியோ அதற்கு அவளை உடன்பட வைத்துத்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்தான். அப் பிரிவுதான் அவளை வருத்துதல் அல்லாமல், அவ்வருத்தத்தின் வெளிப்பாடாகப் பசலையையும் தோற்றுவிக்கின்றது என்பதை உலகம் சிறிதேனும் சிந்திக்காமல் வாய்க்கு வந்தபடி ஏதேதோ பேசுகின்றது.

-'பிரிவுக்கு என்னை உடன்படச் செய்தவர் அவரேதான்! அவரே பிரிந்தார்! பிரிந்ததோடு என்னை வருத்தவும் செய்கின்றார்! அவர் வருத்துதலைப் பிறர் தூற்றாமல் இருப்பாரானால், யான் பசலை உற்றதாகப் பெயரெடுத்தல் நன்றிலும் நன்றே!'- என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள்.

***பசப்புஎனப் பேர்பெறுதல் நன்றே — நயப்பித்தார்***
***நல்காமை தூற்றார் எனின்.***

*(குறள் - 1190)*

'பசலையுற்றாள்! பசலையுற்றாள்!' என்று அவளைப் பார்த்து இந்த உலகம் ஆயிரந் தடவைகள் சொல்லட்டும். உலகம் சொல்லும் இந்தச் சொல்லில் இனிமேல் அவளுக்கு எந்தவிதமான அக்கறையும் இருக்கப்போவதில்லை. ஆனால், அவளைப் பிரிவுக்கு உடன்பட வைத்துப் பிரிந்து சென்றானே அவள் காதலன்! அவன் பிரிந்ததையும், பிரிந்து வருந்துதலையும் தூற்றாமல் இருந்தால் போதுமானது. தூற்றினால் அவனின் பெருந்தகையான குணத்துக்கு மாசு ஏற்பட்டுவிடும். அவனின் தலைமைப் பண்புக்கு மாசு ஏற்படக்கூடிய நிலையைத் தலைவி ஒரு கணமேனும் விரும்பவேமாட்டாள். தலைவனின் பிரிவால் தன் உடற்கு அழிவு ஏற்பட்டாலும் அவனின் தலைமைப் பண்புக்கு அழிவு ஏற்படக்கூடாது என்பதுதான் அவளின் தலையான எண்ணம். அதனால்தான் 'நம்மைக் காதலித்தவர் அருளாமையை இவ்வூரார் கூறாராயின், யான் பசலையுற்றதாகப் பேர் பெறுதல் நன்றே' என்னும் முடிவுக்கு வந்தாள் போலும்.

தலைவன் தலைவி இருவருமோ தெய்வத்தின் அருளால் இணைந்தவர்கள். அதிலும், தலைவனோ இயல்பாக அருட்குணம் உடையவன். அவனிடம் அமைந்த அருட்குணத்தின் பண்புகளினால்தான் அவளின் காதல் நெஞ்சத்தில் அவன் தெய்வமாக உறைந்துள்ளான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தெய்வத்தின் அருள் - இன்று பிரிவினால் உழலும் அவளுக்கு நல்காது இருக்குமானால் அத் தெய்வத்தையே உலகம் வாய்க்கு வந்தபடி தூற்றுமல்லவா?

அவளுக்கு அவன் தெய்வந்தான்!

தெய்வத்தின் இயல்பு அருட்தன்மையால் நிறையப் பெற்றதொன்று. நிறைவுள்ள அருட்தன்மையை அவள் நெஞ்சத்தின் தெய்வமான ஆருயிர்த் தலைவன், அவளுக்கு நல்காமல் வேறு தெய்வம் அருளப்போவதில்லை. அருளும் என்று அவள் நினைக்கப் போவதுமில்லை. அவன் அவளைப் பிரிந்து வேற்றூர்க்குச் சென்றதாகத்தான் உலகத்தார்க்கு எண்ணம். ஆனால், அவனோ தெய்வத்தன்மையாய் - ஆத்மீகமாய் - என்றும் அவள் நெஞ்சத்தே இரண்டறக் கலந்துள்ளான் என்பதை உலகம் எப்படித்தான் அறியும்! தெய்வமாகிய தலைவனின் தழுவுதல் பிரிவுக் காலத்தில் இல்லாததால், அவன்பால் அருளின் இயல்பு இல்லாமல் அன்று. அவனிடம் இயல்பாய் அமைந்த அருட்பண்பு மீண்டும் வந்து அவளைத் தழுவும்போது நன்றாய் வெளிப்பட்டுவிடும். அதனால், அவள் மேனியின் பசலையோ இருந்த இடம் இன்னதென்றே தெரியாமல் மறைந்தும்விடும். இவைகளை எண்ணித்தான் அவள் தன் மேனியின் பசலைக் கோலங்களை மீண்டும் மீண்டும் தன் விரல்களால் வருடி வருடி மூடி மறைக்க முற்படவேயில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமையின் தாக்கம்

**வா**டைக் காற்று உரமாக வீசிக்கொண்டே இருந்தது!-

கடலையும் கரு மேகத்தையும் ஒன்றோடொன்று பொருதவிட்டு வேடிக்கை பார்க்கத் தொடங்கியது கார் காலம். நண்பகல் கழிந்து – மாலையின் ஆரம்பக் கட்டமே இராக்காலத்தின் தொடக்கத்தைப்போல் காட்சியளித்தது. காற்றோடு சேர்ந்து மெல்லிய தூறல்! அத்தூறல் – சிறிய நேரத்திலேயே பெரு மழைக்கு அடிகோலியது. மண்ணே அதிரும்படி எங்கும் சோவெனப் பெரு மழை கொட்டத் தொடங்கியது.

முதுவேனிற் காலத்தில் வற்றி வரண்ட கண்டல் மரங்கள் கனத்த மழையில் மூழ்கி அப்பொழுதே கவின் உருவைப் பெறத் தொடங்கின. காதலரைக் கண்ட காரிகையர் போல் தன் அடர்ந்த இதழ்களுடன் குதூகலித்து நின்றன. ஞாழல் மரத்தில் தன் பெடையுடன் வாழும் அன்றில் பறவை மேலும் மேலும் தன் பெடையை அணைத்து மழை பொழியும் வானத்தை வாழ்த்துவது போல் முணங்கத் தொடங்கியது. இவை எல்லாவற்றினுடைய இன்பத்தின் களிப்பைக் கண்ட தலைவிக்கு ஏனோ ஒருவித சஞ்சலத்தின் பீடை முன்னதை விடப் பன்மடங்காகப் பிடித்தது. செல்வ மனையில் செந்தமிழ்ச் சேர்ப்பனுடன் இணைந்து இன்பங்காண வேண்டிய கார் காலத்தின் தனிமை – அதன் இனிமை – அவளைப் பொறுத்த வரையில் வீணாகவே கழிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

–தம்மைக் காதலித்தார்க்குக் காதலர் செய்யும் தலையான – மேலான – அன்பு, உயிர் வாழ்கின்றவர்க்கு வானம் மழையைப் பெய்து காப்பாற்றுதலைப் போன்றதுதான்.

*வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் - வீழ்வார்க்கு*
*வீழ்வார் அளிக்கும் அளி.* (குறள் - 1192)

இதைத் தன்மீது – தனக்கு நேர்ந்த இத் தனிமையான வாழ்வின் மீது – கழிவிரக்கங் கொண்டுதான் அவள் சொல்லியிருக்க வேண்டும்.

உரிய காலத்தில் அனைத்து உயிர்களையும் காக்கும் கார் காலத்து வானம், அவளையும் ஓர் உயிர் என மதித்துக் காக்கலாமே என்றால்,– அவள் கார்காலத்து வானத்தால் மகிழக்கூடிய – உயிர் வாழக்கூடிய – உயிரில்லையே. உண்மையில் அவளை மகிழ வைப்பதோ – உயிர் வாழ வைப்பதோ – அவள் ஆருயிர்த் தலைவனின் தலையளியான அன்பின் அரவணைப்பே தவிர வேறொன்றுமில்லை. அந்த அன்பின் தலையளியான அரவணைப்புக்கு உரிய காலமே கார் காலந்தான். கார் காலத்தில் தலைவனுடன் இணைந்து பெறாத சுகத்தை வேறு எக் காலத்தில் பெற்றும் ஒன்றுதான். பெறாததும் ஒன்றுதான். அதனால்தான் சோவெனப் பெய்யும் வானத்தின் பயத்தலான மழையையும், மழையினால் தென்பூட்டும் உயிர் வர்க்கங்களையும், உன்னிப்பாய்ப் பார்த்தாள் போலும். பார்த்த அவளுக்கு காதலித்தார்க்குக் காதலிக்கப்பட்டார் காட்டும் அருள் உடனே நினைவுக்கு வந்திருக்கவேண்டும். அந்த அருட்பேறு உலகத்தின் பல்வேறு உயிர்களுக்கெல்லாம் கிடைத்தபோதும் தனக்கு மாத்திரம் கிடைக்காத நிலையை எண்ணித்தான் அவள் அதைச் சொல்லியிருக்க வேண்டும்.

தனிமைப் பொழுது இணைந்த காதலர்க்கு இன்பம் அளித்தபோதும் அதே தனிமைதான் பிரிந்த காதலர்க்குத் துன்பத்தைக் கொடுக்கின்றது. அதிலும் கார் காலத்தின் தனிமை தரும் மாபெருங் கொடுமையைச் சொல்லாற்கூட விவரிக்கவே முடியாது. விவரிக்க முடியாத அதே கொடுமையிற்தான் தனியளாய் – நடுமரமாய் – வெளிப்புறத் தூணில் கையைப் பற்றி நின்று பரந்த கடலையும் கரையையும் பார்த்தாள் தலைவி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது தொலைவில் மேற்கு முனையில் தெரிகின்ற அடப்ப மலர்கள் செறிந்த உயர்ந்த அடைகரையிற்தான் அவனும் அவளும் எத்தனையோ இரவுகளை இன்பமாகக் கழித்தனர். அவர்கள் பெற்ற இன்பத்தின் பெருக்கான அலைகளைப் போலவே கடலானதும் தன் அலைகளின் கரங்களைக் கரைமீது அடித்துக்கொண்டது. அலைக் கரங்களின் ஓயாத தழுவுதலால் தூர்ந்துபோகும் கரையைப் போலவே அவள் மேனியும் இன்று தூர்ந்து போகக்கூடிய நிலையிற்தான் உள்ளது. ஒவ்வொரு அலையும் மடிந்து மடிந்து கரையுடன் பொருதும் பெருமுழக்கங்கள் அவளின் தனிமைக் கோலத்தைப் பார்த்துப் பார்த்து பரிகாசப்படுத்துவதுபோல் இருந்தது. அப் பரிகாசத்துக்கு எதிர் மாறாக அவள் தன் நெஞ்சத்தை விளித்துச் சொன்ன சொல்லைக் கடல்தான் அறியுமா? அல்லது கரைதான் அறியுமா?

–'நெஞ்சமே!– நீ பல்லாண்டு வாழிய! நீ பல்லாண்டு வாழிய! அன்பு இல்லாதவரிடம் உன் மிகுந்த துன்பத்தைச் சொல்கின்றாயே!– அது உனக்கு எத்துணைதான் பயனை அளிக்கும்! அதைவிட எளிதாக இந்தக்கடலைத் தூர்ப்பாயாக!' என்றாள்.

***உறாஅர்க்(கு) உறுநோய் உரைப்பாய் - கடலைச்***
***செறஅஅய் வாழிய நெஞ்சு.*** *(குறள் - 1200)*

கடலைத் தூர்க்கும்படியாகத் தன் நெஞ்சத்தை ஏவினாளே! – அதே நெஞ்சம் அக் கடலைத் தூர்த்து அளிப்பதற்குச் சிறிதேனும் முற்படுகின்றதா? நெஞ்சத்துக்கு நன்றாகத் தெரியும் அவள் எண்ணியது ஒன்று; சொன்னது வேறொன்று என்று. அவள் எண்ணியது பரந்து விரிந்த நீலக் கடலையன்று; விரகதாபத்தின் கடலைத்தான். ஒரு விதத்தில் மப்பு மந்தாரமான வேளையில் அவள் காண்கின்ற – கரையைத் தூர்த்து அழிக்கின்ற நீலக்கடலும், பிரிவிலே – தனிமையின் கோரப் பிடியிலே அவளை ஆட்கொண்ட விரகதாபத்தின் கடலும் ஒன்றுதான். கடலானது கரையைத் தூர்த்து அழிப்பதுபோல விரகதாபத்தின் கடலும் அவளை மெல்ல மெல்ல அழிக்கின்றது. நல்ல வேளையாக முற்றாகவே அவளை அழிப்பதற்குள் – அவ் விரகதாபக் கடலின் தாக்கங்களில் இருந்து அவளைக் காப்பதற்கென்று ஒரு நல்ல செய்தியை அவள் ஆருயிர்த்தோழி கொண்டு வந்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே செய்திதான் இப்போது அவள் நெஞ்சத்துள் துன்பத்தோடு இன்பமாக அலைபுரளத் தொடங்கியது.

பைந்தமிழ்ப் பாண்டி நாட்டில் இருந்து சோறுடைத்த சோழ நாட்டுக்குத் தலைமைத் தூதுவனாகச் சென்ற தலைமகன் தான் குறித்துச் சென்ற பகைவினையை வெற்றியோடு முடித்துத் தாயகத்துக்கும் மன்னனுக்கும் மாபெரும் மதிப்பைத் தேடித் தந்துள்ளான் என்பதால், அவன் வந்ததும் முடியுடை வேந்தன் அவனுக்கு மந்திரிப் பதவி வழங்கப் போவதாகவும் அரண்மனையில் ஒரு செய்தி பலமாக அடிபடத் தொடங்கியது. அச் செய்தியின் முழு விளக்கத்தையும் நேற்றுத்தான் அவள் ஆருயிர்த்தோழி ஒன்றும் விடாமல் அவளுக்குச் சொன்னாள். அவள் சொல்லுந்தோறும் தலைவியின் இதயத்தில் ஏற்பட்ட இன்பக் கிளர்ச்சிக்கு அளவேயில்லை. அவ்வின்பக் கிளர்ச்சி அவள் முகத்தில் புதிதான ஒளியாய்ப் பிரதிபலித்தது. அந்த ஒளிவட்டம் விடியும் வரையிற்தான் அவள் மதிமுகத்தில் கௌவிக் காணப்பட்டது. மீண்டும் பழையபடி அதே கடலும், அதே கரையும், அதே வானமும், ஒவ்வொரு முனைகளாக நின்று தனிமையில் இருந்த அவளுக்குத் துன்பத்தின் தாக்கங்களைச் செய்யத் தொடங்கின. அத் தாக்கங்களில் இதுவரை நேரமும் மெலிந்து உழன்றவள் திடீரென்று நேற்றுத் தான் கேள்வியுற்ற தலைவனைப் பற்றிய புகழான செய்தியில் தென்பு ஏறியவளாய் இன்பத்திலே சிறகடித்துப் பறப்பதுபோன்ற உள்ளுணர்வைப் பெற்றாள். அவ்வுணர்வைப் பெற்றதினால்தான் என்னவோ அக் கணமே தன்னை மறந்து, – 'நெஞ்சே! யான் ஆசையுற்றவராகிய என் தலைவர் மீண்டும் வந்து எனக்கு அன்பு செய்யார் எனினும் அவரைப் பற்றிய புகழான ஒரு வார்த்தையைத் தன்னும் யான் கேட்டகப்பெறின் அது எனக்கு எவ்வளவு தூரம் இனியதாக – இன்பமாக – இருக்கின்றது தெரியுமா?!' – என்றாள்.

***நசைஇயார் நல்கார் எனினும், அவர்மாட்டு***
***இசையும் இனிய செவிக்கு.***

(குறள் - 1199)

தனிமையிற் புரண்டு புரண்டு இரவென்றும் பகலென்றும் துடித்துத் துவளும் தலைவிக்குத் தலைவனைப் பற்றிய செய்தியாயினும் கைகொடுத்து உதவட்டும்! இன்பத்தை அனுபவிக்க வேண்டிய காலத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வின்பத்தின் சிறு துளியைக்கூட அனுபவிக்காது - அதற்காக ஏங்கும் அவளுக்கு - தலைவனைப் பற்றிய செய்தியைத் தவிர, இப்போது இன்பத்தை அளிக்கக் கூடியது வேறு என்னதான் உண்டு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைந்து அவன் புலம்பல்

**எ**ன் நெஞ்சத்தில் குடிகொண்ட வஞ்சிக் கொடியாளை யான் நினையாத நேரமே இல்லை. இரவென்றும் பகலென்றும் அவளுடைய இனிய முகம் என் கண் எதிரில்பட்டு விதம்விதமான அழகிய கோலங்களைப் போடுகின்றன. இராக்காலத்தின் வானத்திரையில் பிரகாசிக்கும் வெண்ணிலாவையும் விண்மீன்களையும் பார்க்கின்ற போதெல்லாம் நாணுற்ற அவளின் வட்ட முகமும் அம்முகத்திலே மின்னித் தெறிக்கின்ற வளைவான கோடுகளுந்தாம் நினைவுக்கு வரும். பகற்காலத்தில் பூத்துக் குலுங்கும் பல வண்ண மலர்களைப் பார்த்திருக்கின்றேன். அவற்றுள் ஒரு மலர்கூட அவளின் முகத்துக்கும் இதழுக்கும் மென்மைக்கும் ஒத்து வருவதாக இல்லை. யான் இருக்கின்ற இயற்கைச் சூழல் எல்லோர் மனதுக்கு மகிழ்ச்சியையும் தென்பையும் ஊட்டக்கூடியதாக இருந்தபோதிலும் எனக்கு மாத்திரம் நரகவேதனையின் சுழற்சியாகத்தான் இருக்கின்றது.

இன்பத்தையும் துன்பத்தையும் தேடிக் கொள்வது நம் மனந்தான். மனம் சரிப்படாதவிடத்து இன்பபுரியாம் சுவர்க்கம் கூட நரகத்தைவிட மிகவும் கொடுமை வாய்ந்ததாகத்தான் இருக்கும்.

பகைவினை முடிப்பதற்கு வந்தேன்! பகைவினையும் வெற்றியோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்துவிட்டது. வெற்றிச் சிறப்பில் எல்லோரும் களிப்புக் கடலில் மிதக்கின்றபோது ஏனோ என்னால் மாத்திரம் அக்களிப்பில் மிதக்க முடியவில்லை. என் உடல் மாத்திரம் இங்கு தன்னுணர்ச்சி அற்ற பொறிபோல் இயங்குகின்றதே தவிர, மனம் அதனோடு இணைந்து இயங்கக் காணோம். மனம் இருக்கின்றதே, அதற்குத் தொலைவு என்ற ஒன்று புதிர் போடவோ – எதிர்போடவோ – முடியாது. அதனால்தான் தனிமை வேளையில் என் ஆருயிர் மனைவியோடு இங்கிருந்து உறவாடுகின்றேன். அந்த உறவாடல் கூட எனக்கு இல்லாவிட்டால் எனக்கென்ற தனி மகிழ்ச்சியையும் குதூகலத்தையும் நான் இங்கிருந்து எப்படித்தான் பெறமுடியும். என் மனமோ முதலில் அவளை நினைக்கின்றது. அதை அடுத்து அவளோடு கலந்து மகிழ்ந்த இன்பத்தை நினைக்கின்றது. அந்த இன்பத்தின் மீது – இனிமையின் மீது – எழுந்து தொடர்கின்ற நீங்காத நினைவுகள் என் நெஞ்சத்தில் சதா அலை மோதுகின்றன. அதனால், அவளைப் பிரிந்து தனித்திருக்கும் நானோ சில சமயங்களில் தீராத பெருமகிழ்ச்சியில் திளைத்து விடுகின்றேன்.

'கள்' என்பது மகிழ்ச்சியை அளிக்கக்கூடியது ஒன்றுதான். அது உண்டபோது மாத்திரந்தானே மகிழ்ச்சி. ஆனால், உண்ணாமலே உள்ளத்தால் உள்ளுந்தோறும் – நினைக்குந்தோறும் மகிழ்ச்சியை அளிக்கக்கூடியது ஒன்று உண்டு. அதுதான் காமம்! காமத்தைக் கண்டு – கேட்டு – உண்டு – உயிர்த்து – உற்று அறியவேண்டும் – பெறவேண்டும் – என்ற நிலை அதற்கு இல்லை. அதை ஒருமுறை மனத்தால் நினைத்தாலே போதும். தீராத பெருமகிழ்ச்சியையே தந்து விடுகின்றது.

கள் உண்ட அளவிற்தான் மகிழ்ச்சி. அதிகமாக அதை உண்டுவிட்டால் மகிழ்ச்சிக்குப் பதிலாக மயக்கத்தையும் உடலுக்குத் தளர்ச்சியையும் கெடுதியையும் கொடுத்துவிடும். காமம் அப்படியன்று. அதை நினைத்தாலே அதன்மட்டில் எழுகின்ற பெருமகிழ்ச்சியானது, அளவற்ற இன்பத்தை – இனிமையை – ஊட்டுகின்றது. அந்த இனிமைக்கு அழிவில்லை. குறைவில்லை. உண்மையில் கள்ளையும் காமத்தையும் ஒருசேர சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, கள்ளைவிடக் காமம் இனிமையானதாகவே விளங்குகின்றது. அந்த இனிமையால்தான் உணர்வும் வளர்கின்றது. உடலும் உரம் பெறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உள்ளினும், தீராப் பெருமகிழ் செய்தலால்,*
*கள்ளினும் காமம் இனிது.*

*(குறள் -1201)*

விசித்திரம் நிறைந்த புதிர்களை உள்ளடக்கியதுதான் வாழ்க்கை. அல்லாவிட்டால் அவள் பிரிவால் உண்டாகும் பெருந்துன்பம், அவள் நினைவால் இல்லாமல் போகுமா?

எல்லாவற்றிலும் இனியது காமந்தான். அந்த இனிமை ஒன்று இல்லாவிட்டால் என் நாட்டுக்கும் என் மன்னனுக்கும் பெருமை அளிக்கக்கூடியதாக என் செயலைத் திறம்படச் செய்திருக்கவே மாட்டேன்.

ஒரு நாளின் ஒரு கூறிலே பகற்பொழுது ஒருவாறு கழிந்துவிடுகின்றது. அரசியற் கடமைகளில் ஈடுபடும் எனக்கு அக் கடமைகளின் ஈடுபாடு கொள்ளும்போது நாளையும் பொழுதையும் ஓட்டுதற்குத் துணையாகவே இருக்கின்றது. ஆனால், என்னையே தன் நெஞ்சத்தின் தெய்வமாகக் கொண்டு வழிபடும் அவளுக்கு எப்படித்தான் பொழுது போகின்றதோ! திருமணமாகி மூன்று திங்கள் ஆகுவதற்குள் கணவன் பிரிவது என்றால் அதை எந்தப் பெண்தான் விரும்புவாள். என் கடமையின் தகைமையை நன்றாக உணர்ந்து பழக்கப்பட்டவளாய் இருந்தும் என் பிரிவைக் கேள்வியுற்றதும் நெஞ்சம் பதறினாள். வேதனை தாளாதவளாய் – அதை வெளியிற் காட்டிக் கொள்ளாதவளாய் – பிரிவதற்கு இரண்டு நாளுக்கு முன்னம் என் கரங்களைத் தன் நெஞ்சோடு பற்றி – தன் முகத்தோடு ஒற்றி – கண்ணீர் சிந்தினாளே! – அதை இன்று வரையென்ன என்று வரையுந்தான் என் நெஞ்சம் மறக்குமா?! ஒருநாள் இரவு யாமத்திலேதான் அது நடந்தது. என் பிரிவை யான் சொல்லாமலே தன் தோழியின் வாயிலாகக் கேள்வியுற்றுத்தான் இவ்விதம் செய்கின்றாள் என்பதை நான் அறியாதவனல்லன். எப்படியோ பிரிவதற்கு முன் அப் பிரிவை சாமர்த்தியமாக நல்ல தருணம் பார்த்து அவளுக்குச் சொல்ல வேண்டும் என்றுதான் இருந்தேன். நல்ல வேளையாக அந்தச் சமயமும் அதற்கேற்றதாக இருந்ததால் மெல்ல பேச்சை ஆரம்பித்தேன்.

–'அன்பே! உன் கண்களில் கலக்கந்தான் ஏனோ?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

–‘அத்தான்! தாங்கள் என்னை விட்டுப் பிரியமாட்டீர்களே!’

–‘கண்ணே! உன்னைப் பிரிந்துவாழும் ஒரு கணப்பொழுதையும் எப்படித்தான் ஆற்றி வாழ்வேனோ தெரியவில்லை!’

–‘அப்படியானால், தாங்கள் என்னைப் பிரிந்துதான் வாழப் போகின்றீர்களா?!’

–‘அன்பே! நான் என்ன செய்வேன்! மன்னவன் ஆணைக்கிணங்க ஒரு சில திங்கள் வெளியூர் சென்று பகைவினை முடிக்கும் அரசியற் கடமைகளை ஆற்றவேண்டியவனாக இருக்கின்றேன்!’

இதை நான் சொல்லி வாய்மூடவில்லை. அதற்குள்ளாகவே அவளுடைய வட்டக் கண்கள் நீரால் தேக்கம் அடைந்தன.

–‘அன்பே! நீ இவ்வாறு வருந்தலாமோ! உன்னைப் பிரிந்து வாழ்வது எனக்கும் அளவற்ற துன்பந்தான். என் செய்வது! தளபதியாயும் தலைமைத் தூதுவனாயும் கடமைபுரியும் நான் இந்தப் பொறுப்பை ஏற்று வெற்றி காண்பதுதான் என் ஆண்மைக்கும் தகுதிக்கும் அழகு!’

நான் சொன்ன இந்த உணர்ச்சி வசமான சொற்கள்தாம் அவளுடைய நெஞ்சை ஈற்றிலே திடப்படுத்தி இருக்கவேண்டும். அல்லாதிருந்தால், ‘அத்தான்! எனக்கு நன்றாகப் புரிகின்றது! நன்றாகப் புரிகின்றது! வெற்றியோடு சென்று வாருங்கள்!’ – என்று அவ்வேளை சொல்லி இருப்பாளா! மேலும், சற்று நேரத்தின் பின் தன் மலர் முகத்தை என் தோட்பரப்பில் புதைத்துக் கொண்டு குழைவாக – உயிர்த்துடிப்போடு என்னிடம் ஒன்று கேட்டாளே! – அந்தக் கேள்விக் குறியில் அடங்கியுள்ள அவள் உணர்ச்சியின் தேக்கத்தை எவ்வளவுதான் என அளவிட முடியுமா!

–‘அத்தான்! என்னை மறக்கமாட்டீர்களே?’

இதைத்தான் அவள் கேட்டாள்.

பிரியப் போகும் என்னிடம் மனைவி என்ற உரிமையுடன் இதை அழுத்தமாகவே கேட்டாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

–'அன்பே! நான் எங்கிருந்தாலும் என் உயிரின் இயக்கம் நீதானே! எக் காலத்திலும் எப் பிறப்பிலும் நாம் இருவரும் வேறு அல்லம் கண்ணே!' என்றேன்.

***விளியும்என் இன்னுயிர் வேறல்லம் என்பார்***
***அளியின்மை ஆற்ற நினைந்து.***

*(குறள் - 1209)*

இதற்குமேல் எந்த வார்த்தையும் என் நாவில் எழவில்லை.

'காதலில் பிணைப்புண்டவர்கள் உடல் வேறாக இருப்பினும் உயிர் ஒன்றுதான்! இதை அன்று உணர்ந்து சொன்னேனா? உணராமல்தான் சொன்னேனா?

அன்று உணராவிட்டாலும் இன்று அத் தத்துவத்தைப் பரிபூரணமாக உணர்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைந்து அவன் புலம்பல்

**பா**ல்வெண்ணிலா நன்றாகக் காய்கின்றது!–

படுக்கையில் நொந்து பரதவிக்கும் எனக்கு மேலும் இந் நிலா விரகதாபத்தின் துன்பத்தை அளித்தாலும், ஒரு விதத்தில் என் ஆருயிர்த் தலைவனைக் காண்பதற்குத் துணையாக இருக்கின்றது அல்லவா!

–'நிலாவே! என் அன்பர் என்னைவிட்டுப் பிரியாதவராகத்தான் இருந்தார். ஏனோ கடமையின் பொருட்டு இறுதியில் பிரிந்தும் விட்டார். பிரிந்தவரை என் கண்ணாற் தேடிக் காணும்படியாக நீ மறைந்து விடாமல் என்கூட விழித்திருப்பாயாக!'

*விடாஅது சென்றாரைக் கண்ணினாற் காணப்*
*படாஅதி வாழி மதி*

*(குறள் - 1210)*

–'விழித்திருக்கும் எனக்கு உன்னைத்தவிர யார்தான் துணை! புறத்தால் துணை என்று சொல்பவர் எல்லோரும் நிம்மதியாக உறங்குகின்றனர். அவர்களுக்கு என்னைப் பற்றி என்னதான் கவலை!'

என் கவலைக்கு யான்தான் பொறுப்பு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதல்லாமல், என் கவலையைத் தீர்த்துக் கொள்ளக்கூடிய சக்தி சுற்றத்துக்கோ – அயலுக்கோ – உலகத்துக்கோ இல்லை. கவலைக்கு ஏதுவாய் அமைந்தவர் அவர்தானே! ஏதுவாய் அமைந்த அவரால்தான் என் கவலையை முற்றாகத் தீர்க்கவும் முடியும். இன்றும் அவர் திரும்பி வராவிட்டாலும் அவரை நினைத்தாயினும் என் கவலையை நானே போக்கலாம் என்றால் அதுவும் சரிப்படுவதாக இல்லை. அவர் என் உயிரோடும் உள்ளத்தோடும் இணைந்து கலந்தபின் அவரை ஒரு கணப்பொழுதேனும் மறந்து எப்படித்தான் வாழமுடியும்! அவரை மறந்தறியாமல்தான் சதா நினைக்கின்றேன். நினைக்குந்தோறும் நினைத்த மாத்திரத்திலேயே ஒருபுறம் பிரிவுத்துன்பம் என் உள்ளத்தைச் சுடுகின்றது. அது சுடுகின்றதே என்பதற்கு அஞ்சி அவரை நினைக்காமல் மறந்துவிட்டால் நான்தான் என்ன ஆவேனோ?!'

***மறப்பின் எவன்ஆவன் மன்கொல் - மறப்(பு)அறியேன்***
***உள்ளினும் உள்ளம் சுடும்.***

*(குறள் - 1207)*

அவரின் பிரிவுத் துன்பம் நெருப்பினைப்போல் சுட்டு எனக்கு அளவற்ற வேதனையைத் தருவதென்றாலும், அதேவேளை அவ் வேதனையின் தாக்கத்தோடு அவரின் நினைவு அலைகள் இனிமையென்னும் காமத் தேனைத் தரத்தான் செய்கின்றன. அவரை நினைக்கின்றபோது அவரோடு கலந்து மகிழ்ந்த கடந்தகால இன்ப ஊற்றின் வெள்ளம் என் நெஞ்சத்தில் எழுந்து எழுந்து புரளாமல் இருக்க முடியுமா? அப்படிப் புரள்வதினால்தான் பிரிவுத் துன்பத்தில் சாகவேண்டிய நான் இதுவரையும் சாகாமல் இருக்கின்றேன்.

அவரைப் பற்றிய நினைவு எனக்குத்தான் உண்டு என்றால் என்னைப்பற்றிய நினைவு அவருக்கு உண்டா? அடிக்கடி எனக்குத் தும்மல் வருவதுபோல் இருந்து வராமல் அடங்கி விடுகின்றதே! ஒருவருக்குத் தும்மல் எழுமானால் அவரைப்பற்றி அவரின்மேல் உயிர்த்துடிப்பான அன்புடையார் நினைக்கின்றார் என்பதுதானே அர்த்தம்! எனக்கோ உயிர்த் தொடர்பாக இருப்பவர் அவர்தானே! மேலும், அவரின் தொடர்பு இந்தப் பிறப்பில் மட்டுந்தானா ஏற்பட்டது! பல பிறப்புக்களின் தொடர்ச்சியாக ஏற்பட்டதன்றோ அவரின் தொடர்பு. இவ்விதம் தொடர்புடைய அவர் என்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவிடாமல் நினைத்திருந்தால் நிச்சயமாக எனக்குத் தும்மல் வந்துதானே தீரும்! தும்மல் வருவது போல்தான் இருக்கின்றது. ஆனால், முற்றாக வெளிவருவதற்குள் அத் தும்மல் என்னுள் அடங்கி விடுகின்றதே! ஏன்தான் என்னுள் அடங்குகின்றதோ! அப்படி அடங்குவதால் காதலர் தாமும் என்னை நினைப்பவர் போன்று நினையாமல் விடுகின்றாரோ!

***நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்***
***சினைப்பது போன்று கெடும்.***

*(குறள் - 1203)*

என்னை நினையாமல் எப்படித்தான் அவரால் இருக்க முடியும்!

'நாம் இருவரும் வேறு அல்லேம்' என்று அடிக்கடி சொல்வாரே! அதிலும், பிரிவதற்கு ஒருசில நாட்களுக்கு முன் இரவு நடு யாமத்தில் என்னை அணைத்தவாறு 'யாம் இருவரும் வேறு அல்லேம்' என்று அழுத்தமாகக் கூறினாரே! அவர் கூறிய அந்தக் கூற்று என்னைத் தேற்றுவதற்காக வெறும் வாயளவால் கூறியதுதானா? அப்படி அவர் கூறும் தகைமையர் அல்லரே! அழுத்தமாகத் தன் நெஞ்சத்தின் உள்ளீடாகத்தான் உயிராலும் உணர்வாலும் 'யாம் இருவரும் வேறு அல்லேம்' என்றார். அப்படிச் சொல்லிப் பிரிந்தவர் விரைந்து திரும்பாமல் இன்னும் ஏன் வேற்றூரில் காலத்தை ஓட்டவேண்டும்! முன்பெல்லாம் என்னருகே இருந்து குழைந்துதானே அன்போடு அம்மொழியைச் சொன்னார். அப்போது நானும் அவரும் உயிராலும் உணர்வாலும் ஒன்றுதான் என்பதில் எள்ளளவேனும் ஐயமே இல்லை. ஆனால், பிரிந்து வாழும் இக்காலத்திலும் நானும் அவரும் ஒன்றாக இருக்கின்றோமா? அன்று நம் இருவரின் உடல்களும் இணைந்து புணர்ந்து கலந்தபோது அவ்வுடல்களின் பிணைப்பைப் போலவே உயிரும் உணர்வும் ஒன்றாகத்தான் பிணைந்து இருந்தன. அதேபோல் உடல் வெவ்வேறாக நூற்றுக்கணக்கான பலகாத தூரங்கள் பிரிந்தபின்னும் முன்னம் இருந்ததைப் போன்றே உயிரும் உணர்வும் ஒன்றாகத்தான் இருக்கும் என்பதை எப்படித்தான் உறுதியோடு சொல்லமுடியும்! என்னைப் பொறுத்தவரையில் என் உயிரும் உணர்வும் அவர்வசமாகவே இயங்குகின்றன. என் உயிரினதும் உணர்வினதும் இயக்கத்தைப் போல் அவரின் உயிரும் உணர்வும் என் வசமானதாகவே இயங்கினால் இத்தனை நாட்களில் திரும்பி இருப்பாரே! அவர் திரும்பாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதினால், ஒருவேளை அவர் இப்போது என்மீது அன்பில்லாமல் இருக்கின்றாரோ! முன்னம் அன்பு உள்ளவர் அன்பின் உணர்ச்சிப் பெருக்கால் 'யாம் இருவரும் வேறு அல்லேம்' என்று குழைந்து என்னை அணைத்துச் சொன்னவர் இன்று அன்பு இல்லாதவராய் – என்னை அந்தப் பிரிவுத் துன்பத்தின் அவல நிலையில் ஆக்கியவராய் – இருக்கின்றார் என்றால், அவர் எத்துணை வன்நெஞ்சம் உடையவர் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

தலைவரின் இந்த வன்மையான - கொடுமையான, நெஞ்சால் என் இனிய உயிர் அவரை நினைந்து நினைந்து – உருகி உருகி – அழிய வேண்டியதுதான்! அழிய வேண்டியதுதான்!

***விளியும்என் இன்உயிர் - 'வேறுஅல்லம்' என்பார்***
***அளிஇன்மை ஆற்ற நினைந்து'.***

*(குறள் - 1209)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவும் நினைவும்

**ப**னித்துளிகள் பட்டு உதிர்ந்துவிழும் நெய்தற் பூக்கள் பரவலாய்க் கிடக்கும் பால்வெண் மணலிலே – பாங்கு தமிழ்த் துறைவன் பைந்தமிழ்ப் பாவையாளை அணைத்து மகிழ்ந்தான். அவ்வணைப்பில் புருவத்தின் ஓரமாய் நெளிந்து புரளும் அவளின் நெடுங்கூந்தல் நிலத்தின் மலர்க்குவியலிற் பட்டும் படாமல் வருடியது. அமுங்கியது. முத்துக்களைப் பதித்ததுபோன்ற அவளின் பல்வரிசையில் ஊறும் அமுத நீரைப் பாலிலும் மேலாய் மெய்மறந்து சுவைத்தான். அவளுடைய மதிமுகமும், செவ்விளநீர் மார்பும், அவன் முகத்தினுள்ளும் நெஞ்சினுள்ளும் புதையுண்டன. நீலக் கடலின் நெடும் அலைகள் கரையுடன் மோதி – அக்கரையுடன் அடங்கிக் கலப்பதுபோல் காதலரின் உடலும் உயிரும் தம்முட் தாம் கலந்தன.

–'கண்ணே! என்னுடன் பேசமாட்டாயா?'

–'அத்தான்! தாங்கள் வந்ததும் நிறையப் பேசவேண்டுமென்றுதான் இருந்தேன். ஆனால், உங்கள் வருகையைக் கண்டதும்...'

–'வருகையைக் கண்டதும்! பேசு அன்பே பேசு! குயிலினும் இனிய உன் குரலைக் கேட்டு எத்தனை நாட்கள் ஆகின்றன தெரியுமா!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

–'அன்பரே! இனிமேல் தாங்கள் என்னைவிட்டுப் பிரிய மாட்டீர்கள் தானே!'

–'பிரிவா! பிரிவு இத்துணை கொடியது – துன்பத்திலும் துன்பமானது – என்பதை ஏற்கனவே அறிந்திருந்தேன் என்றால், உன்னைப் பிரிந்திருப்பேனா கண்ணே!'

–'கண்ணாளா! தங்களுக்கு இத்துணை துன்பம் என்றால் எனக்கு எத்துணை துன்பமாக இருந்திருக்கும்!'

–'ஆருயிரே! அதை உணர்ந்துதானே அதிவிரைவாய்க் கடமையை முடித்து வந்தேன்!'

–'அத்தான்!'

–'அன்பே! இனிமேல் நமக்குப் பிரிவென்பதே இல்லை! இன்றுமுதல் உன் கொஞ்சு மொழியில் நெஞ்சங் கலந்து, மெய்மறந்து விடியும்வரை தூங்குவேன்!'

–'அத்தான்!'

இருவருடைய இதழ்களும் ஒன்றாகியதால் தொடர்ந்து பேச்சு எழுவதற்கு இடமேயில்லை.

தலையணையுடன் அமுங்கிக் கிடந்தவளுடைய மலர்முகம் சிறிது நேரத்தின்பின் அசைவுகண்டது. அவ்வசைவோடே உறக்கத்தில் மூடி இருந்த அவள் இமைகளும் மெல்லத் திறந்தன. உடனே தன் வலக்கரத்தை அருகே தடவியபடி பார்த்தாள்.

வெறுமையான மெத்தையைத்தான் அவளது கரம் தடவியதே தவிர, தலைவனின் தோட்பரப்பைத் தடவவேயில்லை. அப்போதுதான் அவ்விடத்தே தலைவன் இல்லாது தான் மாத்திரம் கிடப்பதை அறிந்தாள். இதுவரை தலைவனுடன் கலந்து மகிழ்ந்தது எல்லாம் கனவு என்பதை உணர்ந்தாள். உடனே எழுந்து தலைமாட்டுக் கட்டிற் சுவரோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தியுள்ள விளக்கின் காம்பைத் தூண்டி, கண்களைத் தன் மார்புத் துணியால் துடைத்து, சாளரத்தின் அருகே வந்து அதன் திரைச்சீலையை விலக்கி வெளி உலகைப் பார்த்தாள்!

கடலின் அடிப்புறத்தே கிழக்குவானின் கீழ்க்கோட்டில் இளங் கதிரவனின் வெளிப்புக் காணப்பட்டது. கடலின் அலைகள் மெல்லிய காற்றில் அடுக்கடுக்காய் எழுந்து கரையுடன் இரைந்து - மடிந்து - தவழ்ந்து அடங்கிக் கொண்டே இருந்தன. அப்போது அவள் நெஞ்சத்துள் எழுந்த பெருமூச்சு, கடலின் அலைகளைப் போலவே எழுந்து அவள் நெஞ்சக் கரையுள் அடங்கிவிட்டது. நெய்தற் பூக்கள் செறிந்துள்ள அழகிய கடற்கரைக் கானலில் தான் தலைவனுடன் கலந்து மகிழ்ந்தது எல்லாம் வெறும் கனவின் மாத்திரமே தவிர நனவில் அன்று என்பதைத் தானே நினைத்துப் பார்க்கின்றபோது அவளின் நிலை அவளுக்கே பரிதாபமாக இருந்தது.

–'நனவைப்போல எனக்குக் கொடுமை தருவது வேறொன்றுமில்லை. நனவென்ற ஒரு பாவி இல்லையாயின் கனவின்கண் வந்த காதலர் என்னைவிட்டு ஒருபோதும் நீங்கவேமாட்டார். அதல்லாமல், நனவின்கண் வந்து அன்பு செய்யாதவரைக் கனவுதானே தேடித் தருகின்றது. அது தேடித் தருவதினால்தான் அக் கனவில் அவரைப் பற்றிய காதல் நிகழ்ச்சிகள் எம்மட்டில் உண்டாகின்றன. இதையெல்லாம் இந்த ஊர் நினைத்துப் பார்க்கின்றதா? நனவு ஒன்றையே வைத்து, அவர் நம்மை விட்டு நீங்கினார் என்று இவ்வூரார் அவரையே மேலும் மேலும் தூற்றிப் பேசுகின்றனர். உண்மையிலேயே இந்த ஊரார் என்னைப்போல் அவரைக் கனவில் காண்பதில்லையே?'

***நனவுஎன ஒன்றுஇல்லை ஆயின், கனவில்***
***காதலர் நீங்கலர் மன்.*** *(குறள் - 1216)*

***கனவினால் உண்டாகும் காமம் - நனவினான்***
***நல்காரை நாடித் தரற்கு.*** *(குறள் - 1214)*

***நனவினான் நம்நீத்தார் என்பர் கனவினால்***
***காணார்கொல் இவ்வூ ரவர்.*** *(குறள் - 1220)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்ப மாலை

**வி**ரிந்த தன் ஒளிக் கரங்களை மடக்கி வானத்திரையின் அடி விளிம்பில் தன் முகத்தைப் புதைக்கத் தொடங்கினான் கதிரவன். போர்க் களத்தின் குருதிச் சேற்றில் மடிந்து வீழும் யுத்த வீரனைப்போல் அவனுடைய மறைவு காணப்பட்டது. இரத்தந் தோய்ந்த அவனது உடலை நீல ஆடையால் போர்த்து, அவன் மறைவின் அந்திம காலச் சடங்கிற்கு அறிகுறியாகச் செங்கோடுகள் மேற்குப்புற வானத்தை ஆட்கொண்டன. ஞாயிற்றின் மறைவுக்கு உலகம் என்னும் மங்கை புலம்பி ஓலமிட்டுக் கண்ணீர் சொரிந்து அடங்கி நிசப்தமற்ற நிலையில் கிடப்பதுபோல், கடலும் கரையும் அமைதியாய்க் காணப்பட்டன. அந்த அமைதியை ஊடறுத்து ஓர் ஆரணங்கின் அபயக்குரல் அரண்மனைபோன்ற செல்வமனையின் மேற்குப் புறத்தின் முன் அறையில் இருந்து வெளிக்கிளம்பியது.

மாலை வெய்யோனின் மங்கலான மஞ்சள் ஒளிக்கற்றையை ஊடறுத்து மெல்லிய பனிக்கால்கள் வீசின. அவ் வீசல் முன்பனியின் இனிய காலத்தைக் காட்டி, கலங்கி நிற்கும் காரிகையைப் பரிகாசப் படுத்துவது போல் இருந்தது. காலையில் அரும்பிய அவளுடைய காமநோய் பகற்பொழுதெல்லாம் போதாகி மாலையில் மலரத் தொடங்கின.

***காலை அரும்பி, பகல்எல்லாம் போதுஆகி,***
***மாலை மலரும்இந் நோய்.*** *(குறள் - 1227)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'காமம் என்பது மலரைப் போன்றதுதான். அம் மலரைக் கண்டு களிப்பதற்கும் முகர்ந்து சுகம் பெறுவதற்கும் உரிய காலம் ஒன்று உண்டு. காலம் தப்பிவிட்டால் மலர் வீயாகி நிலத்தில் வீழ்ந்து காய்ந்து சருகாகி விடும்.'

காமத்தின் மலர்ச்சிக் காலமோ இளமைக் காலந்தான். இளமையில் அனுபவித்துச் சுகங்காணாத காமத்தை முதுமையில் அனுபவிக்கலாம் என்பது அறிவீனத்திலும் அறிவீனம். அவ்வறிவீனத்தில் மூழ்கித்தான் தலைவன் இதுவரையும் வினைமுடித்துத் திரும்பாமல் இருக்கின்றானோ?

தலைவன் கூடி இருந்த காலத்தில் மாலைப்பொழுதை எத்துணை இன்பமாக அனுபவித்தாள் தலைவி. அப்பொழுதிலே பெற்ற காம இன்பம் இன்று மாலையில் மலரக்கூடிய நோயாக அன்றோ மாறிவிட்டது. நோய் செய்யும் அளவுக்கு மாலைப்பொழுது இருக்கும் என்பதை அவள் முன் கூட்டியே அறிந்திருந்தால், இப்பொழுது அந்நோயில் வருந்த வேண்டிய நிலை அவளுக்கு ஏற்பட்டு இருக்குமா?

'இன்பத்தில் புரளும் மனித இனம் அவ்வின்பத்தின் மறுபாதியான துன்பத்தை எள்ளளவேனும் நினைத்துப் பார்ப்பதே இல்லை.'

தலைவன் நிலையும் அது போன்றதுதான்.

தலைவனுடன் கூடி இன்பம் அனுபவித்த காலத்தில் மாலையை இன்பப் பொழுதாகக் கொண்டு அம் மாலையின் வரவைத் தினமும் ஆவலோடு எதிர்பார்த்து ஏங்கிய காலங்களை எளிதில் அவளால் மறக்க முடியுமா?!

அன்று அவள் ஏங்கிய நிலை – இன்று எங்கே?!

அன்றிலிருந்து இன்றுவரை மாலைப் பொழுது தினமும் தொடர்ந்துதானே வருகின்றது. முன்னம் மாலைப்பொழுது இன்னும் வரவில்லையே என இன்பத்தை எதிர்நோக்கி ஏங்கியவள்தான் இன்று மாலை வரப்போகின்றதே எனத் துன்பத்தை எதிர்நோக்கிக் கலக்கத்தோடு ஏங்குகின்றாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைப் பொழுதைப் பொறுத்தவரையில் அன்று கழிந்த மாலையும் இன்று கழியும் மாலையும் ஒன்றுதான். ஆனால், அன்று கழிந்த மாலையில் தலைவன் அவள்கூட இருந்தான். இன்று கழியும் மாலையிலோ தலைவன் அவள்கூட இல்லை.

இப்படித் தன்னந்தனியனாய் இருந்தால் மாலை தன்னைக் கொடுமைப்படுத்துமே என்பதைத் தலைவனுடன் கூடியிருந்த காலத்தில் அவள் நினைத்துப் பார்க்கவே இல்லை. நினைத்துப் பார்த்திருந்தால் – அதை உணர்ந்திருந்தால் – தலைவன் தன்னைப் பிரிந்து வாழ்வதற்கு ஒருபோதும் அவள் சம்மதப்பட்டு இருக்கவேமாட்டாள். சம்மதப்பட்டதினால்தான் இன்று அவள் கொலை செய்யும் இடத்தில் பகைவர் மத்தியில் அகப்பட்டதுபோல், மாலைப் பொழுதின்கண் அகப்பட்டு நிலைதடுமாறிக் கலங்குகின்றாள். காதலன் இல்லாதபோது அவள் வாழும் இடம் அரண்மனைபோன்ற செல்வச் செழிப்பான மனையாக இருந்தாலும் உண்மையாக அது பகைவரின் கொலைக் களமாகத்தானே இருக்கும்!

***காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து***
***ஏதிலர் போல வரும்.***

*(குறள் - 1224)*

தலைவனின் பிரிவிலே துன்புற்றுத்துடிக்கும் தோகைக்கு அவள் மனைகூட இரத்தக்கறை படிந்த கொலைக் களந்தான். அதிலும் தன்னந்தனியனாய் ஒரு துணை கூட இல்லாமல் அனாதைக் கோலமாய் அவள் இருக்கும்போது அக் களத்தில் பகைவரும் வந்துவிட்டால் அவளின் நிலை என்னவாகும் என்பதைச் சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை. முன்னம் மாலைப் பொழுது விரைந்து வரவேண்டுமென்றே அவாவுற்றாள். இன்றோ அப் பொழுது வரப்போகின்றதே எனக் கலங்குகின்றாள். அக் கலக்கம், மாலைப் பொழுதின் வருகையை, கொலைக் களத்திலே உயிரைக் கொல்லும் பகைவரின் வருகையாகக் கொண்டு அஞ்சி ஒடுங்கிக் கலங்கும் கலக்கந்தான்.

பகை என்பது ஒரு நாளிலே தீர்ந்து விடவேண்டும். ஆனால், தலைவிக்கு ஏற்பட்ட மாலை என்னும் கொடிய பகையோ தினமும் தலைகாட்டி அவள் உயிரைக் கொல்ல வருகின்றது. அப்படியே மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பகை அவள் உயிரைக் கொல்ல வருவதும் போவதுமாகவே இருந்தால் அப்பகைக்கு ஒரு முடிவே இல்லையா? முடிவு என்பது அவனால் - அவள் ஆருயிர்த் தலைவனால் - தீரவேண்டுமே தவிர அவளால் தீரக்கூடியது அன்று. தலைவன் பிரிந்தபோது துன்பத்தால் அவள் உயிர் ஊசலாடியது என்றாலும் மாய்ந்து மடிந்து விடவில்லை. அன்று மாயாத அவள் உயிர் இன்று பிரிந்த தன் காதலனை நினைந்து, இம் மாலைப் பொழுதின்கண் மாய்கின்றது. இவ்விதம் அவள் உயிரானது மாய்ந்து மாய்ந்து முற்றாக அழியாத நிலையில் ஊசலாடிக்கொண்டு இருப்பதற்கு மாலைக்கு அவள் செய்த தின்மைதான் என்ன?

தின்மையைச் செய்பவர் பகைவர்தான்!

அப்படியானால், அவள் மாலைக்குப் பகையாளியாக அல்லவோ இருக்கவேண்டும்! அப்படிப் பகை கொண்டவளாக இருப்பாளானால், 'நான் காலைப் பொழுதிற்குச் செய்த நன்மைதான் என்ன?' என்றும், 'என்னைத் தினமும் துன்புறுத்துகின்ற இந்த மாலைப்பொழுதிற்குச் செய்த பகையான தின்மைதான் என்ன?' என்றும் தன் நெஞ்சம் முழுவதையும் திறந்து சஞ்சலத்தோடு சொல்லி இருப்பாளா!

***காலைக்குச் செய்தநன்று என்கொல் எவன்கொல்யான்***
***மாலைக்குச் செய்த பகை?***

*(குறள் - 1225)*

தலைமகன் பிரிந்ததால் எல்லாப் பொழுதுமே அவளுக்குத் துன்பம் நிறைந்ததுதான். அத் துன்பத்தின் இடையீட்டில் இரவுப் பொழுதைக் கழிப்பது அவளுக்கோ பெரும்பாடு. இரவிலே - அதன் கொடுமை நிறைந்த நரக வேதனையின் பிடியிலே - தவிப்பவளுக்குக் காலையின் வரவு ஒரு விதத்தில் மன ஆறுதலைத்தான் அளிக்கும். பகலில் அயலாருடனோ தோழியருடனோ பொழுதை எப்படியோ தாக்குப்பிடித்து ஓட்டி விடுகின்றாள். ஆனால், அதன்பின் வரும் மாலையை அவளால் ஓட்டுவதோ என்றால் மிகமிகக் கடுமையிலும் கடுமை. இரவின் ஆரம்ப நிலை மாலை என்றதினாலேயோ - அல்லது, கடந்த காலத்தில் தலைவனுடன் கூடி மகிழ்ந்த கோலத்தில் மாலை மறக்க முடியாத பல எண்ணவளையங்களை ஏற்படுத்தி மேலும்மேலும் தன்னைச் சஞ்சலப்படுத்தும் என்பதினாலேயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– அம்மாலையின் வரவைக் கண்டாலே அவளுக்குச் சொல்லொண்ணாத வேதனையிலும் வேதனை!

காதலரைப் பிரிந்த கன்னியர்க்கு வேதனை அளிப்பதையே தன் குறிக்கோளாகக் கொண்டு தன் கடைசிக் காலத்திலுங்கூட ஓரவஞ்சனையோடு அவர்களுக்குத் துன்பம் அளிப்பதுபோல், மாலையானது தனக்கே உரிய மங்கலான – தேய்ந்துபோன – இளஞ்சுடரினை மனையின் பலகணியின் மீதுள்ள முன்புற வாயிலில் படும்படி வீசிக் கொண்டே இருந்தது.

இதுவரையும் தனக்குத் துன்பம் செய்யும் மாலையில் பகைமையைக் கண்டிராத தலைவி ஏனோ அம் மாலையின் ஓரவஞ்சனையான கயமை எண்ணத்தை அறிந்து – அதன் மீது பகைமை கொண்டவளைப்போல், அதன் சிறிய ஒளிக் கீறல்கூடத் தன் மனையின் உட்புறத்தே பிரவேசிக்காதபடி மாடத்தின் முன் புறத்திலுள்ள அறைக் கதவினைப் படார் என்று சாத்தி உள்ளே தாழ் போட்டாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணத்தின் சுழற்சி

குதிரையின் கடிவாளத்தைத் தேர்ப்பாகன் ஒரு முறைதான் முடுக்கினான். காற்றிலும் வேகமாய்க் குதிரையின் வேகம் கணத்துக்குக் கணம் அதிகரிக்கத் தொடங்கியது. தேரின் உட்புறத்தே இருந்த தலைமகன் வெளிஉலகை ஒவ்வொன்றாய்ப் பார்த்தான். எத்தனையோ குன்றுகள்; அக் குன்றுகளை எல்லாம் ஒருமித்து வளைத்து ஆட்சிபுரியும் உயர்ந்த அரசபீடம்போல் காட்சிதரும் பெரும் பாரிய மலையின் தொடர்ச்சி; அத்தொடர்ச்சியைப் பல கூறுகளாக்கிக் கிழித்துப் பாயும் அருவிகள்; இவைகள் எல்லாம் அவனை விட்டு நீங்கி விடைபெறும் ஆத்ம நண்பர்களைப் போல் ஒவ்வொன்றாய்க் கழிந்து கொண்டே இருந்தன.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் கணத்துக்குக் கணம் கழிந்துகொண்டு இருக்கும் சம்பவங்கள் எத்தனை! எத்தனை! அவை எல்லாம் அவனுடைய மனம் என்னுந் திரையில் நிழல் இடுவதில்லை. ஏதோ ஒரு மூலையில் புதையுண்டு கிடக்கும் ஒருசில சம்பவங்கள் அவனது நெஞ்சத் திரையில் ஆழப் பதிந்துவிடுகின்றன. ஆழப் பதிந்த அச் சம்பவங்களுக்கோ அவனுடைய வாழ்க்கையைப் பொருத்த வரையில் அழிவென்பதே இல்லை. அவன் வாழுந்துணையும் அவன்கூட அவையும் வாழத்தான் செய்கின்றன.

தலைமகனைப் பொருத்தவரையில் அவன் நெஞ்சத்துள்ளும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில சம்பவங்கள் இதுவரையும் சாகாவரம் பெற்றுத்தான் கிடக்கின்றன. பகை வினை முடிப்பதற்காக வந்தவன் அவ்வினை முடித்து வெற்றிச் சிறப்போடு தன் ஊருக்குத் திரும்பும்போதும் அவையாவும் அவன் நெஞ்சத் திரையில் ஒன்றன்பின் ஒன்றாய் நிழல் இடத்தான் செய்கின்றன. அவற்றுள் முக்கியமாகப் பிரிவதற்கு முதன் நாள் இரவிலே நிகழ்ந்த அச் சம்பவம்!..

நெடும் பொழுதாய்த் தலைமகனோ தன் பாவையாளை அணைத்து மகிழ்ந்தான். அந்த அணைப்பில் கட்டுண்ட அவளும் தன் இரு கரங்களாலும் அவனை இறுக அணைத்துக் கொண்டாள். எவ்வளவு நாழிகைதாம் அவன் அவளை அப்படி அணைப்பது! பாவம்! அவளுடைய வளைக்கரங்கள் நோகும் என்று அஞ்சித்தானோ என்னவோ அவனும் அவளுடைய கரங்களைச் சிறிதே தான் நெகிழ்த்தினான். நெகிழ்த்தியதால், அந்நெகிழ்த்தப்பட்ட இடைவெளிக்கண் குளிர்ந்த வாடைக் காற்று ஊர, அக் காற்று ஊர்ந்த சிறு இடைவெளியைத் தன்னும் பொறுக்காத அவள் கண்கள் பசப்புற்றுக் கண்ணீர் மழையை அன்றோ பொழிந்தன. உண்மையில் அக் காட்சி, அவளுடைய ஒளிபொருந்திய நுதலானது பசந்தது கண்டு அவள் கண்ணில் உண்டான பசலைகூடத் துன்பத்தால் கலங்கியதைப்போலல்லவா அவனுக்குக் காணப்பட்டது!–

***முயங்கிய கைகளை ஊக்க, பசந்தது -***
***பைந்தொடிப் பேதை நுதல்.***

*(குறள் - 1238)*

***முயக்கிடைத் தண்வளி போழ, பசப்புஉற்ற –***
***பேதை பெருமழைக் கண்.***

*(குறள் - 1239)*

***கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே***
***ஒள்நுதல் செய்தது கண்டு.***

*(குறள் - 1240)*

அணைத்த அவள் கரங்களை அவனோ சிறியதாகத்தான் நெகிழ்த்தினான். அந் நெகிழ்ச்சிக்காக அவள் நெற்றிப்பரப்பில் ஏற்பட்ட பசலைக் கோடுகளையும் கண்ணீர் மழையையும் அவன் எப்படித்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்துவாழ முடியும்! கணப்பொழுதில் நிகழ்ந்த அந் நெகிழ்ச்சிக்காக நெற்றியில் பசலை தோன்ற அழுது அழுது மாய்ந்தாள் என்றால் – பல மலைகள், ஆறுகள், காடுகள், இவை எல்லாம் கடந்து பகைவர் நாட்டுக்கு வந்த அவனது நெடும் பிரிவை எப்படித்தான் இதுவரையும் ஆற்றியிருக்கின்றாளோ!

பிரிவதற்கு முதன்நாள் இரவன்று தன்னால் ஏற்பட்ட சிறிய அந் நெகிழ்ச்சியால் அவள் மட்டில் நிகழ்ந்த அதே சம்பவங்களையும், நாடிடையிட்டு இதுவரையும் தான் பிரிந்து வாழ்ந்த நெடும் பிரிவால் அவளுக்கு ஏற்படக்கூடிய தாங்கொண்ணாத துன்பத்தின் விளைவுகளையுந்தாம் தன் நெஞ்சத்திரையில் ஆழமாகப் பதிய வைத்து எண்ணி எண்ணிப் பார்த்தான் தலைவன். அவனுடைய எண்ணத்தின் சுழற்சியைப் போலவே தேர்க் கால்களும் அதிவிரைவாகச் சுழன்றுகொண்டேயிருந்தன!........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்சி

'கா!... கா!... கா!... கா!...'

இதுவரையும் காகம் பல தடவைகள் கரைந்து விட்டது. அதிகாலையில் இருந்தே வீட்டு முற்றத்தில் - காகம் கரையத் தொடங்குமானால் தூரப் பிரிந்து சென்றவர் இன்றே திரும்பிவிடுவார் என்பதுதானே அர்த்தம்!

இரவு முழுதும் நித்திரை இல்லாது பெருமூச்சின் சுவாலையில் உலர்ந்து புரண்ட தலைவிக்கு அதிகாலையில் - அதிலும் குறிப்பாகத் தம் வீட்டின் முற்றத்தில் காகம் கரைவதைக் கேட்டதும் அவளை அறியாமலே அவள் இதயத்தில் ஒருவித எழுச்சியும் மகிழ்ச்சியும் எழத்தான் செய்தன.

அவளுடைய மகிழ்ச்சி எப்படியோ, அப்படியே அதிகாலையில் சூரியனும் மகிழ்ச்சி நிறைந்த தன் இனிய முகத்தை நன்றாக மலரவிட்டு உதயமாகித் தன் குளிர்ந்த கண்களால் உலகத்திலுள்ள அத்தனை ஜீவன்களையும் பார்க்கின்றான். மறுபடியும் அதே காகம் வந்து அதே இடத்தில் நின்று கரையத் தொடங்குகின்றது.

-'இன்று என் தலைவர் நிச்சயம் வந்து விடுவார்!'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைவற்ற நம்பிக்கையோடுதான் தலைவி தன் மனத்துள்ளே இதைச் சொன்னாள். அவள் சொல்லி முடியவில்லை. அதற்குள்ளாக அவள் ஆருயிர்த் தோழியும் வந்துவிட்டாள்.

–'தலைவி! இன்று உனக்கு ஓர் அரிய நற்செய்தி!'

–'அப்படி என்னதான் செய்தி? சொல்லேண்டி!'

–'உன் ஆருயிர்த் தலைவர் வந்துவிட்டாராம். சென்ற வாரம் அவர் அரண்மனைப் பாங்கன் வந்து சொன்னதெல்லாம் பொய்யாக வில்லைத்தாண்டி!'

–'நம் தலைவர் பொய்யர் என்று யார்தான் சொல்லமுடியும்!'

–'உலகுக்கு அவர் பொய்யர் இல்லாவிட்டாலும் நமமக்கு அவர் பொய்யுடையார்தான்! அல்லாதிருந்தால், கார் காலத்தின் தொடக்கத்திலேயே அழிந்து ஒழியக்கூடிய உன் பசலைக் கோடுகள் அக் காலம் முடிந்த பின்னும் இதுவரை அழியாமல் இருக்குமா!'

–'போடி போடி! நம் தலைவரைப் பொல்லாதவர் – பொய்யுடையர் என்றெல்லாம் நீ என்ன – இந்த உலகமே சொல்லட்டுமே! எனக்கு அதைப்பற்றிக் கவலையே இல்லை. இனிமேலென்ன. என் ஆசைத் தலைவர் வந்துவிட்டாரடி! வந்த என் கொண்கனை – காதலனைக் கண்ணாரக் காண்பேனடி! அவனைக் கண்டபின் என் மென் தோளில் படர்ந்துள்ள பசப்பு அடியோடு நீங்கிவிடும். அதிலும் அவனுடன் ஒரு நாட்பொழுது புணர்ந்து இன்பத்துள் கலந்தாலே பைதலாகிய இப்பசப்பு நோய் அடியோடு கெட்டொழிந்து போய்விடும். இதை உனக்கு சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை.' என்றாள் தலைவி.

***காண்கமன், கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்***
***நீங்கும்என் மென்தோள் பசப்பு.*** *(குறள் - 1265)*

***வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்***
***பைதல்நோய் எல்லாம் கெட.*** *(குறள் - 1266)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசை வெட்கம் அறியாதது!

திரும்பிய தலைவனைக் காணவேண்டும்! அவனோடு கலந்து காதல் இன்பத்தை நுகரவேண்டும் என்னும் தீராத ஆசைப் பெருக்கினால்தான் தலைவி தன் தோழிக்கு இவை எல்லாவற்றையும் மனந்திறந்து சொன்னாள் போலும்.

தலைவனின் பிரிவால் ஏற்பட்ட துன்பத்திலிருந்து தலைவியைத் தேற்றுதற்குத் தான் இதுவரை எடுத்த உத்திகளை எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக நினைத்துப் பார்த்தாள் தோழி. தலைவர் இன்றே தன் பகைவினை முடித்துத் திரும்பி விட்டார். இனிமேல் தனக்குரிய - தலைவியைத் தேற்றுதற்குரிய பெரும் பொறுப்பு இருக்கப் போவதில்லை என்பதை அவள் உணர்ந்தாளோ என்னவோ, உடனே தலைவியின்பால் விடைபெற்றுச் செல்லத் தலைப்பட்டாள்.

விடைபெற்ற தோழி தலைவியின் மனைமுற்றத்து வாயிலைக் கடக்கும்போது அதே காகம் அதே இடத்தில் இருந்து 'கா!- கா!- கா!-' என்று பலமாகக் கரையத் தொடங்கியது.

-கரைகின்ற அதே காகத்தின் குரல், துன்பத்தில் இருந்து 'மீட்சி' கொள்ளும் தலைவிக்குக் குயிலின் இனிய கூவலைப்போல ஒலித்துக்கொண்டே இருந்தது!-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணத்தை மறந்தன்

என் ஆருயிர்க் காதலர் வந்துவிட்டார்!

பகைவினையை வெற்றியோடு முடித்து அவர் திரும்பி இருவாரங்களாகிவிட்டன. அரண்மனையில் அவருக்கு நிகழும் பாராட்டுக்களும் விருதுகளும் இன்னும் முடிந்த பாடில்லை. இதனால் தினமுமே அவருக்கு அரண்மனை வாசந்தான். எத்தனையோ புதுப் புதுப் கேளிக்கைகள், கூத்துக்கள், ஆடல்கள், பாடல்கள் இவையெல்லாம் பிரத்தியேகமாக அவருக்காக - அவர் ஈட்டிய வெற்றிச் சிறப்புக்காக - மன்னனே ஏற்பாடு செய்திருக்கின்றான் என்றால் கேட்கவா வேண்டும்!

புகழினை விரும்பாதவர் யார்?

புகழினை விரும்பியதினால்தானே திருமணம் ஆகிய புதுதில் என்னைப் பிரிந்து வாழவும் துணிந்தார். பிரிந்தவர் கடமையை வெற்றியோடு முடித்துக்கொண்டு திரும்பிய பின்னும் எனக்கு இதே கோலந்தானா?!

வெற்றியோடு திரும்பியவர் அரண்மனையில் நிகழும் களியாட்டங்களில் கலந்துகொள்ளாமல் இருக்கவேண்டுமென்று நான் ஒருபோதும் எண்ணியதில்லை. நன்றாகக் கலந்து கொள்ளட்டும்! அவரது அயராத முயற்சியின் பயனுக்கு - புகழுக்கு - அக் களியாட்டங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியதுதான். மன்னனும் அதைத் தன் அரசியற் சிறப்புகளில் ஒன்றாக நினைத்துச் செய்கின்றான். ஆனால், அதற்காக வந்தநாள் தொட்டு அதிலேயே இரவென்றும் பகவென்றும் மயங்கி வாழ்வதா!

முன்னம் பகைவினை முடிப்பதற்காக அவர் வேற்றூர்க்குச் சென்று வாழ்ந்த காலங்களில் எனக்கு ஏற்பட்ட தனிமைக் கோலத்துக்கு அவர்தான் முற்றிலும் காரண கர்த்தா அன்று. நன்றாகச் சிந்தித்துப் பார்க்கின்றபோது அன்று ஏற்பட்ட தனிமைக்குக் காலந்தான் பொறுப்பானது. அவர் என்னைவிட்டுப் பிரிந்து தனக்குரிய கடமையைத் தானே ஆண்மையுடன் செய்து முடிக்க வேண்டிய பொறுப்பு உடையவராக இருந்தார். அதனால் அப் பிரிவிலே ஏற்பட்ட தனிமையை எம் இருவருடைய எதிர்கால நல்வாழ்வுக்காக ஒருவாறாக ஆற்றினேன். திரும்பினார்; திரும்பியதும் தனிமை என்பது எனக்கு இருக்கவே இருக்காது என்று எவ்வளவுதூரம் இறுமாந்து மனக்கோட்டை கட்டினேன். யான் கட்டிய மனக்கோட்டைகள் அத்தனையுமே இன்று தூள் தூளாகிவிட்டன. தலைவர் வருவார்; வந்தபின் அவருடன் கூடி வாழ்கின்ற அழியாத அன்பின் வாழ்வைக் காண்பேன்; என்றெல்லாம் எண்ணி இருந்தேன். யான் எண்ணியதில் ஏதேனும் தப்பில்லையே! சர்வ சாதாரணமாக நிகழக்கூடிய - ஒரு பெண் எண்ணக் கூடியதைத்தான் எண்ணினேன். அவ்வெண்ணத்தின் அலைகளுக்கு எதிர் அலையாகத் தலைவரின் போக்குக் காணப்படுகின்றது.

இதுவரை அவர் போடுவது எல்லாம் எதிர் அலைதான்!

அல்லாதிருந்தால், அவர் இங்கே வந்த பின்னும் இந்தக் கொடுமை நிறைந்த தனிமை எனக்கு ஏற்படுமா?! 'இந்தத் தனிமைச் சூழலில் தன்னந்தனியனாய் இருந்து அவர் எனக்கு அளிக்கின்ற கொடுமையைத்தான் நினைக்கின்றேன். அவ்விதம் நினைக்கும்போது என் நெஞ்சமே என்னைத் தின்னும் அளவுக்குத் தனிமையை இன்னும் அளித்துக் கொண்டிருக்கும் அவருடைய நெஞ்சந்தான் என்னே?! பெயருக்காகத் தன்னும் நெஞ்சம் என்ற ஒன்று அவருக்கு இருக்கின்றதே! அதுவே போதும்! இருந்தாலும் அந்நெஞ்சம் சிறிதளவாயினும் நம்மைப் பற்றி நினைக்கின்றதில்லை. நம்மை நாடி வருவதும் இல்லை. அவருடைய நெஞ்சம் அவருக்குத்தான் துணை! எனக்கன்று. அவர் நெஞ்சம் அவருக்கு ஆதல் கண்டும் - என் நெஞ்சம் மாத்திரம் எனக்குத் துணை ஆகாதது ஏனோ?!'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தனியே இருந்து நினைத்தக்கால், என்னைத்*
*தினிய இருந்ததுஎன் நெஞ்சு.*

(குறள் - 1296)

*அவர்நெஞ்சு அவர்க்குஆதல் கண்டும், எவன்நெஞ்சே*
*நீஎமக்கு ஆகா தது.*

(குறள் - 1291)

காதல் நெஞ்சம் பல புரியாத புதிர்களைக் கொண்டதுதானோ?

யானோ வேதனையின் தாக்கங்களால் பாதிக்கப்படுகின்றேன். என் வேதனையின் சிறு பாதியைக்கூடப் பகிர்ந்து கொள்ள என் நெஞ்சம் துணையாக நிற்கின்றதில்லை.

துன்பத்துக்குத் துணையாக நிற்பதுதான் உண்மையான நட்பு. அந்த நட்பு துன்பத்தால் அழிந்தவர்க்குக் கிட்டுகின்றதா என்றால் – அதுவுமில்லை.

–'நெஞ்சே! துன்பத்தால் அழிந்தவர்க்கு நண்பர் இல்லை என்பதினாலேயோ நீ உன் விருப்பத்தின்படியே அவர் பின் செல்கின்றாய்!'

*கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ*
*பெட்டாங்(கு) அவர்பின் செலல்.*

(குறள் - 1293)

'இன்பத்துக்காக ஒன்றுகூடும் மனித இனம் துன்பத்தைக் கண்டு அஞ்சி ஓடுகின்றது. இன்பம் வந்துவிட்டால் அதைக் கூறுபோட்டுப் பகிர்ந்து கொள்ளத் துடிக்கின்ற மனிதன் துன்பத்தைக் கண்டதும் ஏனோ சோர்ந்து விடுகின்றான்!'

இவ்வுண்மையை இப்போதுதான் உணர்கின்றேன். என் இன்பத்தைப் பகிர்ந்து கொள்ள உலகம் முற்பட்டதில்லை. முற்பட்டாலும், அதைப் பகிர்ந்து கொள்வதற்கு என் இன்பம் – என் தலைவனோடு கூடிப் பெறும் காதல் இன்பம் – ஏற்றதன்று. என் நெஞ்சம் இருக்கின்றதே! – இதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இன்பத்தை நன்றாகப் பகிர்ந்து அனுபவித்தது. இன்று இதே நெஞ்சந்தான் எனக்கு உறுதுணையாக நில்லாமல் தலைவர் பின்னே செல்கின்றது. அன்று இன்பத்தை அனுபவிப்பதற்குத் துடிதுடித்த இதே நெஞ்சம், இன்று எனக்கு ஏற்பட்ட இத் துன்பத்தைச் சிறிதளவாயினும் பகிர்ந்து கொள்ளத் துணையாக நிற்கலாம் அல்லவா!

-ஒருவருக்குத் துன்பம் வந்தபோது தாம் உரிமையாகப் பெற்றுள்ள நெஞ்சமே தமக்குத் துணையாகாவிட்டால் வேறு யார் துணையாவார்?

***துன்பத்திற்(கு) யாரே துணையாவார் தாமுடைய***
***நெஞ்சம் துணையல் வழி.***

*(குறள் - 1299)*

'துணை என்பது இயல்பாய் அமையக்கூடிய தெய்வீக உறவு. அவ்வுறவை நாம் நம்முடைய முயற்சியைக் கொண்டு ஏற்படுத்த முற்படுவது குழந்தைத்தனமான செயலாய் முடியும்!

எனக்கு ஏற்பட்ட துணை இயல்பாய் அமைந்த தெய்வீக உறவுதான். அந்த உறவு என் உயிரோடு கலந்து விட்டதால்தான் அவ்வுறவை - அவ்வுறவுக்கு இருப்பிடமான தலைவனை - என் நெஞ்சம் மறக்காமல் இருக்கின்றது. வினைமுடித்துத் திரும்பியவர் என்னோடு கலந்து மகிழ்வதற்குரிய சூழ்நிலை அற்றவராய் அரண்மனையே தஞ்சம் என்று உறைகின்றார். அவர் என்னை மறந்து வாழப் போவதில்லை என்பது உண்மை என்றாலும், என்னை மறந்து வாழ்கின்றார் என்னும் பேதமையை - மடமையை - என் நெஞ்சம் அவர்மீது கற்பிக்கத்தான் செய்கின்றது.

என் நெஞ்சமே அவரைத்தானே தெய்வமாகப் பூசிக்கின்றது. தெய்வத்தை மறந்து வாழும் நெஞ்சம் பக்தனுக்கு இருக்கமுடியுமா? தெய்வமாக என் ஆருயிர்த் தலைவர் எனக்கு இருப்பதினால்தான் அவரை மறக்க முடியாத நிலையில் என் நெஞ்சம் இருக்கின்றது.

பக்தன் தான் வழிபடுந் தெய்வத்தின் சக்தியை ஆராய்ந்து பார்க்க முற்பட்டால் அந்த பக்தனின் நிலையை என்னென்பது. அப்படி அவன் ஆராயும் அளவுக்கு இருப்பான் என்றால் அவனுடைய நெஞ்சம் இன்னும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வத்தின்மீது இரண்டறக் கலக்கவில்லை என்பதுதானே அர்த்தம்! என் தலைவர்மீது யான் கொண்டுள்ள நெஞ்சமும் அப்படிக் கலவாத மடமை நெஞ்சந்தானோ?! உண்மையில் எவ்வித களங்கமும் அற்ற அவரை உணர்ச்சி வசப்பட்டு மாறுபாடாக நினைப்பதெல்லாம் என் மாண்பற்ற மடநெஞ்சத்தின் செயல்தானே! அவர்மீது பக்குவம் அடையாத என் மாணா மாண்பற்ற மட நெஞ்சத்தால் மேலும் அவரையே நினைக்கின்றேன். நினைக்குந் தோறும் மேலும் மேலும் என் நெஞ்சத்தின் மடமைதான் வளர்கின்றது. இதற்கு ஒரு பலத்த எல்லைக்கோடு போடலாம் என்றால், மாண்பற்ற என் மடமை நெஞ்சம் அவரையன்றோ மறக்கமுடியாத நிலையில் இருக்கின்றது. ஆமாம் ஆமாம், ஒரு கணமும் என் நெஞ்சம் அவரை மறந்து வாழ்ந்ததை அறியாதது அன்றோ! அதனால்தானே யான் மறக்கத்தகாத ஒன்றை அடியோடு மறந்தேன்! அடியோடு மறந்தேன்!

–அது என்ன?

'நாணம்!'

இதை யான் சொல்லித்தான் தெரிய வேண்டுமா?!

***நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்***
***மாணா மடநெஞ்சிற் பட்டு.***

*(குறள் - 1297)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடலும் கூடலும்

அரண்மனை போன்ற அழகான மணிமாடம்!

அந்த மாடத்தின் உச்சியில் மாலைச் சந்திரனின் பொற்கோடு பட்டு மின்னித் தெறித்தது. அந்த மின்னலில் பிரகாசிக்கும் ஒளியின் தேக்கத்தைப் பன்மடங்காக்கினாற் கூட, அம் மாடத்தின் அந்தப்புற மலர்ப் படுக்கையில் தங்கச் சிலைபோல் கிடக்கும் ஆரணங்கின் அழகு ஒளிக்கு ஈடுசெய்யவே முடியாது. உலகத்தில் உள்ள பொலிவான பூச்சரங்களைத் தன் பொன் வதனத்தின் வனப்பால் தூர வீசி எறிந்து அழகின் ஏகாதிபத்தியத்தின் அரசியைப் போலவே அவ்வெழில் மங்கை காணப்பட்டாள். அவளுடைய அழகையும் - இளமை ததும்பும் அங்கங்களின் ஒவ்வொரு துடிப்பையும் - தன் ஐம்புலன்களாலும் பருகிப் பயன்பெறுவதற்கு உரியவன் யானே என்னும் மனச் செருக்குடன் வருபவனைப் போலவே, அவள் ஆருயிர்த் தலைவனின் வருகை பெருமித நடையோடு ஆரம்பித்து - மாடத்தின் ஒவ்வொரு படிகளையும் தாண்டி முன்னேறியது.

அறையின் வாசற் புறத்திலுள்ள திரையை நீக்கி தலைவியைப் பார்த்து நின்றான் தலைவன்.

அவன் பார்த்த மகிழ்ச்சிப் பார்வையில் அவளுடைய பளிங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தில் குதூகலத்தின் களை கட்டியது என்றாலும், அதற்கிடையில் – ஒரு கணப் பொழுதுக்கிடையில் – கடுகடுப்பும் சிடுசிடுப்பும் நிறைந்த ஒருவகை மாற்றத்தையும் பெற்றது.

அம் மாற்றம் தலைவன் மீதுள்ள கோபத்தின் மாற்றந்தானோ?! ஆமாம் அதே மாற்றந்தான்! அப்படியானால், அவன்மீது கோபம் எழக் காரணந்தான் என்ன? மாலை வேளையாக இருந்ததால் அரண்மனை வீதிவரை உலாப்போய் விரைவில் வருவதாகக் கூறிச் சென்றவன் மிகக் காலந்தாழ்த்தி வந்ததுதான் காரணம்.

எப்படியோ தலைவியானவள் தன்மீது கோபித்து வருத்தப்படுவதை, அவள் முகத்திலே காணப்படும் கடுகடுப்பில் தெளிவாகப் புரிந்து கொண்டுதான் அவன் அவளை நெருங்கினான். நெருங்கியதும், அவளின் மென்மையான தோளின் பரப்பைத் தன் மார்போடு பற்றும்போது அப் பற்றுதலில் இருந்து வெடுக்கெனத் தானே விலகிக் கொண்டாள்.

–'கண்ணே! உன் முகத்தில் வெஞ்சினந்தான் ஏனோ! என்மீது இவ்வளவு கோபமா?!'

–'கோபமா! பெண்ணியல்பு உள்ள யாவருமே நின் செவ்விய அழகைக் கண்டு தம் கண்களினால் உம்மாற் பெறவல்ல போக நுகர்ச்சிகளை அனுபவிக்கின்றார்களே!'

–'அப்படியா!'

விழிப்போடு மீண்டும் அவளைப் பற்றுகின்றான்.

–'நின்னுடைய மார்பு – பரத்தையர் விரும்பும் மார்பு! ஆதலால், இதை யான் தீண்டிலும் தீண்டேன்!'

***பெண்இயலார் எல்லாரும் கண்ணிற் பொதுஉண்பர்***
***நண்ணேன் பரத்தநின் மார்பு.***

*(குறள் – 1311)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கேட்டதும் தலைவனுக்கோ தூக்கி வாரிப் போட்டது. பரத்தையாவது – இவ்வுலகத்திலுள்ள எந்தப் பெண்ணையாவது – தன் மனதாறக்கூட நினைத்தும் அறியாதவன். அப்படிப் பட்டவனுக்கா இந்தக் கொடூரமான வார்த்தை!

–'அன்பே! யான் எந்தப் பெண்ணையுமே அறியாதவன். என் நெஞ்சம் உன்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணைத்தான் நினைக்கும்! அதிலும், உன்னைப் பிரிந்து வாழ்ந்தேன் அல்லவா! – அந்தப் பிரிவுக் காலத்தில் எல்லாம் என் உள்ளம் முழுதாலும் உன்னைத்தான் நினைந்தேன்!'

–'போதும் போதும் தங்களின் நினைப்பு. மறதி ஒன்று இருந்தால்தானே நினைவும் வரும்! அப்படி என்றால், உண்மையிலேயே தாங்கள் என்னை மறந்துதான் வாழ்ந்திருக்கின்றீர்கள்!–' என்று சொல்லித் தலைவனுடைய அணைப்பின் பிடியைத் தானே வலிந்து விடுவித்துச் சிறிது தூரம் விலகினாள்.

அவள் அங்ஙனம் விலகும்போதே அவனும் தும்மினான். தும்மலும் நின்ற பாடில்லை. மேலும் மூன்று முறை உரத்துத் தும்மினான். அவன் தும்மிய ஒவ்வொரு தும்மலுக்கும் அவளோ அதன் இயல்பு பற்றி வாழ்த்தினாள். தும்மலும் நின்றது; வாழ்த்துதலும் நின்றது.

–நும்மை இக் கணம் நினைத்து வருத்துகின்ற மகளிருள் யார் நினைத்ததால் தும்மினீர்! என்று ஏளனப் புன்னகையோடு அவள் சொல்லும்போது அச் சொல்லோடு சொல்லாய் அவளை அறியாமலே அவளிடத்தில் அழுகையும் பீறிட்டது.

*வழுத்தினாள், தும்மினே னாக, அழித்(து)அழுதாள்*
*யார்உள்ளித் தும்மினீர்? என்று.*

*(குறள் - 1317)*

அவள் அழுது கொண்டு எழுப்பிய அந்த வினாவுக்குப் பின் தலைவனுக்கோ இருப்புக் கொள்ளவில்லை. உடனே எழுந்து அவளை நெருங்கித் தன் மார்போடு மார்பாய் இறுக அணைத்தான். அவ்வணைப்போடு அவளுடைய [illegible] கன்னங்களை மெல்ல வருடிப் பல அன்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகளைச் சொல்லவுந் தொடங்கினான்.

-'என் ஆருயிரே! நான் வேறு நீ வேறு அன்று. இம்மையாகிய இப் பிறப்பின்கண் நம்மை யாருமே பிரிக்க முடியாது. முயன்றாலும் யாம் பிரியலம்! இம்மைப் பிறப்பின்கண் யாம் பிரியலம்'!- என்றான்.

அவன் சொல்லி வாய்மூடவில்லை. அதற்குள்ளாக அவளுடைய கண்கள் இரண்டும் நீரால் நிறைந்து குளமாகி விட்டன.

***இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனாக்***
***கண்நிறை நீர்கொண் டனள்.***

*(குறள் - 1315)*

இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றுதானே அவன் சொன்னான். அதற்காகவா அவளுடைய கண்கள் நீர் நிறை கொள்வது! காரணம் இல்லாமல் அத்துணை பெருகிய நீரை அவள் கண்கள் பொழியுமா! ஏதோ ஒரு காரணம் இருக்கத்தான் வேண்டும்.

இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றால், மறுமையாகிய ஏனைய பிறப்புக்களில் பிரிவோம் என்பது தானே அர்த்தம்!

'காதல் நெஞ்சம் மாசுமறுவற்றது. தெய்வ சந்நிதானம் நினைத்தாற்கூட காதலைப் பிரிக்கவே முடியாது.'

இத்துணை வன்மையுள்ள கலத்தலாகிய ஒன்றிப்பு - காதல் நெஞ்சங்களுக்கு இருக்குமானால் அவை எவ்வளவு பிறப்பின் கண்ணும் பிரிவில்லாத தொடர்ச்சியாகவே தொடர்கின்றன. தலைவியோ இதை நுட்பமாக உணர்ந்து கொண்டவள். அதனால்தான் இம்மைப் பிறப்பில் பிரியலம் என்று தலைவன் சொன்ன அன்புள்ள மொழிகளைக் கேட்டதும் அழுதாள் போலும்.

மறுமையாகிய ஏனைய பிறபபுக்களில் எல்லாம் பிரிவா! இதைப் பொறுக்காமற்தானே அழுதாள். அவள் அழுவதற்கு உரிய காரணத்தைப் புரிந்துகொண்ட தலைவனோ அவளைப் பச்சிளங் குழந்தையைப்போல் வாரி அணைத்து முத்தமிட்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'குழந்தைத் தனம் நிறைந்ததுதான் காதல்; குழந்தைகளும் காதலர்களும் ஒன்றுதான்.'

தலைவன் தன்மீது அசைக்க முடியாத அன்பினை வைத்திருக்கின்றான்; அவ்வன்புக்குப் பிரிவென்பதே இல்லை; என்பதைத் தலைவி உணர்ந்தவள்தான். அப்படி இருந்தும் ஒரு பாவமும் அறியாத தலைவனின் செயல்களுக்கும் மொழிகளுக்கும் அவனின் இயல்புக்கு மாறான பல காரணங்களை அவன்மீது கற்பித்து இதுவரை ஊடினாளே! – அவ்வூடல் நெடும்பொழுதாய் அவள் மட்டில் நிற்க முடிந்ததா?!

காமத்துக்கு இன்பந் தருவது ஊடுதல் தானே!

மலரைவிட மென்மையுடையது காமம் என்றால், காமத்தின்கண் நிகழ்கின்ற ஊடலும் மென்மை வாய்ந்ததாகத்தான் இருக்கவேண்டும்.

தலைவி தலைவன்மேல் கொண்ட ஊடல் காமத்தால் விளைந்த ஊடல்தான்! அந்த ஊடல் மென்மை உடையதாய் இருந்ததினால்தான் அவள் இத்துணை அதிவிரைவாகத் தலைவன் கூடியவுடன் தானும் கூடினாள். கூடியவள் அவன் உடல் மழுவதையும் ஆரத் தழுவினாள்.

காமத்திற்கு இன்பந்தருவது ஊடுதல்தான். அந்த ஊடுதலுக்கே இன்பந்தருவது காதலர் கூடி ஒருவரை ஒருவர் தழுவப் பெறுவதுதான்!

***ஊடுதல் காமத்திற்(கு) இன்பம், அதற்குஇன்பம்***
***கூடி முயங்கப் பெறின்.*** *(குறள் - 1320)*

காதலர் கூடினர்!...

–இனிமேல் எவ்வகை ஊடலுக்கும் காதலரின் கூடலின் நெருக்கத்தைப் பிரிக்கின்ற சக்தி இல்லவே இல்லை!

**(களவியலும் கற்பியலும் முற்றும்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் பாகம்

# ஐந்திணையியல்



பழைய நூலோர் நிலத்தை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என ஐவகையாக வகுத்தனர். இவ்வைந்து நிலத்தின்கண் வாழும் தலைமக்களின் காதல் ஒழுக்கம் பற்றிய காட்சியும் கருத்தும் அடங்கியவைதாம் இப் பகுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணை வாழ்க்கை

குதிரையின் கடிவாளத்தை ஒருமுறைதான் முடுக்கினான் தேர்ப்பாகன். அவன் முடுக்குவதற்கும் தேரின் கால்கள் சுழல்வதற்கும் நேரம் சரியாக இருந்தது. தேர்க்கால்களின் சுழற்சி வேகம் மெல்ல மெல்ல அதிகரித்துக்கொண்டே இருந்தது. அத் தேரிலே இருந்த ஓர் ஆண்மகன் - ஒப்பற்ற தலைமகன் - தேர் சென்று கொண்டிருக்கும் சுற்றுப்புறங்களையே பார்த்தவண்ணம் இருந்தான்.

சுற்றுப் புறங்கள், கண்ணுக்குச் சுவை ஊட்டும் பசுமை நிறைந்த எழிலின் சிகரங்களாக இலங்கின. அச் சிகரங்களை எல்லாம் ஒன்று திரட்டி, அத்துடன் இரண்டறக் கலப்பதற்கு அவன் கவிஞனும் அல்லன்; நல்ல கலைஞனும் அல்லன்.

அவ்வெழிற் புறங்கள் ஒவ்வொன்றுமே தேரின் சாளரத்தால் ஒருவித உணர்ச்சித் துடிப்பினைத்தான் அவனுக்கு அளித்தன. அத் துடிப்பினால் உந்தப்பட்டு, தேரை விரைவாகச் செலுத்துமாறு தேர்ப்பாகனைப் பலமுறை தெருட்டினான்.

–'பாகனே! தேரின் விரைவு இவ்வளவுதானோ?'

–'தலைவா, தங்களுக்கு இத்துணை விரைவும் போதாதோ?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

–'இந்த விரைவில் தேர் சென்றால் யாம் எந்த நாளில்தான் ஊர்போய்ச் சேர்வது?'

–'பெருந்தகையீர்! தாங்கள் எந் நாளுக்குள் செல்ல வேண்டும்?'

–'ஞாயிறு காலைக்குள்!'

–'இதற்கா இவ்வளவு அவசரம்!'

–'அப்படி என்றால், ஞாயிற்றின் முதல்நாளே செல்லலாம் என்கிறாய்!'

–'இல்லை இல்லை! எப்படியும் தங்களை ஞாயிற்றின் உதயத்துக்குள்.......'

–'சரி சரி!'

பாகன், மீண்டும் ஒருமுறை குதிரையைப் பலமாக அதட்டினான். தேரோ முன்னதை விடப் பன்மடங்காகக் காற்றிலும் வேகமாய்ப் பறந்தது!...

சிறிது நேரத்தின்பின் தலைவன் தேர்ப் பாகனுடன் மீண்டும் தன் உரையை ஆரம்பித்தான்.

–'பாகனே, வினை முடித்து இத்துணை விரைவாக என் ஊருக்குச் செல்வேன் என்று நான் எள்ளளவும் எதிர்பார்க்கவே இல்லை. என் ஆருயிர்த் தலைவியைப் பிரிந்து வாழ்ந்த இவ்வாறு திங்களும் ஆறு ஆண்டுகளைப் போல் கழிந்து விட்டன.'

–'தலைவா! தாங்கள் தனிமையில் வாழ்ந்த இடம் பொழுது போவதற்குரிய அழகான இடந்தானே?'

–'பொழுது போவதற்குக் குறைவில்லாத இடந்தான். அப்படி இருந்தும், ஒவ்வொரு பொழுதும், தலைவியை விட்டுப் பிரிந்த என் பிரிவின் வாழ்வை அச்சுறுத்திக்கொண்டே இருந்தன. சொல்கிறேன் கேள்!'–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பசுமை நிறைந்த கோலமாய்க் காட்சிதரும் குளிர்ந்த நறிய முல்லை நிலம்; அந் நிலத்தின் இடையே மெல்லிய கருமையான கோடுகள் படர்ந்த பிடா மரங்கள் குறும்புதரினை உடையதாய் விளங்கும். அம் மரத்தின் உயர்ந்த கிளைதோறும் கொத்துக் கொத்தாய் மலர்ந்து மணம்வீசும் மென்மையான மலர்கள், மரத்தின் உச்சியில் இயல்பாய் அமைந்த மாலையைப்போல் காட்சிதரும். செருப்பு அணிந்த பாதங்களை உடைய வேட்டுவன் - தன் கனவக்கோலைச் சுமந்தாற்போல் முறுக்குண்ட கொம்போடு ஆண் மான்கள் நிற்கும். அவை நிற்பதிலும் அவற்றுக்கென ஓர் இயல்பான தனிப்பெருமை! அந்தப் பெருமை, மனித இனத்திலும் காணமுடியாத பெருமை! தலையளியின் சொரூபமாய் விளங்கும் தன்னிகரில்லாத பெருமை! அத்துணை பெருமை உடைய அம் மான்களை, செழுமையான இலை செறிந்த அறுகின் சிவந்த தண்டோடு கூடிய மெல்லிய கொத்துக்களை, தன்னகத்தே விளையாடும் மறிகளை - குட்டிகளை வைத்துக்கொண்டிருக்கும் தம் இளைய மான்களை அருந்தச் செய்யும். அத்துடன், தெளிந்த அறல் நீரானது தழுவிச் செல்லும் நெடிய மணல் சார்ந்த உயர்ந்த அடை கரைகள் எங்கும் அசையாடுகின்ற கவுளினை உடையனவாய்த் தம்பெண் துஞ்ச, அத் துஞ்சுதலுக்கு எள்ளளவேனும் இடர்பாடு வராமல், அவ்விடத்தை அவை காவல் காத்து நிற்கும்.'

'ஆண் மான்களின் அத்தகைய பெருமையைத் தினமும் யான் கண்ணாரக் கண்டேன்! கண்ட போதெல்லாம் அவைபோல யாமும் தலைவியின்பால் தலையளி செய்திலமே! தலைவியின்பால் தலையளி செய்திலமே! என்று நெஞ்சம் உடைந்து - தளர்ந்து - உருகும்!'

'ஆமாம்! அந்தப் பரிதாப நிலைக்கு விடிவு உண்டு! உடைந்த என் நெஞ்சத்துக்கு - உயிரூட்டும் இன்பம் ஒன்று உண்டு! அந்த இன்பத்தைப் பெறுவதற்காகவே தலைவியின்பால் விரைந்து செல்கின்றேன்!'

'பாகனே! ஆடையிலே தோய்ந்த கஞ்சிப் பசையினைத் துடைத்துவிடும் மெல்லிய விரல்களை உடையவள் பெருத்த தோள்களை உடையவள் ஆடையினை ஒலிப்பவள். அவள், அந்தப் பசையினைத் துறையிலே அலசிவிட்டாற்போன்ற தூய வெண்மையான மயிரினை உடைய அன்னங்களைப் பார்த்திருப்பாய்! அவை, தம் பெடைகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடினவாய் என் தலைவி வாழும் இல்லத்தின் சோலையில் திளைத்திருக்கும். இவ்வினிய காட்சியை அவள் பார்க்காமல் இருக்கவே முடியாது. பார்த்துப் பார்த்து எத்துணை சஞ்சலத்தை அடைவாள்! அச்சஞ்சலத்தின் கொடூரத்தை ஆயிரந் தடவைகள் என் மனக் கண்ணால் பார்த்திருக்கின்றேன்!'

'மேலும் அவள் வாழும் மனை – வெறும் மண்மனை அல்ல, சுற்றுப்புறம் யாவும் காவலை உடைய பெரும் மனை! அம் மனையைச் சுற்றியுள்ள அழகான பெருஞ்சோலையுள், சிவப்பு மாலை அணிந்தது போன்ற கழுத்தினை உடைய பச்சைக் கிளிகள் சுற்றிச் சுற்றித் தத்தித் திரியும். தலைவியோ, அக் கிளியினைத் தன் முன்கையில் ஏந்தி – இல்லத்தில் உள்ளவர் அறிந்துவிடுவார்களோ எனப் பயந்து – மெல்லென நாணத்தோடு – மழலை ததும்பும் இனிய மொழியை அதற்குப் பயிற்றுவாள்.'

'அவள் அக் கிளிக்குப் பயிற்றுவிக்கும் மொழி முற்றிலும் என்னைப் பற்றியதாகவே இருக்கும்.'

'நம்மைப் பிரிந்து சென்ற தலைவரைப் பற்றியதாக இன்று யாதேனும் ஒரு செய்தியை உரைப்பாயாயின், அவர் இன்றே வருவார்!' இதுதான் அவள் கிளிக்குப் பயிற்றும் இனிய மொழி! இன்ப மொழி! என்மீது இத்துணை அன்புடையாளை யான் ஆறு திங்கள் பிரிந்தது என்றும் ஆறாத கொடுமை! என்றும் ஆறாத கொடுமை!'

'தேரைச் செலுத்தும் தொழிலில் நல்ல ஆற்றல் வாய்ந்த பாகனே! அவள்மீது யான் பெறவல்ல மாண்புற்ற நலனை உரிய காலத்திலன்றோ பெறவேண்டும். அதற்கு உரிய காலமாகிய கார்காலமும் தொடங்கிவிட்டது. ஆதலால், நின் தேர் விரைந்து செல்வதாக! விரைந்து செல்வதாக!'

*'சிறுகரும் பிடவின் வெண்தலைக் குறும்புதல்*
*கண்ணியின் மலரும் தண்நறும் புறவில்,*
*தொடுதோற் கானவன் கவைபொறுத் தன்ன*
*இருதிரி மருப்பின் அண்ணல் இரலை*
*செறிஇலைப் பதவின் செங்கோல் மென்குரல்* 05


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மறிஆடு மருங்கின் மடப்பிணை அருந்தித்,*
*தெள்அறல் தழீஇய வார்மணல் அடைகரை,*
*மெல்கிடு கவுள துஞ்சுபுறம் காக்கும்*
*பெருந்தகைக்கு உடைந்த நெஞ்சம் ஏமுறச்,*
*செல்க, தேரே □ நல்வலம் பெறுந!*

*பசைகொல் மெல்விரல், பெருந்தோள், புலைத்தி*
*துறைவிட் டன்ன தூமயிர் எகினம்*
*துணையொடு திளைக்கும் காப்புடை வரைப்பில்,*
*செந்தார்ப் பைங்கிளி முன்கை ஏந்தி,*
*'இன்றுவரல் உரைமோ, சென்றிசினோர் திறத்து' என*

*இல்லவர் அறிதல் அஞ்சி, மெல்லென*
*மழலை இன்சொல் பயிற்றும்*
*நாணுடை அரிவை மாண்நலம் பெறவே!'*

*(அகநானூறு - 34)*

பாகன், தலைவன் சொன்ன அத்தனை உணர்ச்சி மொழிகளையும் மிகவும் உன்னிப்பாய்க் கேட்டான். அம்மொழிகளின் ஒவ்வொரு கோணத்திலும் - அவன், தலைவியின்பால் கொண்டுள்ள அழிவற்ற நெஞ்சத்தைக் கண்டான்.

இங்குள்ள கலையும் பிணையும் தலைவனை வருத்த, அங்குள்ள அன்னமும் அதன் துணையும் தலைவியை வருத்துகின்றன.

'காதல், பிரிவிலே துன்பம் உடையது என்றாலும் - அத் துன்பந்தான், மாசற்ற 'துணைவாழ்க்கை'யின் அமர இன்பத்துக்கு வழிவகுக்கின்றது.'

இதுபோன்ற காதலின் பல தத்துவங்கள், பாகனின் சிந்தனை ஓட்டத்தில் ஒவ்வொன்றாய் நிழல் இட்டன. அப்போது, இதுவரை தலைவன் வாழ்ந்த ஊரின் எல்லைப் புறத்திலுள்ள கொன்றை மரங்கள், பாகனின் கண் பார்வையில் இருந்து மெல்ல மெல்ல மறையத்தொடங்கின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறித்த இன்பம்

**தே**னோடு கலந்த தெள்ளிய அருவி பாயும் அம்மலையடிவாரத்தில் அழகு மங்கையை அணைத்தவாறே அந்நாடன் பல அன்பு மொழிகளைப் பேசினான். காதலர் இருவர் தினமும் கலந்து மகிழும் மாலைப்பொழுது – இன்பத்தின் பொழுதாகவே விளங்கியது. களவொழுக்கத்தில் அவர்கள் பெறும் இன்பத்தை அவள் ஆருயிர்த்தோழி ஒருத்திதான் அறிவாள். கோடைக் காலத்துக் குளிர்நிலா போன்ற அவள் பால்வதனத்தைத் தன் அன்புக் கரத்தால் வருடியவாறு, 'அன்பே! அமுதே!! ஆருயிரே!!!' என்றான். அவளோ தன் மையுண்ட கண்களை மெல்ல மூடியவாறு, 'அத்தான்!' என்றாள்.

–'கண்ணே! உன்னோடு காலமெல்லாம் அகலாது களிக்க வழியொன்றைத் தேடுகின்றேன்.

–'கண்ணாளா! அவ்வழி எந் நாளில் கைகூடுமோ?!'

'விரைவில் கைகூடும் விளைசுகமே!'

தலைவனுடைய இம் மொழியைக் கேட்டதும் தலைவியின் இதயத்தில் ஒரு புதிய தென்பு பிறந்தது. அவளுடைய கருமையான நீண்ட கூந்தலில் புத்தம் புதிய மலரைக் கொத்தாக அணைத்தான் தலைவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை கடந்து இரவு மங்கை கால் வைத்து நடை பயிலும் நேரம் வெளியுலகத்தில் சுதந்திரமாகத் திரிந்த பறவைகள் தம் இருப்பிடத்தை நாடி விரைவாகச் சிறகடித்துப் பறந்தன. கோதையும் கோமகனும் தம்மை மறந்து நீண்ட பொழுது இன்பத்தில் திளைத்து விட்டனர்!........

–'கண்ணே! நேரம் கடந்து விட்டது. வரட்டுமா?'

பொற்கொடி கொம்போடு படர்ந்து தொங்குதல் போல தலைவனின் மார்போடு தவழ்ந்து இணைந்த தலைவி, தலைவனின் பிரிவின் மொழியைக் கேட்டதும் கலக்கம் அடைந்தாள். அவளுடைய கலக்கத்தைக் குறிப்பாக அறிந்த நாடன், 'கலக்கம் வேண்டாம் கண்ணே! உன் கவலையை விரைவில் போக்கிவிடுவேன் பொன்னே. நாளைக்கும் இதே இடத்தில்... வரட்டுமா?' என மீண்டும் விடை கேட்டான்.

தலைவியின் உதடுகள் விடை பகரவில்லை. அவளுடைய விழிகள்தாம் விடை பகர்ந்தன. தலைவன் சென்றான்! தலைவியும் மெல்லக் களவுக் குறியிடத்தை விட்டகன்றாள்.

செல்வக் குடியில் தலைமகளாக விளங்கிய தலைவி தினமும் இப்படி நேரங்கழித்து வருவதைப் பெற்றோர் கண்காணிக்காமல் இருப்பார்களா?

'தினைப்புனத்தில் காவல் செய்வதற்குத் தன் தோழியுடன் விளையாட்டாகச் செல்பவள் சில நாட்களாகத் தோழியையுந் தவிர்த்துத் தன்னந் தனியளாய்ச் செல்கின்றாளே! தோழியை இதுவரை ஒரு கணமேனும் பிரிந்து வாழ்ந்தறியாத செல்வமகள் தனிமையை நாடக் காரணம் ஏன்? இரு நாட்களாகத் தோழி வந்து அழைத்துச் செல்வதற்கு முன்னமே தானே தனித்துச் செல்லத் துணிந்தது வியப்பினும் வியப்பன்றோ!' எனத் தலைவியின் பெற்றோர் பலவாறு சிந்திக்கத் தொடங்கினர். இதுபற்றிச் செவிலித் தாயானவளும் அதிக கவனமெடுத்தாள்.

'இன்றைக்கோ, நாளைக்கோ ஒரு நல்ல ஆண் மகனுக்கு வாழ்க்கைப்பட்டுக் குடும்பம் நடத்தப்போகின்றவளுக்கு மாலை கழிந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னும் தினைப்புனத்தில் என்ன வேலை?! இனிமேல் அவள் தினைப்புனத்துக்குச் செல்ல வேண்டியதில்லை!' எனத் தலைவியின் தந்தை கடிந்துரைக்கத் தொடங்கினார்.

முடிவு? – நாளையிலிருந்து தலைவி தினைப்புனத்துக்குச் செல்லவே கூடாது! சுருக்கமாகக் கூறப்போனால் வீட்டைவிட்டு அவள் அகலவே முடியாது! – இதுதான் வீட்டார் இட்ட கொடிய கட்டளை!

'நாளைக்கும் அதே இடத்தில் வருவதாகச் சொன்னாரே! வந்தால்!.... என்னைக் காணாது துன்புறுவாரே! ஐயோ கொடுமை!! இனிமேல் காதலரைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் முடியாதா? காலையும் பகலும் மாலையுங் கடுஞ்சிறைதானா?!' எனத் தனக்குள் புலம்பித் துயருற்றாள் தலைவி. அவள் துயரத்தைத் தோழி அறிவாள். இவையெல்லாம் அவள் எதிர்பார்த்ததுதானே! அன்றிலிருந்தே இதற்கொரு நன் முடிவு வராதா? என அவள் அடிக்கடி எண்ணியதுண்டு. பெருமை மிக்க நாடன் களவுக் குறியிலே தலைவியுடன் கலந்து பெறும் இன்பத்தையே பெரிதாக நினைத்து வாழ்கிறானே தவிர, தலைவியைத் தனக்கு உரிமையாக்கி, அவ்வுரிமையாற் பெறும் பெரிய இன்பத்தைச் சிறிதேனும் நினைக்கின்றானில்லை. இவ்வுணர்வைத் தலைவனிடத்தில் நாளைக்கே உணர்த்த வேண்டுமெனத் தோழி நினைத்தாள்.

மாநிலத்தில் வாழுகின்ற மக்களிடத்தில் கருணை கூர்ந்து தன் கடுமையான ஆட்சியைக் கருணையாக்கி மேற்குவான் மலைமுகட்டில் கதிரவன் படுக்கை கொள்கின்றான். மலையின் பனி படர்ந்த கொடுமுடியெங்கும் தங்கத்தை உருக்கி வார்த்த காட்சியாகவே இருந்தது. அம் மலையின் பனிப்படலம் உருகுதல் போல் தலைவனின் உள்ளமும் உருகியது! தன் கண்ணுக்கினிய அழகுநிலா வராதது கண்டு வருந்தியது!

'பூவையள் இல்லாது பொழுது வீணே கழிகின்றதே! என் ஆவிக்குரியவள் இன்னும் வராதது ஏனோ?! வீட்டில் காவல் நேர்ந்ததோ?!' எனப் பலவாறு எண்ணித் தலைவன் மனம் புழுங்கினான். முல்லைமலர்க் கொடியாளை நேற்று 'முழுமையோடு தழுவி நின்றேன்! இன்று அவ்விதய மலரைக் காணவில்லை!' என்று தனக்குள்ளே முணுமுணுத்துப் பிதற்றிக்கொண்டு நின்றான். அவ்வேளை யாரோ வரும் அரவம் கேட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பினான்... அவன் எதிர்பார்த்து நின்ற திருமுகம் வரவில்லை! யாரது? – அவள் ஆருயிர்த் தோழி!

தோழி, ஏதோ தலைவியைப் பற்றிய செய்தியைத்தான் கொண்டு வந்திருப்பாளெனத் தலைவன் எண்ணி, 'பாவாய்! என் இதயமலர் எங்கே?' என்று ஆவலோடு அவளிடம் வினாவினான். அதற்கு அவளோ, 'தலைவா! நேற்றிலிருந்தே உன் இதயமலர் வாடிய பனிமலராகிவிட்டாள்! –' என்றாள்.

'என்ன?!–'

'தலைவிக்குக் கடுமையான காவல் நேர்ந்துவிட்டது. இனிமேல் அவள் வீட்டைவிட்டு வெளியில் வரவே முடியாது' என்றாள்.

திடீரெனப் பேரிடி தாக்கியதைப் போன்ற உணர்வு அவன் இதயத்தை வாட்டியது. இனிமேல் அவளைப் பார்க்க முடியாதோ? என்ற ஏக்கம் மெல்ல அரும்பியது. ஏதோ அவனுடைய நெஞ்சம் குன்றிக் குறுகித் திக்குத் திசை தெரியாது அலைமோதியது. தன் வன்மையான ஆண்மையைக் கொண்டு மெல்லத் தன் நெஞ்சை அமைதியாக்கினான்.

பாங்கி தன் சொல் வன்மையால் தலைவனின் உணர்வைத் தட்டியெழுப்ப இதுதான் தக்க சமயமென அறிந்தாள். உடனே தன் அறிவின் திறத்தைப் பயன்படுத்தினாள்!

'–வளமுள்ள இலைகளையுடைய வாழையின் காய்கள் மிகுதியாக விளங்கும் பெருங்குலையில் தாமாகவே முதிர்ந்து பழுத்த இனிமையான வாழைக் கனிகளையும், அதல்லாமல் உண்பவர்களைத் தம் இனிமை மிகுதியினால் திகட்டச் செய்து மீண்டும் அதிகமாக உண்ணாதபடி தடுக்குந் தன்மையுள்ள சாரற் பலாவின் இனிய சுளைகளையும், இவையருகே முறைமைப்பட்ட பாறைக்கண் அமைந்த நெடுஞ்சுனையில் விளைந்த நறுந்தேனையும் அறியாமையினால் அடுத்தடுத்து உண்டன ஓர் ஆண் குரங்கு. அதனால், அது – அதன் பக்கத்தே மிளகுக் கொடிகள் படர்ந்து வளர்ந்திருக்கும் சந்தன மரத்திலே ஏறுவதற்கும் முடியாததாய்ப் பக்கத்தேயுள்ள நறுமணம் மிக்க படுக்கையில் களிப்புடன் தன்னையே மறந்து கிடந்து உறங்கிற்று. இவ்வாறு தாம் எதிர்பாராத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பத்தையெல்லாம் நின் மலையகத்து வாழும் பல்வேறு விலங்கினங்கள் எளிதாகப் பெற்று மகிழும் நாடனே? நீ தினமும் எதிர்பார்த்து வருகின்ற இன்பம் நினக்கு எவ்வாறு அரியதாகும்?'

'மிக்க அழகினையுடைய மூங்கிலைப் போன்ற பணைத்த தோள்களையுடைய இவளும், பிறர் நிறுத்தவும் நில்லாது நின்னையே சதா தொடர்கின்ற நெஞ்சத்தவளாகி நின்னிடத்தே பெருங் காதலைக் கொண்டிருப்பதால், இவளுடைய தந்தையின் அரிய காத்தற் தொழிலையுடைய காவலர் சோர்ந்திருக்கும் செவ்வியை மறைவாக அறிந்து - இரவுக்குறியினை நாடி வருவதற்கும் நீ உரியவனாவாய்!'

தோழி கூறிய மொழியை அசைவற்றுக் கேட்டு நின்றான் தலைவன்; அவன் எதைத்தான் பேசலாம்? தோழி இத்துடன் நின்றாளா? இல்லை. மீண்டும் தொடர்ந்தாள்.

'தலைவா! அதோ பசுமையான புதர்கள் சூழ்ந்துள்ள வேங்கை மரங்களும் ஒள்ளிய பூங்கொத்துக்கள் விரியப் பெற்றுள்ளன; மிக்க வெண்மையான திங்களும் வானிலே நிரம்புதலுற்று ஒளிர்கின்றது. அதனையும் நீ அறிவாயாக'

தோழியின் ஆழ்ந்த பொருளுரை முடிந்தது. தலைவனின் உணர்வு வேலைசெய்யத் தொடங்கியது. இருவருக்கிடையேயும் பலத்த மௌனம்!

தன்நாட்டு விலங்குகளின் குறியா இன்பத்தையும், தான் தலைவியிடத்துப் பெறும் குறித்த இன்பத்தையும் ஒன்றுக்கொன்று எடைபோட்டான். குறியா இன்பத்தை நுகர்ந்த விலங்குகளின் செயல் போலவே இதுவரை என் வாழ்நாள் கழிந்துவிட்டதாக எண்ணினான். தன் நாட்டில் வாழும் ஆண்குரங்கு மிளகுக்கொடி படர்ந்துள்ள சந்தனமரத்தில் ஏறும் தன் கடமையுணர்வை மறந்து வாழ்தல்போல, தானும் தன் தலைவியை உரிய காலத்தில் மணந்து - மேலான கற்பின் வாழ்வைத் தொடங்கும் கடமையில் இருந்து தவறிவிட்டதாக உணர்ந்தான்.

'-தலைவா வருகிறேன்!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'...............'

தோழி சென்று வெகுநேரம் ஆகிவிட்டது. தலைவனின் கால்கள் உணர்ச்சியற்ற பொறிபோல் இயங்கின. அவன் உருவம் இயங்கியதைவிட உள்ளந்தான் அதிவேகமாக இயங்கியது.

விலங்கினம் வேறு மனித இனம் வேறு. விலங்கினத்திற்கு ஒழுங்கு – கட்டுப்பாடு – கடமையென்கிற நியதிகளில்லை. அது எங்கும் எப்படியும் வாழும். ஆண் குரங்கும் அதேபோல் முதலில் வாழைக் கனியை உண்டது. அடுத்து பலாக்கனியை உண்டது. இரண்டையும் வயிறார உண்டபின் அது அமைதியாய் ஓரிடத்தில் இருந்திருக்கலாம். அப்படி இருக்கும் சுபாவம் அதற்கு இருந்தால்தானே! உடனே பாறை நெடுஞ்சுனையில் விளைந்த தேனையும் உண்ணத் தொடங்கியது. முடிவு? – ஒழுங்கு கட்டுப்பாடற்ற தன் செயலால் மதிமயங்கி கறிவளர் சாந்தம் ஏறும் தன் கடமையையும் மறந்தது. ஆண்குரங்கு தன் கடமையுணர்விலிருந்து தவறி மதிமயங்கி விட்டதென்றால் மனிதனும் அப்படி வாழலாமோ? அவன் குரங்கைப்போல் கட்டுப்பாடு, ஒழுங்கு, கடமைகளில் இருந்து தவறிவிட்டால் உலகம் அவனைப் பழித்துத் தூற்றாதோ?

தலைவியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நாடனோ அறிவும் ஆண்மையும் ஒருங்கே பெற்றவன். அவன் தன் கடமையுணர்விலிருந்து சிறிதேனும் தவறானென்றால் அவனுடைய அறிவுக்கும் ஆண்மைக்கும் எத்துணை இழுக்கு நேரிடும்! ஆண்குரங்கு வாழை, பலா, தேன், இவற்றை உண்டு அனுபவித்த இன்பத்தைப் பெறவேண்டும் என்று முன்னம் தன் மனத்துள்ளே குறித்து வாழ்ந்ததா என்றால் – இல்லை! அதற்கு அவ்வின்பம் குறியா இன்பம்! நாடன் தலைவியிடத்துப் பெறும் இன்பமோ –'அவன் மனத்திலே என்றும் குறித்த இன்பமாக விளங்கியது.' இவ்வின்பத்தைப் பெற்று வாழ்தலையே உயர்ந்த குறிக்கோளாகக் கொண்டு வாழ்கின்றான்.

குரங்கு தான் பெறும் குறியா இன்பத்தை இன்று பெறலாம் – நாளை பெறாமலும் விடலாம். ஆனால், தலைவன் தலைவியிடத்துப் பெறும் இன்பமோ அப்படிப்பட்டதன்று. அது என்றும் பெறவேண்டியது. அதுவே தன் வாழ்வை முழுமையாக்கும் இன்பமாக விளங்கும்போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வின்பத்தை அவன் பெறாமல் இருப்பதென்பது முடியாத காரியம்.'

தலைவியோடு கூடி மகிழும் இன்பமே தன் குறித்த இன்பமெனத் தலைவன் கொள்வதில் எதுவித தவறுமே இல்லை. அவ்வின்பம் மனிதனிடம் இயல்பாகத் தோன்றக் கூடியதுதான். அப்படியானால் எதிற்தான் தவறுண்டு? – இன்பத்தைப் பெறும் முறையிற்தான் தவறுண்டு!

தலைவன் தன் குறித்த இன்பத்தைப் பெறுவதற்குக் களவுப் புணர்ச்சியையே வாயிலாகக் கொள்வது தவறு. அவ்வின்பத்தைப் பெறுவதற்கு அமைந்த வாயில் கற்பிற்புணர்ச்சிதான். கற்பிற் புணர்ச்சியால் தன் குறித்த இன்பத்தைப் பெறுவதுதான் முறைமை. முறைமை வழி நின்று பெறும் இன்பத்தில் எவ்வித தவறும் இல்லை. இனி பிறர் அறிந்தால் பழிப்பாரே, என்ற அச்சமுமில்லை.

அச்சம் தவிர்த்து – அறவழி நின்று – நிலையாகத் தன் குறித்த இன்பத்தைப் பெறுவதுதான் தன் ஆண்மைக்குப் பெருமை தரக் கூடியதெனத் தலைவன் உணர்ந்தான்.

அவன் நல்லுணர்வால் உந்தப்பட்டு வெகுதூரம் வந்துவிட்டான். அதோ – குறியா இன்பத்தைப் பல்வேறு விலங்கினங்களும் எய்தி வாழும் தலைவனின் நாடும் நெருங்கிவிட்டது.

உயர்ந்த மலைமுகட்டில் நின்றவாறே தலைவன் ஒருமுறை தலைவியின் நாட்டை உற்றுப்பார்த்தான்!

பசுமையான புதர்கள் சூழ்ந்த வேங்கைமரத் தோப்பெங்கும் அழகிய ஒளி பொருந்திய பூங்கொத்துக்களின் இனிதான காட்சி; தேன் நிலாவின் பால் ஒளியிலே அவ்வழகிய மலர்க் கொத்துக்கள் புதுப்பொலிவோடு விளங்கின.

வானை ஒருமுறை பார்த்தான்!

'முழுநிலாவுக்கு இன்னும் மூன்றே மூன்று நாட்கள்தாம் உள்ளன. இதற்குள்ளே அவள் என் மணப்பெண் ஆகவேண்டும். இத் திங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பினால் என் குறித்த இன்பத்துக்காக மறு திங்கள் வரையன்றோ காத்திருக்க வேண்டும். இனிமேல் என்குறித்த இன்பம் – கேவலம்! களவுப் புணர்ச்சியிலே பெறுவதன்று. அவளை என் மனைவியாக்கி உரிமையோடு பெறும் அற வழியான கற்பிற் புணர்ச்சியினால் பெறுதலாகும்–' என்று தலைவன் தனக்குள் சொல்லியவாறே தோழி மொழிந்த மொழியை ஒரு முறை நினைத்தான்!.......

*கோழிலை வாழைக் கோள்முதிர் பெருங்குலை*
*ஊழுறு தீங்கனி உண்ணுநர்த் தடுத்த*
*சாரற் பலவின் சுளையொடு ஊழ்படு*
*பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்*
*அறியாது உண்ட கடுவன் அயலது*

*கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது*
*நறுவீ அடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும்*
*குறியா இன்பம் எளிதின் நின்மலைப்*
*பல்வேறு விலங்கும் எய்து நாட!*
*'குறித்த இன்பம்' நினக்கெவன் அரிய?*

*வெறுத்த ஏள் வேய்புரை பணைத்தோள்*
*நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்டு*
*இவளும் இளையள் ஆயின் தந்தை*
*அருங்கடிக் காவலர் சோர்பதன் ஒற்றிக்*
*கங்குல் வருதலும் உரியை பைம்புதல்*

*வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன*
*நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே.*

*(அகநானூறு - 2)*

'இவ்வளவு நுட்பமுள்ள உரையைத் தோழி கூறுவாளென்று நான் எதிர்பார்க்கவேயில்லை. குறியா இன்பத்தில் மூழ்கிய ஆண்குரங்காகிய கடுவனைப் போன்று, குறித்த இன்பத்தில் மூழ்கிய என் பிழைபாட்டைச் சொல்லாமலே சொன்னாள். அவளுடைய ஒவ்வொரு சொல்லாலும் என் மனக்கண் திறந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை மறுநாள் புதன் நாள்! அந்நாள் என் பூவைக்குப் பொலிவூட்டும் மணநாள்! ஆமாம்! அன்றிலிருந்தே அவள் என் மனைவி! என் வாழ்வில் என்றும் பிரிக்கமுடியாத துணைவி!' எனத் தலைவன் தன் உள்ளத்தே திடமான முடிவெடுத்தான்.

மலை முகட்டில் நின்று உணர்வு பெற்ற தலைவன் தன் ஊரின் எல்லைக் கோட்டிலே எடுத்தடி வைத்தான்! வன்மையாக அவன் வைத்த ஒவ்வொரு அடிகளும் குறித்த இன்பத்துக்கு வளங்கொடுத்தன. தான் குறித்த இன்பத்தைப் பெறுவதற்கு இனிமேல் அச்சம் வேண்டியதில்லை; அவ்வின்பத்தை உரிமையோடு பெறலாம் – முழுமையோடு பெறலாம் – எனத்தென்பு கொடுத்தன.

புதன் நாள்! –

குறிஞ்சி நில நாடனுக்கும் குறிஞ்சி நிலக் கோதைக்கும் திருமணம் நடந்தது. அந் நன்நாளில் தலைவன் தலைவி இருவரும் தனித்திருக்கும் வேளையில் தோழி சென்று மனமார வாழ்த்தினாள்.

–'தலைவா! குறித்த இன்பம் இனிமேல் நினக்கு எவ்வாறு அரியதாகும்!'

–'அரிதில்லை. – இன்றிருந்தே நிறைவு!'

முன்னம் தலைவனுக்குக் குறித்த இன்பம் பற்றிக் குறிப்பாக மொழிந்ததை மறுக்காமல் – மறவாமல் உணர்ந்து செயற்பட்ட தலைவனின் ஆண்மையைத் தோழி தன் மனதில் நினைந்து வியந்தாள். அவன் குறித்த இன்பத்தில் திளைத்து நல்லுணர்வோடு செயற்பட்டதினால்தான் இன்று இவ்வரிய திருமணத்தின் நன்நாளைப் பார்க்க முடிந்ததென உள்ளம் பூரித்தாள். அவளின் உள்ளப் பூரிப்பின் தன்மையைக் காதலர் கண்டு அவளை நன்றி உணர்வோடு பன்முறை நோக்கினர்.

தோழியும் சென்று விட்டாள்!

காதலர் இன்பப் பூங்காவில் கண் துயின்றனர். தலைவன் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த இன்பத்தை அன்றுதான் முதன்முதல் உரிமையோடும் முழுமையோடும் பெற்றான்!

ஊர்முழுதும் ஒளிபரப்பும் நெடுவெண் திங்கள் கருமையான முகிலுக்குள் ஓடி மறைந்தது.

அது ஏன் மறைந்தது?

காதலரின் குறித்த இன்பத்தைக் கண்டு நாணத்தால் மறைந்ததோ?!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதநிலக் காதல்

## புதிய உறவு

**மா**லைப் பொழுதிலே பரந்து விரிந்த பசுமையான நெற்கதிர்களை வருடி – நீர் நாய்கள் நீந்தி விளையாடும் தாமரை, அல்லி, மலர்களையுடைய நீர்த் தேக்கங்களிற்பட்டு – மிதந்து வரும் தென்றலின் இனிந்த சுகத்தை விட, அவளுடைய ஒளி தவழும் கதுப்புக் கன்னங்கள் அவனுக்குப் பன்மடங்கு சுகத்தை அளித்தன. தென்னங் குருத்திலும் மென்மையான அவளுடைய தோள்களைத் தன் மார்போடு இறுக அணைத்து, சிவந்து மலர்ந்த அவள் இதழ்களைப் பல தடவை சுவைத்தான். அவளுடைய கனிந்த முகத்திலும் செவ்விளநீர் மார்பிலும், அவனிட்ட முத்தங்களுக்கு அளவேயில்லை.

அடி வானத்தில் இதுவரை தெரிந்த பகலவனின் மெல்லிய பொற் கோடுகளின் கோலம் மெல்ல மெல்ல அழிந்து தேய்ந்து மறைந்து கொண்டே இருந்தது. வானப்பந்தலில் அங்கொன்று இங்கொன்றாகப் பல்லாயிரக் கணக்கான விண்மீன்கள் பூத்தாலும், அப் பூத்தலின் புத்தொளியை முழுநிலா தன் குளிர்ந்த வெண்மையான ஒளிக்கற்றையால் மூடிமறைத்து – தான் என்ற அகந்தையுடன் வானிலே பவனிவரத் தொடங்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளோ அவனுடைய அன்பின் அணைப்பிலே மெய்மறந்தாள்! நீண்டு வளர்ந்த அவளுடைய கருங்கூந்தலின் மலர்க் கொத்துக்கள் அவன் அணைப்பிலே கட்டவிழ்ந்து உதிர்ந்ததால், உதிர்ந்த அத்தேமலரை மீண்டும் எடுத்து அவளுடைய கூந்தலிலே இணைத்தான். இணைத்த அவனுடைய அன்புக் கரத்தைத் தன் மார்போடும் முகத்தோடும் பலதடவை ஒற்றினாள் அவள்.

–'அன்பரே! என்னைக் கைவிடமாட்டீர்களே!'

–'கண்ணே! உன்னை ஒரு பொழுதேனும் பிரிந்து வாழ்ந்திருக்கிறேனா?! உலகம் எனக்குப் பெரிதன்று! என் உயிரினும் மேலான உன் அன்புதான் எனக்குப் பெரிதாக இருக்கின்றது!'

–'அப்படியென்றால், என்னை என்றுதான் தங்கள் மனைக்கு அழைத்துச் செல்வீர்கள்?'

–'கவலை வேண்டாம் கண்ணே! நாம் இருவரும் வாழ்வதற்கென்றே தனிமனையொன்றை அமைத்திருக்கின்றேன்!'

–'உங்களின் இல்லத் தலைவி அவ்வளவு கொடியவளா?'

–'அப்படி யார் சொன்னார்? அவள், என்னைப் போல் உன்னையும் நேசிக்குந் தகமையுடையவள்.'

–'கண்ணாளா! அத்துணை அன்பு நிறைந்த உங்கள் மனையாளுக்கும் தங்களுக்கும் தொண்டு செய்து வாழ்கின்ற பாக்கியத்தை எனக்கு அளித்தாலென்ன? அதிலும் தங்களுடைய செல்வப் புதல்வனைக் கண்டு மகிழ எவ்வளவு தூரம் துடிக்கின்றேன் என்பதை அறியீரோ?'

–'பாவாய்! என் புதல்வனைத்தானே காணவேண்டும்? உன் மனம்போல் விரைவிலே காண்பாய்!' – என்று கூறிய தலைவன், அவள் மனதை வேறு திசைக்குத் திருப்ப முயற்சித்தான். அச்சமயம் பாணர்கள் யாழிலே எழுப்பும் மருதப் பண்ணிசை காற்றிலே மிதந்து வந்தது. அத் தேவ கானத்தைத் தலைவனும் அவன் தன் காதாற் பரத்தையும் கேட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய் மறந்தனர். அக் கானம் அவர்களுக்கு இன்பத்துள் இன்பமாகவே இருந்தது. பரத்தையின் குங்குமத்தால் எழுதப்பட்ட அவளுடைய விம்மிப் புடைத்த மார்புகளும், குளிர்ந்த முகமும், தலைவனுடைய அகன்ற மார்புப்பரப்போடு இணைந்து புதைந்தன. அவனோ அவளுடைய மென்மையான தோட்பரப்பைத் தன் நெஞ்சோடு இறுகத் தழுவி மீண்டும் அவள் அதரத்தை முத்தமிட்டுச் சுவைத்தான். அதனால் அவளுடைய இதழும் விழியும் நுதலும் அவனுடைய முகத்தில் முழுமையாய்ப் பதிந்துவிட்டன.

அப்பொழுது இன்பக் களிப்பைக் கண்டு நாணிக் கோணியதுபோல், வட்ட நிலா வானளாவப் பரந்து வளர்ந்துள்ள மருத மரத்தின் பெருங்கிளையினுள் மறையத் தொடங்கியது.

## தலைவியின் நெஞ்சம்

'காதல் வாடாத மலர்; தேடற்கரிய செல்வம்;' என்று எத்தனையோ விசை கூறியிருக்கின்றார். என்னைக் கட்டியணைத்துக் 'கண்ணே! மணியே! என் உடலோடு இணைந்த ஆருயிரே!'- என்று ஆயிரந்தடவை சொல்லியிருக்கின்றார். இன்று அவருக்கு நான் கண்ணுமன்று; மணியுமன்று; ஆருயிருமன்று. என்னைத் தன் உடலோடு இணைத்து 'ஆருயிரே! என்று சொன்னதெல்லாம் எத்துணை பொய்யான மொழியாக இருக்கின்ற தென்பதைத் தலைவரே எனக்குக் காட்டி விட்டார். என்னைத் திருமணம் புரிந்து மூன்று ஆண்டுகள் கூட ஆகவில்லை. அதற்குள்ளாகவே யாழிலே பாடவல்ல யாரோ ஒரு பாணனின் தொடர்பால் அவருக்குக் காதற் பரத்தையின் உறவும் கிடைத்து விட்டது, இன்று அவள்தான் அவருக்கு வாடாத மலராகவும், தேடற்கரிய செல்வமாகவும் விளங்குகின்றாள். மலர் பரப்பிய இக் கட்டிலில் சிறுபொழுதேனும் என்னை அணைத்து இன்பங் காணத் தவறாதவர், பல இரவுகள் தனிமையிற் துன்புற்று உழலும்படியாக என்னை ஆக்கிவிட்டாரே! எனக்குக் கொடுமை அளிக்கும் பொன்னிலவும் தென்றலும் இரவுப் பொழுதும் அவருக்குக் கோடான கோடி இன்பத்தை அளிக்கட்டும்! காதற் பரத்தையின் மடிமீது தலைவைத்து விடியும்வரை தூங்கட்டும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் என்னை மறந்தாலும் மறக்கலாம். ஆனால், அவருக்கும் எனக்கும் உறவின் கொம்பாகத் திகழும் இப் புதல்வனை மறக்கலாமோ?

நீர் நாய்கள் நீந்தி விளையாடும் நீர்த் தேக்கத்திலே பூத்துக் குலுங்கும் தாமரைத் தாதுகளையுடைய அல்லியிதழைப் போன்ற உள்ளங்கையை அசைத்து - பவளத் துண்டுகளான சிவந்த வாயினால் திருந்தா மழலை மொழியைப் பேசும் தம் புதல்வனைக்கூட பார்க்கத் தவறாதவரன்றோ அவர்! அப்படிப்பட்டவரே பல நாட்களுக்குமேல் காதற் பரத்தையுடன் புதியதோர் இல்லத்திலேயே தங்கிவிட்டார்.

அன்பு, பாசம், உறவு, இவையாவும் ஒன்று திரண்ட புதல்வனையே தலைவர் மறந்து வாழக் கூடிய காதல் உணர்வைப் பரத்தையிடம் கொண்டாரென்றால் - அக் காதல் வாழ்க!'

இவ்வாறு தலைவி தன் நெஞ்சத்தே நீண்ட சஞ்சல நினைவுகளை அலையலையாக எழுப்பினாள்.

பல இரவுகள் தன் நேசப் புதல்வனோடு தனித்து அவள் அடைந்த மனோநிலையின் துன்பத்தைத் தலைவனே அறியாமல் வாழ்கின்றானென்றால் ஊர்தான் எப்படி அறியும்? ஊரோ மௌனம் நிறைந்த கலையாத உறக்கத்தில் உறங்கியது. இடையிடையே கோழிகள் மாத்திரம் தலைவியின் துயரத்தை ஊரறியச் சொல்லுதல் போல் சிறகடித்துக் கூவின. அக் கூக்குரலை யார் அறிவார்? தலைவி ஒருத்திதான் அறிவாள். வானப்பந்தலில் முளைத்த வெள்ளிக் கூட்டங்கள் படிப்படியாகக் கலைந்த பின்னும் விடிவெள்ளி மாத்திரம் தன் ஒளிக்கதிரின் மாட்சியை நிலையாக நின்று காட்டியது. கோழிக்கூட்டம் தத்தம் உரத்த குரலைக் கடைசி மூச்சு உள்ளவரை எழுப்பி மக்களைத் தட்டியெழுப்பும் கடமையுணர்வை மேற்கொண்டது. அப்பொழுதுதான் இதுவரை தூங்காதிருந்த தலைவியின் விழிகள் மூடியும் மூடாமலும் காட்சியளித்தன.

இனிமேல் அவள் உறக்கத்திற்கு இடமேது! தினமும் அவள் தனிமையிலே விடும் சஞ்சலத்தின் பெருமூச்சுக்கு முடிவேது!

நாம் காணுகின்ற உலகத்தின் ஒரு பகுதி துன்பம்; இன்னொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி இன்பம்; அவ்வின்பத்துக்கு உறுதுணையளிக்கும் இரவு மறைந்தது! பொழுது விடிந்தது!

## எதிர்பாராத நிகழ்வு

தேரோடும் வீதி!

அந்த வீதியிற்தான் தலைவனின் செல்வச் செழிப்பான இல்லம் இருந்தது. புறத்தோற்றத்தில் அழகாகக் கட்டப்பட்ட அவ்வில்லத்தில் எல்லாவித வசதிகள் இருந்தாலும் ஏதோ ஒரு வித சஞ்சலம் நிறைந்த சூனியம் அங்கு தாண்டவமாடியது. தலைவன் இருந்தும் இல்லாத இல்லம் மாடமாக இருந்தாலும் கூடமாக இருந்தாலும் ஏது பயன்?

தலைவனும் தலைவியும் உயர்ந்த செல்வக் குடியில் பிறந்தவர்கள். அவர்களின் இல்லற வாழ்வு நல்லறமாகவே திகழ்ந்தது.

சுற்றந் தழுவி - விருந்தினரை ஓம்பி - ஊரிலே பெருமையோடு வாழ்ந்த தலைமக்களின் குடும்பத்தில் சிறு மனக்குறை!

அக் குறை யாரால் ஏற்பட்டது? பாணனால் ஏற்பட்டதா? காதற் பரத்தையால் ஏற்பட்டதா? தலைவனால் ஏற்பட்டதா?

ஆராய்ந்து பார்த்தால் காதற் பரத்தை அதற்குப் பொறுப்பாளியல்லள்.

அவள்தான் என்னசெய்வாள்!

தலைவன் முதன் முதலாகப் பாணனுடன் பரத்தையின் இல்லத்துக்குச் சென்ற சமயம் இசை அமுதைக் கேட்பதற்கென்றே சென்றான். அவனுடைய கலையுணர்வு நாளடைவில் அவளிடத்தில் காதலுணர்வாக மாறியது. அவளோ தலைவனின் பொருளையோ, செல்வத்தையோ சிறிதேனும் விரும்பவில்லை. அவனுடைய அழகுங் குணமும் அவளிடத்தில் உண்மையான காதலை ஏற்படுத்தியது. அன்றிலிருந்தே தன் கலைவாழ்வை முற்றிலும் துறந்து, தலைவனோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து வாழும் குடும்ப வாழ்வையே மேற்கொண்டாள்.

வாழ்வில் ஏற்படும் எதிர்பாராத சூழ்நிலைகள் மனிதனையே அடிமைப்படுத்துகின்றன. முடிவில் சூழ்நிலை ஆக்கித் தந்த புதிய வாழ்விலிருந்து அவன் தப்ப முடியாது திண்டாடுகின்றான். சூழ்நிலையை அடியோடு அகற்றிவிட்டால், முடிவில் அவன் திண்டாடப்படவேண்டிய அவசியமேயில்லை. இதை உணராத சமுதாயம் யார் யாரிலோ குற்றங்களைச் சுமத்துகின்றது.

தலைவனுடைய வாழ்வில் புதுமையோடு – பொலிவோடு – ஏற்பட்டவள் பரத்தையல்லள். பரத்தையர் குலத்தில் பிறந்த நற்குணம் படைத்தவள்! அதனால்தான் அவனுக்கு அவள் காதற் பரத்தையாக விளங்கினாள். எப்படியாக இருந்தாலும் இவர்கள் இருவர் மட்டில் ஏற்பட்ட புதிய உறவு பழித்துரைக்கக் கூடியதொன்றாகவே இருந்தது. ஒருவனுக்கு ஒருத்தி; ஒருத்திக்கு ஒருவன்; இதுதான் உண்மையான அறவாழ்க்கை. காதல் வாழ்க்கையும் இதுவே. இதைத் தலைவன் முன்னமே உணர்ந்து செயற்பட்டு இருப்பானாகில் காரியம் இவ்வளவு தூரம் முற்றியிருக்காது. காரியம் முற்றியபின் இதைப்பற்றிக் கூறி, அவன் மட்டில் உணர்வை எழுப்பிப் புதிய திருப்பத்தை உண்டுபடுத்த தலைவியோடு உயிரோடு உயிராய்ப் பழகுந் தோழியும் விரும்பவில்லை. 'ஏதோ நடப்பது நடக்கட்டும்; நடப்பதை நல்ததாகக் கண்டு கொள்வோம்' – எனத் தலைவியும் ஒன்றுந் தெரியாதவள்போல் இருந்துவிட்டாள்.

ஒரு நாள்!

மாலைப் பொழுதிலே புறநகரின் பூம் பொழிலில் கலந்து மகிழத் தலைவனும் காதற் பரத்தையும் தேரிலே சென்றனர். தேரோடும் வீதி என்றுமில்லாத புதுப்பொலிவோடு அன்று காட்சியளித்தது. பகலவனின் படுக்கை கொள்ளும் அழகிய காட்சியை வீதியோரங்களிலுள்ள உயர்ந்த மாடங்கள் மறைத்தது. குடும்பப் பெண்கள் முற்றத்தில் நீர் தெளித்து மனையினுள் நறும் புகையிட்டனர். அன்றுதான் தலைவனும் முதன் முதலாகக் காதற் பரத்தையுடன் அவ் வீதியில் வந்தான். தேரிலே குதூகலித்துச் சென்ற அக் காதலரின் மனம் ஏனோ தடைப்பட்டுத் தட்டுத் தடுமாறியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரும் நின்றது!........

இடையே மூன்று வயது நிரம்பாத ஒரு சிறுவன் சிறுதேர் உருட்டி விளையாடும் அழகான கோலம்!

அச் சிறுவனின் உள்ளங்கை, தாமரைகளின் பூந்தாதாகிய அல்லியின் அயலெ இருக்கும் மெல்லிய இதழ் போன்று காட்சியளித்தது. சிவந்த அழகிய வாய், பவளத் துண்டுகள் போன்று தோற்றமளித்தது.

குதலை மொழி பேசும் பருவமுள்ள இச் சிறுவன் யார்?

கண்டால் யாவரும் விருப்பங்கொள்ளும் அவனைக் காதற் பரத்தை நன்றாக உற்று நோக்கினாள்! நோக்குந்தோறும் அவளுடைய பார்வையில் பாச உணர்ச்சி தோன்றியது. முகம் முன்னதை விடப் பன்மடங்காக மலர்ந்தது.

அவளுடைய கடைக்கண், ஒரு முறை தலைவனின் முகத்தை உற்றுப் பார்க்கத் தவறவில்லை.

தலைவனின் முகத்தில் எதிர்பாராத ஒரு வகைத் திகைப்பு! இப்படி ஒரு நிகழ்ச்சி நிகழுமென அவன் எதிர் பார்க்கவேயில்லை!

அச் சிறுவனுக்குந் தலைவனுக்கும் உள்ள தொடர்பை அவள் நன்றாகப் புரிந்துகொண்டாள். அக் கணமே அச் சிறுவனிடத்துப் புதிய பற்றும் - பாசமும் - நேசமும் - அவள் இதயத்தில் வேரூன்றின. உடனே அவ்வாரணங்கு தேரை விட்டுக் கீழே இறங்கினாள்.

'தன் புதிய காதற் பறவையாகிய கன்னிகைக்கு, அச் சிறுவன் யார்? என்பது வெளிப்படையாகத் தெரிந்து விட்டது! இனிமேல் தான் விழிப்பதிலும் திகைப்பதிலும் யாது பயனுமில்லை! - எனத் தலைவனும் நினைத்துத் தேரைவிட்டுக் கீழே இறங்கினான்.

தலைவன் இறங்கிய இடமோ அவனுக்குப் பழக்கப்பட்ட இடந்தான். முன்னிருக்கும் உயர்ந்த மாடமுள்ள மனைதான் முல்லைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியாளாகிய அவன் மனைவியும் அவனும் வாழும் மனை. அம்மனையையும் மாசற்ற அவன் மனையாளையும் மகனையும் காணவேண்டுமெனத் துடித்த காதற் பரத்தைக்கு இதோ அவர்களைக் காண்பதற்கு அரிய வாய்ப்புக் கிடைத்துவிட்டது.

காரிகை தன் கூர்மையான விழிகளை அகல விரித்துச் சுற்றுமுற்றும் ஒருமுறை பார்த்தாள்!

அவள் பார்வைக்கு ஒருவருமே தென்படவில்லை. அவளையறியாமலே அவளுடைய கொவ்வையிதழில் முத்துப் பற்கள் ஒளிவிட்டுப் பிரகாசித்தன. மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்த அம் மங்கை தமியனாய் நின்ற அச்சிறுவனை நெருக்கமாக அணுகித் தன் இரு கரங்களாலும் 'என் உயிரே! என்னிடம் வருவாயாக!' – என்று சொல்லி அவனை வாரி அன்போடு அணைத்தாள்.

செல்வப் பூண்கள் அணிந்த இளமுலையாள் – தன் மார்போடு அவனை அணைத்துக் கொள்ளும் தாய்மை உணர்ச்சியை, மனையின் முற்றத்தே நின்ற மனையாள் தலைவி குறுகுறிப்பாகப் பார்த்தாள்! அவளுக்கு அவள் யார் என்பது நன்றாகத் தெரிந்து விட்டது.

தலைவியோ காதற் பரத்தையின் மருங்கே நின்ற தன் தலைவனைக் கண்டும் காணாதவளாய்த் தன்னை யார் என்பதையும் காட்டிக் கொள்ளாமல் விரைந்து வந்து தன் புதல்வனையும், புதல்வனை அணைத்து மகிழும் பூவையையும், அணைத்துக் கொண்டாள்!

பூவையோ தான் அணைத்த கரங்களை மெல்ல தளர்த்தி தலைவியைப் பார்த்துப் பேதுற்றாள்!

தலைவி, அவளுடைய பேதமை நீங்க, 'மாசற்ற இளைய மகளே! ஏன் மயங்குகின்றனை? நீயும் இவனுக்கு ஒரு தாய்தானே!' என்றாள்.

தலைவி கூறிய இச் சொற்கள் ஒவ்வொன்றும் காதற் பரத்தைக்கு ஒருவித நாணத்தை ஏற்படுத்தின. தான் தலைவனுடன் கொண்டுள்ள களவொழுக்கத்தைத் தலைவி அறிந்துதான் இம் மொழியைக் கூறினாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை உணர்ந்தாள். தாம் செய்த களவினைக் கண்டு கொண்டவரின் முன்பாகக் களவு செய்தவர் தம்முடைய தவறினை ஒப்புக்கொண்டு தலை கவிழ்ந்து நிற்பது போன்று பரத்தையும் தலைவியின் முன்பாகத் தலை கவிழ்ந்து நின்றாள்.

நிலம் பார்த்த அவளுடைய முகத்தில் நாணம் மேலும் புரையோடியது. நிலத்தைத் தன் கால் விரல்களால் பலமுறை கிளைந்து கீறினாள். ஒவ்வொரு கீறலும் அவளுடைய மனத்தின் கீறலாக நிலத்தில் பதிந்தது.

தலைவி கவலையற்ற தன் புதல்வனின் முகத்தை வருடியவாறு ஒரு முறை தலைவனைப் பார்த்தாள்!

தலைவனோ தன் பலமான கரத்தைத் தேர் முனையில் அழுத்தியவாறு யாதொன்றையும் அறியாதவன் போல் வேறு பக்கம் தன் பார்வையைச் செலுத்தி நின்றான். அவனுடைய அகன்ற காற் பாதத்தின் நிலச்சுவட்டின் ஆழம் அவன் மனதிற் குமுறி எழும் குழப்பத்தின் எரிமலையைப் படம் பிடித்துக் காட்டியது.

குறிப்பறிந்து ஒழுகவல்ல தலைவி, நேசப் புதல்வனை இடுப்பில் அணைத்தவாறு அவ்விடத்தை விட்டுப் பெயர்ந்தாள்!....

ஒரே அமைதி!

தலைவன் கொதிப்படைந்த தன் பலமான கரத்தால் ஆடாமல் அசையாமல் பெயராமல் நின்ற ஆரணங்கின் தோளைத் தழுவியவாறு தேரை நோக்கினான்!

புதல்வனோடு நகர்ந்த தலைவி, மனையின் உள் வாசலை அடைந்ததும் அவளை அறியாமலே அவளுடைய கண்கள் திரும்பவும் வீதியை நோக்கின!

– தலைவனோ தன் ஒரு கரத்தால் தையலை அணைத்து மறு கரத்தால் குதிரையின் கடிவாளத்தை மிடுக்கத் தொடங்கினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர் நகர்ந்தது! மெல்ல மெல்லச் சென்ற அதன் வேகம் காற்றை விட அதிகமாகித் தரை அதிரும்படி மாறியது! –

–கற்பின் பாவை புதல்வனின் கன்னத்தைத் தன் கன்னத்தோடு ஒற்றியவாறு நீர் திரையிடும் கண்களால் தேரையே பார்த்தபடி நின்றாள்!

## பரத்தையின் நெஞ்சம்

**உ**லகம் வெறும் இன்பத்துக்குத்தான் அடிமையானதா? அவ்வின்பத்தைப் பெறுவதற்குப் பரத்தையராகிய நாங்கள்தாம் வெறும் கருவிகளாக அமைந்திருக்கிறோமா? எங்களுக்கென்று உணர்ச்சியில்லையா; உணர்வில்லையா? அப்படியானால் நாங்கள் யாவருமே இன்பத்துக்கென்றே அமைந்த உணர்வற்ற சதைப் பிண்டங்களா? குலமகளிராக வாழ்வதற்குத் தகுதியற்றவர்களா? ஆமாம்! தகுதியற்றவர்கள்தாம். சதா விலைமகளிர் – விலைமகளிர் – என்ற பெயரோடு வாழ்ந்து மடியவேண்டிய நியதிதான் எம்மைப் போன்றவருக்குக் கிடைத்துவிட்டதே!

அன்று! – தலைவர் பாணனுடன் முதன் முதலாக என் இல்லத்துக்கு வந்தார். அவர் வருகையால் என் இல்லத்திலே புதிய ஒளி உதயமாகியது. இல்லையில்லை; என் இதயத்திலேதான் புதிய ஒளி பிறந்தது. அவருடைய அழகையும், ஆண்மையையும், அறிவையும், குணத்தையும் கண்ட மாத்திரத்திலேயே என் உள்ளம் அவருக்கே அடிமையாகிவிட்டது. என் உள்ளத்தைக் கோவிலாக எழுப்பினேன். அக் கோவிலில் யான் வணங்குந் தெய்வமாக அவரையே கண்டேன். உண்மையில் அவருடைய சிறு பொருளைக் கூட யான் விரும்பியதில்லை. முற்றிலும் அவருடைய அன்பைத்தான் விரும்பினேன். அவர் ஒரு முறை என்னை அன்பே என்றால் போதும்; அனைத்தையுமே மறந்துவிடுவேன்! ஒரு முறை உயிரே என்றால் போதும்; உலகையே அவராகத்தான் காண்பேன்! உலகிலே அவரைத் தவிர வேறொன்றுமே இதுவரை எனக்குப் பெரிதாகத் தென்படவில்லை. இனிமேலும் அப்படித்தான். ஆடலென்றும் பாடலென்றும் எத்தனையோ கலைகளைக் கற்றேன். கற்ற கலை யாவும் அவருக்கே அர்ப்பணித்து விட்டேன். அவர் ஆடச் சொன்னால் ஆடுவேன்! பாடச் சொன்னால் பாடுவேன்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிப்பாடி மகிழ்வதற்கே அன்று மருத மரத்தோப்புக்குச் சென்றோம். செல்லும்போதுதானே தலைவரின் செல்வப் புதல்வனை நான் பார்க்க நேர்ந்தது. தன் சிந்தையை எனக்குச் சொந்தமாக்கிய செந்தமிழ் மகிழ்நனின் முகத்தைத்தான் அச் சிறுவனிற் கண்டேன்! 'கண்டு மகிழ்ந்து கொண்டாட எதிர்பார்த்திருந்த நேசத் தலைவரின் மாசற்ற புதல்வன் இவனேதான்' என உணர்ந்தேன். உணர்வின் அலைகள் உந்த உள்ளத்தோடு, சிறுதேர் உருட்டித் தெருவில் விளையாடி நின்ற அத் தேன் மழலைச் செல்வனை 'வருக மாள என் உயிரே' என்று கூறி வாரி அணைத்தேன். அவ்வணைப்பிலே என்றுமில்லாத புதியதோர் இன்பத்தையே கண்டேன். அவ்வின்பம் தாய்மை இன்பத்தைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்? உண்மையான தாய்மை இன்பத்தில் திளைத்து நின்ற என்னை வேறொரு தாய்மையுருவம் கட்டியணைத்தது. அவ்வுருவம் யார்? அவள்தான் அப்புதல்வனின் தாய்! - அவளுடைய அணைப்பிலே நாணமுற்று, செய்கின்ற செயல் எதுவென அறியாத பேதையைப்போல் ஆகிவிட்டேன். என் பேதமையைக் கண்ட அவளோ என்னைப் பார்த்து 'மாசில் குறுமகள்! எவன் பேதுற்றனை? இவற்கு நீயும் தாயை!'- என்றாள். அவ்விடத்தில் இவ்வன்பான உரையை உரைப்பாளென யான் எதிர்பார்க்கவேயில்லை. தலைவனோடு யான் கொண்ட களவுறவை அவள் முன்னமே நன்றாக அறிந்திருந்தாலும் அப்பொழுதுதான் அவ்வுறவின் வெளிப்பாட்டைக் கையுமெய்யுமாகக் கண்டாள். கண்டவள் முன்னிலையில் களவுறவைக் கொண்ட யான் எப்படித்தான் தலைநிமிர்ந்து நிற்க முடியும்! நிலம் பார்த்த முகத்தோடு ஒன்றுமே பேசாது கால் விரல்களால் நிலத்தைக் கிளைந்தேன். அதற்குமேல் அவள் நின்றாளா? எப்படித்தான் நிற்பாள்! குறிப்பறிந்து நடக்கும் குலமகளன்றோ அவள். அதனால்தானே தேரோடு தலைவன் நின்றபடி நிற்க - யானும் தலைகவிழ்ந்து நிலத்தைக் கால் விரல்களால் கிளைந்தபடி நிற்க - அவளும் தன் புதல்வனோடு சென்றாள்!

தலைவனோ, எவ்வித பரபரப்பையும் காட்டிக்கொள்ளாமல் என்னை ஒரு கையால் அணைத்தவாறு தேரைச் செலுத்தினான். தேர் பறந்தது. தலைவனின் சொந்த மனை - தெருக்கோடி - யாவுமே மறைந்தன.

என்னமோ அன்று நடந்த அந்நிகழ்ச்சியை இன்றுவரை என்நெஞ்சம் மறக்கவில்லை. தலைவனின் கற்புள்ள மனையாள் என்னைப் பார்த்துக் கூறிய 'மாசற்ற குறுமகள்! எவன் பேதுற்றனை? இவற்கு நீயும் ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் தானே!' என்று உரைத்த மொழிகள் இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. அவற்றுள் 'குற்றமில்லாத இளமை பொருந்திய மகளே!' என்னும் சொற்கள் என்னைக் கொல்லாமலே கொல்கின்றன. அவளுக்கு யான் குற்றமுடையவளாக இருக்கவும், அவள் என்னை 'மாசில் குறுமகள்' என்றாளே! அவளைக் காட்டிலும் இளமை பொருந்திய குறுமகளாக இருக்கிறேன் என்பதற்காகத்தானா தலைவர் என்னிடத்தில் உறவுகொண்டார்! அப்படியானால் இன்னும் ஐந்து திங்களுக்குப் பின் யானும் ஒரு குழந்தைக்குத் தாய்தானே! கட்டிலிலே என்னைக் கட்டியணைத்துத் தலைவர் தந்த காதற்பரிசு – என் வயிற்றில் வளர்ந்து வருவதை அவர் அறிந்தும் மேலும் மேலும் என்னிடத்தில் அன்பைத்தானே சொரிகின்றார். இன்பம் ஒன்றுக்காக அவர் என்னிடம் சொந்தம் கொள்ளுகின்றாரென்றால் மேலும் மேலும் அவர் என்னிடத்தில் எல்லாவிதத்திலும் அக்கறைகாட்டி வாழ வேண்டியதில்லையே?!

தலைவி உண்மையில் பெருந்தன்மையுடையவளே! என் குலம் இன்னதென்பதை அறிந்தும் என்னைத் தன் நிலையிலே வைத்தாள். தன் புதல்வனுக்கு யானும் ஒரு தாய்தான் என்று கூறி என்னையும் சரி நிகராகத் தன்னோடு இணைத்துப் போற்றினாள். இப்படிப்பட்ட பெருந்தன்மையுள்ள மனையாளையும் மனம் நிறைந்த புதல்வனையும் மறந்து, தலைவர் என்னுடன் மாத்திரம் இணைந்து வாழ நான் ஒருபோதும் விரும்பவில்லை. அவர் என்னோடு தொடர்பு கொண்ட ஆரம்ப காலங்களில் பெரும்பொழுதைத் தன் மனையிலும், சிறுபொழுதை என் மனையிலும் களிப்பார். படிப்படியாக நமக்குள்ள உறவு வலுப்பெற்றதும் என் மனையிற்தான் அதிக நாட்களைக் களிக்கத் தொடங்கினார். என் தூண்டுதலினால்தானே இப்பொழுது அடிக்கடி தன் மனைக்குச் சென்று தலை காட்டுகின்றார்.

## காதலர் கூடினர்

காதலன் தன்னோடு கலந்து மகிழக் காலமெல்லாம் காத்திருந்தாள் தலைவி. அவளுடைய வாழ்க்கை மேடையில் வீசிய கடும் சூறாவளி, இப்பொழுது ஓய்ந்து அமைதியாகித் தென்றல் வீசத் தொடங்கியது. வாடிய அவள் மலர் முகம், மீண்டும் வனப்புற்றது! தேடிய அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம், தலைவனின் அன்பு ஒன்றுதான்! அவ்வன்பும் இப்பொழுது கிடைத்துவிட்டது!

மாலை வேளை! வீட்டின் பின்புறம் அமைந்த அழகான தோட்டத்தில் தன் புதல்வனுக்குப் பாகோடு கலந்த பாலை ஊட்டிக்கொண்டிருந்தாள் தலைவி. அப்பொழுது தலைவன் பின்புறமாக வந்து தன் புதல்வனின் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினான். பாலை உண்ட புதல்வன், தாயின் இடுப்பின் அணைப்பை விட்டு வீட்டின் நடுச் சாலுக்குச் சென்று பல மண் பொம்மைகளை வைத்து விளையாடினான். அவன் பொம்மைகளோடு விளையாடி மகிழும் காட்சியைக் கண்ட தலைவன் தலைவி இருவருடைய உள்ளத்திலும் இன்பந் திளைத்தது!

தலைவன் தன் இரு கரங்களாலும் தலைவியின் தளிர் மேனியைப் பற்றினான். நாணத்தால் சிவந்த அவளுடைய வதனம் நிலம் நோக்கியது. அவனோ தன் அன்பு விரல்களால் அவள் பனி முகத்தைத் தன் முகத்துக்கு எதிரே நிமிர்த்தி, அன்பே! – என்றான்.

அவள் ஒன்றுமே பேசவில்லை!

–'கண்ணே! காலமெல்லாம் உன்னோடு கலந்து மகிழும் இன்பத்தை விட வேறு எவ்வின்பத்தையும் யான் அறிந்திலேன்!' என்றான்.

தலைவியின் இதழில் மெல்லிய குறுநகை!

–'உயிரே! உன் உறவை விட யான் எவ்வுறவையும் பெற்றிலேன்! நீதான் என் உறவு! நீதான் என் உலகம்!' என்றான். 'அத்தான்! இது முற்றிலும் உண்மையென்றால் எனக்கமைந்த வாழ்வை எண்ணிப் பெருமைப்படுகின்றேன்' என்றாள்.

–'அதிலும் ஐயமா அன்பே!' என்றான்.

–'அதற்குள்ளாக அந்நிகழ்ச்சியை மறந்துவிட்டீர்களா?' என்று மெல்லிய நகையோடு சொன்னாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவனோ ஒன்றுமே அறியாதவன்போல், 'எதைப் பற்றி? கூறன்பே! கூறு!' – என்று கேட்டான்.

அதற்கு அவளோ, முன்பு நடந்த அவ்வெதிர் பாராத நிகழ்ச்சியைச் சொல்லத் தொடங்கினாள்!

'நீர் நாய்களையுடையதான பழைய நீர்த் தேக்கம்; அத் தேக்கத்தின்கண் தாமரைகள் தழைத்திருக்கும். தழைத்த அத் தாமரைத் தாதோடு அயலே உள்ள அல்லியின் மெல்லிய இதழினைப் போன்ற, குற்றமற்ற உள்ளங்கையினையுடையவன் நம் புதல்வன். அவனோ பவளமணி போன்ற சிவந்த அழகிய தன் வாயினால், நாவினால் பயின்று பழக்கப்படாத யாவரும் கேட்டு மகிழக் கூடிய தீஞ்சொல்லைப் பேசுபவன். அவனுடைய தோற்றமும் குதலை மொழியும் யாவரும் கண்டு கேட்டு விரும்பக் கூடியன. இப்படிப்பட்ட கவர்ச்சியினையுடைய பொற்றொடியினை அணிந்த நம் புதல்வன் – ஒரு நாள் தனியனாய்த் தேர் ஓடும் வீதியில் சிறு தேர் ஓட்டி விளையாடிக் கொண்டு நின்றான்.'

'அப்பொழுது அவ் வீதியில் உம்மோடு வந்த காதற் பரத்தை புதல்வனை நோக்கியவிடத்து – புதல்வனின் முகமும் நின்னுடைய முகமும் ஒரே தன்மைத்தாக இருக்கும் நிலைகண்டோ என்னவோ – தன் கூர்மையான பற்களைக் காட்டிக் குறுநகை புரிந்தாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். ஒருவரேனும் அவ்விடத்தில் காணுநர் இன்மையால் துணிந்து அவனருகே சென்றாள். சென்ற மாத்திரத்தில் மிக்க மகிழ்ச்சியை உடையவளாகப் புதல்வனைப் பேணி 'என் உயிரே! என்னிடம் வருவாயாக!' எனக் கூறித் தன் கரங்களால் அவனைத் தூக்கி – பொன்னாலாகிய அணிகளைச் சுமந்த தன் பூண்தாங்கு இளமுலையோடு மருவ அணைத்துக் கொண்டாள்!'

அவ்வேளையில் நின்தோள் கண்டும் காணாதவளாய் விரைந்துபோய் என் புதல்வனோடு சேர்த்து அவளையும் அணைத்துக்கொண்டேன். அப்பொழுது அவளோ, செய்யும் செயல் அறியாது பேதுற்றாள். யானோ பேதுற்ற அவள் நிலையைக் கண்டு, 'மாசில்லாத என்னைவிட வயதில் குறைந்த இளைய மகளே! ஏன் பேதுற்றனை? இவற்கு நீயும் தாய்தானே!' என்று அவள்பால் அன்போடு கூறினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் செய்த களவினைக் கண்டு கொண்டவரின் முன்பாகக் களவு செய்தவர் எப்படித்தான் தலை நிமிர்ந்து நிற்பர்! அப்பொழுது அவளோ, தான் தலைவனாகிய உங்களிடம் கொண்ட உறவாகிய களவை - தவறை - என் முன்பாக ஒப்புக் கொள்பவள்போல் தலை கவிழ்ந்து - தன் கால் விரல்களால் நிலத்தைக் கிளைந்து நாணி நின்றாள்!

'வானத்து அணங்கருங் கடவுளாகிய அருந்ததியைப் போன்ற கற்புள்ள அவளும் - நின் மகனுக்குத் தாய் ஆகுதல் பொருந்துவதே!' என்பது கருதி, மகிழ்நனே! நாணி நின்ற அவள் நிலை கண்டு - என் நிலையோடு சமனாக அவளையும் வைத்துப் பேணினேன் அல்லனோ! என்றாள்.

*'நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்*
*தாதின் அல்லி அயல்இதழ் புரையும்,*
*மாசுஇல் அங்கை, மணிமருள் அவ்வாய்,*
*நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்,*
*யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனைத்,*

*தேர்வழங்கு தெருவில், தமியோற் கண்டே,*
*கூர்எயிற்று அரிவை குறுகினள்; யாவரும்*
*காணுநர் இன்மையின், செத்தனள் பேணிப்*
*பொலங்கலஞ் சுமந்த பூண்தாங்கு இளமுலை,*
*'வருக மாள, என்உயிர்!' எனப்பெரிதுஉவந்து,*

*கொண்டனள் நின்றோள் கண்டு, நிலைச் செல்லேன்,*
*'மாசுஇல் குறுமகள்! எவன் பேதுற்றனை?*
*நீயும் தாயை இவற்கு!' என, யான்தற்*
*கரைய, வந்து விரைவனென் கவைஇ -*
*களவுஉடம் படுநரின் கவிழ்ந்து, நிலம்கிளையா,*

*நாணி நின்றோள் நிலைகண்டு, யானும்*
*பேணினென் அல்லனோ - மகிழ்ந! - வானத்து*
*அணங்குஅருங் கடவுள் அன்னோள்நின்*
*மகன்தாய் ஆதல் புரைவதுஆங்கு எனவே.'* *(அகநானூறு -16)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவி மொழிந்தாளா? இல்லையில்லை! ஒவ்வொரு மொழியாலும் தலைவனின் நெஞ்சத்தைக் குடைந்தாள். அக் குடைவினால் அவன் அசைவற்ற சிலையானான்.

நீண்ட நேர மௌனம்!

மௌனத் திரையைப் பொம்மைகளோடு விளையாடிக் கொண்டிருந்த புதல்வன், யாவரும் விருப்பமுறும் மழலைச் சொற்களால் விலக்கினான்.

மீண்டும் தலைமக்களிடத்தில் காதலுரை கிளம்பியது! எத்துணை காதல்மொழிகள் கிளம்பினாலும் தலைவனின் இதயத்திலோ அமைதியில்லை. பரத்தையின் உறவால் 'மனையாளின் மனம் புண்பட நடந்து விட்டேனே என மனம் புழுங்கினான்.

நேரமோ நள்ளிரவு!

அகன்றுயர்ந்த வேலைப்பாடுகள் அமைந்த அழகான கட்டில்; அதிலே தலைவன் – தலைவி – புதல்வன் – மூவரும் கண்துயின்றனர். தலைவன் உறங்குதல்போல் கண்களை மூடிக்கிடந்தானே தவிர உண்மையில் அவன் உறங்கவில்லை. அவனுடைய மனம் அன்று மாலையில் தலைவி உரைத்தாளே – அதே உரையிற்தான் சுழன்று சுழன்று எண்ணக் கோடுகளை வரைந்தது. அப்பொழுது யாழிலே பிறந்த இன்னிசையொன்று காற்றிலே மிதந்து வந்தது. அவ்இசை மருதநிலத்துக்குரிய மருதப்பண்ணாகவே இருந்தது. தலைவன் தன் கண்களால் தலைவியின் கோலத்தை அணுவணுவாகப் பருகினான். அதே நேரத்தில் தலைவியின் விழிகள் மெல்லத் திறந்தன! எதிரே, தலைவன் தன்னையே பார்த்தவாறு கிடப்பதைக் கண்ட தலைவிக்கோ நாணம் பீறிட்டது. மலர்ந்த தன் பொன் வதனத்தைத் தன்னுடைய இரு கைகளாலும் மறைத்தாள். மறைத்த அவள் தளிர்க் கரத்தைத் தலைவன் மெல்ல எடுத்தான்.

அவளுடைய வட்டமுகம் அவன் முகத்தோடு ஒட்டிக் கொண்டது. இதுவரை தலைவனின் பரத்தையின் பிரிவால் பசலை படர்ந்த அவளுடைய தோளும் மார்பும் – அவன் நெஞ்சோடு இணைந்தன. தன் பிரிவினால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படர்ந்த தலைவியின் பசலை, முற்றிலும் நீங்கும்படியாகத் தலைவன் தன்னுடைய இரு கரங்களாலும் அவளுடைய தோளையும் மார்பையும் இறுக அணைத்துத் தழுவினான்.

யாழிலே பிறந்த மருதப் பண்ணின் இசையமுதம் படிப்படியாகத் தலைவனின் செவியுணர்விலிருந்து அப்பாலே விலகியது. அவ்விசையைக் கேட்டுக் களிப்புறும் கலையுணர்வுதான், அன்று முதன் முதலாகப் பரத்தையின் உறவையே அவனுக்கு ஏற்படுத்தியது. தலைவன் கலையுணர்வு படைத்த கலைஞன்தான்; அதிலும் அமைதி நிறைந்த நள்ளிரவிலே – யாழிலே பிறந்த மருதப்பண் இசையைக் கேட்டு இயல்பாகக் களிப்புறக் கூடிய அவனுடைய கலையுணர்வு எங்கே? அந் நள்ளிரவில் யாழின் இசை கேட்பதற்குத் தெவிட்டாத தேனாக இருக்கலாம்; ஆனால், அத்தேன் – அருகணைந்த மனையாளின் இதழிலே ஊறும் அமுதத்துக்கு ஈடிணையாகுமா?!

பிரிந்து கூடிய மருதநிலக் காதலரின் பெரிதான இன்பம், பிரிவிற்குக் காரணமாக இருந்த மருதப் பண்ணின் இசையின்பத்தையே புறக்கணித்து ஒதுக்கியது! ஆனால், இப் புறக்கணிப்பு நிலை தலைவன் உள்ளத்தில் என்றும் நிலைத்திருக்கக் கூடியதுதானா?!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிந்து உருகும் நெஞ்சம்

## அறிமுகம்

நண்பகல் கழிந்தது. மனதுக்கு நனிவூட்டும் மாலைப்பொழுது மெல்லென மலர்ந்தது. அம்மாலைக்கதிரவனின் பொன்னான ஒளியிலே - தாழம் பூக்கள், தம் மென்மையான அழகைப் பன்மடங்காகக் காட்டின. நெய்தற் பூக்கள் செறிந்த வெண்மையான மணற் குன்றுகளை மஞ்சள் பூத்த நீலக்கடல் தன் வெள்ளிய நுரைகளால் கோலமிட்டு ஆரத் தழுவியது. பகல் முழுதும் பாடுபட்டு உழைத்த பரதவர்கள் தம் தொழிற்பாடு முடிந்து வளமான மீன்களுடன் தத்தம் மனை நோக்கிச் சென்றனர். உயர்ந்த கரையெங்கும் இழிந்த கொழுமீன்கள் காய்கின்ற புலால் நாற்றம்; மறுபுறம் அடப்பம் பூக்களும், தாழம் பூக்களும் தேனை அள்ளிச் சொரியும் நறுநாற்றம்; கரையோடும், பரவைக் கடலோடும் மண்டிக் கிடக்கும் நாவாய்களின் பாய்மரத்திலே கட்டப்பட்ட பல வண்ணக் கொடிச் சீலைகள் காற்றிலே பட்டொளி வீசிப் பறந்தன. அகன்றுயர்ந்த பரந்த மணற் கரைக்கு அப்பாலே எல்லைக் கோடுகள் வரைந்ததுபோல் தாழம் புற்களால் வேய்ந்து கட்டப்பெற்ற மண் குடிசைகள் களிப்புற்று ஆரவாரத்தால் மிதந்தன. அக் களிப்பையெல்லாம் தோற்கடிப்பதுபோல் கடலிலே ஒருங்கு சேர்ந்து விளையாடும் குமரிப் பெண்களின் களிப்பு - கல கலவென்ற நாதமாய்க் காற்றிலே மிதந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களோ, தாழம்பூ மாலைபோல் தம்முடைய கரங்களை ஒன்றோடொன்று பற்றி நின்று வளைந்து வளைந்து கடலிலே நெடுநேரம் ஆடினர். அவ்வாட்டத்துக்கெல்லாம் தலைமை பூண்டாள் ஒருத்தி. அம்மகளோ, பூம்புகார்ப் பட்டினத்தை அடுத்த நெய்தல் நிலத்துப் பாக்கமெல்லாம் எல்லோராலும் அறிந்த செல்வத்தால் தேக்கமுடைய பெருங்குடியிற் பிறந்தவள்.

வண்ணமதி ஒத்த முகமும், முல்லையிதழ் வைத்த நகையும், வேல் கொண்டு தாக்கும் விழியும், பிறை தந்த நுதலும், முகில் சூழ்ந்த நெடுங்கூந்தலை உடைய அப்பூவை – பூம்புகார்ப் பாக்கத்தின் அழகுத் தெய்வமாய் விளங்கினாள்.

வளையல்கள் ஒன்றோடொன்று ஒலிக்கத் தம்முடைய தென்னங் குருத்துப் போன்ற கரங்களை அலையிலே எற்றி ஏற்றி அதிக நேரம் விளையாடியதால் அம் மங்கையர் மேனியின் அங்கமெல்லாம் ஓடியிளைத்தன.

தலைவி, பனிமலர் போன்று வியர்வை அரும்பிய தன் முகத்தைத் தன்னுடைய மார்பின் மேல் புரளும் முந்தானைத் தலைப்பால் மெல்லத் துடைத்து, ‘கடலில் ஆடியது போதும், மண்ணில் சிற்றில் இழைத்தும் சிறுசோறு ஆக்கியும் விளையாடுவோமா?’ என்று தோழியரிடம் செல்ல மொழியில் கேட்டாள்.

அவள் கேட்டதுக்கு மறுபேச்சு உரைப்பவர் யார்?

வெல்லத் தமிழ் பேசும் எல்லாத் தையலரும் ‘ஆமா’ போட்டு அடப்ப மலர் செறிந்த உயர்ந்த மணற்பாங்கை நாடினர். சில நாழிகைக்கிடையில் அக்கடற்கரை மணலால் சிறு வீடுகட்டியதோடு சிறு சோறு ஆக்கிக் குவித்தும் விட்டனர். அதன் பின் அவர்களுடைய கையுங் காலும் எதற்கும் ஓடவில்லை. அப்பொழுது அவர்களுக்கு ஓய்வு பெறுவதுதான் பெரிதெனப் பட்டது. அதனால், எல்லோரும் தாம் நுண்ணியதாய் கட்டிய சிறு வீட்டுக்கு அருகே இளைப்பாறி இருந்தனர்.

சில மணித்துளிகள் சென்றன...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலலையின் ஓங்கார ஒலியுடன் 'டாங்; டாங்; டாங்; டாங்;!' – என்ற மணியின் மெல்லிய நாதம் எங்கேயோ ஒரு மூலையில் இருந்து வந்தது. அந் நாதம் பெரு நாதமாகக் கடலின் இரச்சலைக் கடந்து எங்கும் பரவின.

நாதம் வந்த வழிநோக்கி – நங்கையர், தம் செங்கயல் விழிகளை அகல விரித்தனர்!

மணிகள் பொருத்தப்பட்ட வண்ணத்தேர்! அத்தேரைவிட, அத் தேரோடு நின்ற செந்தமிழ்ச் சேர்ப்பன் – அழகுக் கன்னியரின் கரு விழிக்குக் கவினுருவாய்ப் பட்டான்! தேரை விட்டு இறங்கிய அவனோ – தேன்மொழி பேசும் செல்வியர் மருங்கே வந்தான். வந்தவன், அவர்களிடம் தானாகவே பேச்சைத் தொடங்குதற்கு – அவர்கள் மண்ணிலே இழைத்துக் கட்டிய சிறிய இல்லமும் ஆக்கிக் குவித்த சிறு சோறுந்தாம் அவனுக்குப் பேருதவியாக இருந்தனபோலும்.

உடனே சிறு சோற்றையும் சிறிய இல்லத்தையும் மாறி மாறி உற்றுப் பார்த்து இடையிடையே பாவையரையும் பார்த்தான். அவன் பார்த்த பார்வையில் ஏதோ தம்மிடம் கேட்க அவாவுற்று நிற்கும் அவனது முகபாவத்தைப் பாவையரும் உணர்ந்தனர்.

ஊர் பேர் தெரியாத புதிய அவ் ஆண்மகன் ஏதோ குறையுற்று நிற்குந் தன்மையைக் கண்டு – ஏந்திழையர் ஒன்றுமே செய்வதறியாது நாணத்தால் திகைப்புண்டனர்.

அதற்கு மிஞ்சி வாயடைத்துப்போய் அவனால் ஒன்றுமே பேசாமல் இருக்க முடியவில்லை.

'பெரிய மென்மையான மூங்கில் போலும் தோள்களையும் மடப்பத்தையுமுடைய நல்லீரே! பகலும் தன் ஒளியினை யிழந்தது; மிகவும் தளர்ச்சியையுடையேன்; ஆதலால், மெல்லிய இலைப் பரப்பிலே நீங்கள் இடும் விருந்தினை யானும் உண்டு – கல்லென்ற ஆரவாரமுடைய இந்தச் சிறிய குடிசையிலே தங்கிச் சென்றால் என்ன?' என்று கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய அக் குழைந்த மொழியைக் காதாரக் கேட்ட ஆரணங்கினர் மேலும் மடப்பத்தால் கட்டுண்டவர்போல் ஒருவர் முதுகுக்குப்பின் மற்றொருவராக ஒளிந்து நின்றனர். அவனைப் பார்க்கவேண்டிய அவர்களுடைய முகம் அனைத்தும் நிலத்தைப் பார்த்தவாறு இறைஞ்சின. உடனே அவர்களும் அவன் கூறியவற்றுக்குப் பதின்மொழியாக 'இழும்' என்ற மெல்லிய குரலில் – 'இவை நுமக்கு உரியன அல்ல, இழிந்த கொழுமீனால் ஆகிய உணவு;' என்றனர்.

அவர்கள் உரைத்த பதின்மொழியைக் கேட்டபின்னும் தலைவன் எப்படித்தான் அவ்விடத்தில் நிற்பது? ஏதோ ஒருவாறு தன்னைச் சமாளித்துக்கொண்டு சிறு தொலைவில் அலை புரளும் நெடுங் கொடியையுடைய நாவாய்களின் மத்தியில் தன் பார்வையை விட்டு, – 'அதோ, நெடுங்கொடி அசைந்து பறக்கும் நாவாய்கள் தோன்றுகின்றன; அவற்றைக் காண்போமோ?' – என்று கேட்டவாறு அவ்விடத்தை விட்டு அகன்றான்.

அவன் அகன்ற வேகத்தில் தலைவியும் தோழியரும் மண்ணிலே அழகாகக் கட்டிய அச்சிற்றில் – சிறியவீடு – அவனுடைய காலடிகளில் பட்டுச் சிதைந்தது.

அச்சிறறிலாகிய சிறிய வீடு அழிந்ததுபோல் தலைவியின் நெஞ்சமும் அழியும் தகைமையாய்ப் பலருள்ளும் அவளையே குறித்து நோக்கினான் தலைவன். நோக்கியவன், – 'யான் போகட்டுமா?' – என்று அவளிடமே அன்பொழுகக் கேட்டான்.

அதற்கு அவளோ, – 'நீ பெயர்க!' என்று இரண்டே இரண்டு மொழிகளில் பதிலிறுத்தாள்.

உண்மையில் அந்தப் பதில்மொழி அவளுடைய சிந்தையில் இருந்து வரவில்லை. ஏதோ வாயினை அசை போட்டாளே தவிர, மனத்தினால் அசைபோட்டுப் 'பெயர்க' என்று உரைத்தாளில்லை. எப்படியோ அவள் உரைத்த அந்த மொழியைக் கேட்டபின் தலைவன் அவ்விடத்தை விட்டுப் பெயர்தற்காகத் தேரிலே ஏறியும் விட்டான். ஆனால், அவன் மனம் என்னுந் தேர்தான் அவ்விடத்தை விட்டுப் பெயர மறுத்தது. அப்பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி முறையாகத் தன் தேரைச் செலுத்துதற்கு முன் தேர்க் கொடிஞ்சியினைப் பற்றிக் கொண்டவனாக நின்று - பலருள்ளும் தலைவியைக் குறிப்பாகப் பார்த்தான்! அவளும் தன் மையுண்ட கண்களால் அவனையே பார்த்தும் பார்க்காததுபோல் இடைக்கிடை நிலத்தையும் பார்த்தாள்.

அவனுடைய பார்வையும் ஒன்றையொன்று இணைந்து ஏதேதோ பேசின. அந்தப் பேச்சின் பொருள் ஆழம் - அவர்களுடைய இதயங்களில் அக்கணமே நன்றாகப் பதிந்துவிட்டன.

'தோழி, நன்றாகப் பொழுது சாய்ந்துவிட்டது! போகலாமா?' என்ற தோழியின் மொழியைக் கேட்டுத்தான் தலைவியும் தன்னுணர்வைப் பெற்றாள்.

நின்ற நிலையிலே நிலத்தைப் பார்த்தவாறு காற் பெருவிரலால் பதினைந்து தடவைகளுக்கு மேலாக மணலிலே ஆழமான கோடுகளைக் கிழித்தாள். அவள் கிழித்த கோடுகள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக ஆழப் பதிந்ததுபோல் அவளுடைய மனமும் அவன்மேல் நன்றாக ஆழப் பதிந்து விட்டது. மனதிலே பதிந்த அவன் உருவத்தை மீண்டும் ஒருமுறை பார்ப்பதற்காகக் கவிழ்ந்த தன் முகத்தை நிமிர்த்தினாள்.

அவனுடைய தேரோ காற்றிலும் வேகமாய்ப் பறந்து அவளுடைய கண் பார்வையிலிருந்து மெல்ல மெல்ல அகன்று மறைந்து கொண்டிருந்தது!...

தேர் முற்றாக மறைந்துவிட்டது! - தேர் மறைந்தாலும் அத் தேரினையுடையான் கடைசி முறையாகத் தேர்க்கொடிஞ்சியினைப் பற்றிக்கொண்டு நின்றவனாகப் பரலள்ளும் தன்னையே குறிப்பாகப் பார்த்த அப் பார்வையின் காட்சியை அவளால் எப்படித்தான் மறக்க முடியும்?

## தோழி அறத்தோடு நிற்றல்

**வா**டைக் காற்றிலே வனப்பான நெய்தல் மண்ணகத்தின் கரை அதிரும்படியாகக் கடலலைகள் ஒன்றோடொன்று மோதி எழுந்தன. அவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெழுச்சியின் பேரொலியைவிட அவனைப் பற்றியும் அவளைப் பற்றியும் கூறும் அலர்மொழிகள்தாம் அப்பாக்கம் எங்கும் ஒலித்தன. நாளும் பொழுதும் கடலலை ஓங்கார ஒலியுடன் இரைந்து இரைந்து தன் வாழ்நாளைப் போக்குகின்றதே! – அவ்விரைச்சலை இன்று எவரேனும் காது கொடுத்துக் கேட்பதில்லை. முதுவாய்ப் பெண்டிர் உதட்டில் விரல் வைத்தும் நெட்டி முறித்தும் தலைவியைப் பற்றித் தெருக்கோடி, பொதுமரக் காவெங்கும் இரைந்து இரைந்து கூறும் அலர் மொழிகளைத்தாம் மக்களும் உன்னிப்பாய் அவதானிக்கத் தொடங்கினர்.

இப்பொழுதோ – தலைவி, தன் தோழியருடன் நீர் விளையாடவோ, பூப்பறித்து மாலை சூடவோ, சிற்றில் ஆகிய சிறிய வீட்டை மணலால் கட்டி சிறு சோறு ஆக்கவோ செல்வதில்லை.

முன்னம் தோழியருடன் ஆடிப்பாடி மகிழ்வதிற்தான் அவளுக்குப் பொழுது போனது. இன்றோ – அவ்வாண் மகனைப் பற்றிய நினைவிற்தான் காலம் நகர்கின்றது.

'பெண்மையென்பது அழிவற்ற மாபெருஞ் சக்தி வாய்ந்தது. அச் சக்திக்கு என்றும் அழிவற்ற உயிர்ப்பேறு ஊட்டுவது காதல் ஒன்றுதான்.'

அந்தக் காதலை அவனிடத்தில் அவள் கொண்டதில் எந்தத் தவறுதான் உண்டு! ஏதோ செய்யத்தகாத தவறினைச் செய்தவள் போலன்றோ இவ்வுலகம் அவளைக் கடிகின்றது.

உலகம் பலதைச் சொல்லும்; பத்தைச் சொல்லும். ஆனால், அவள் உள்ளமோ ஒன்றைத்தான் சொல்லும்.

'என் நெஞ்சத்தைத் தொட்டுச் சென்ற அத் துறைவன்தான் – என் வாழ்வுக்கு முழுமை தரும் இறைவன்!'

இதைத்தான் அவள், தன் உள்ளத்தின் அடித்தளத்தில் சொல்லிச் சொல்லி நிறைவு கண்டாள். அத் தூய்மையான நிறைவில் அலர் தூற்றும் பெண்டிர் என்னதான் குறையைக் காண்கின்றனர்! குறையைக் காண்பதிலே தம் வாழ்நாளைப் போக்கும் முதுவாய்ப் பெண்டிர் ஆகிய வயது முதிர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் நிறைந்த சேரிக்குத் தலைவியின் நிறைந்த காதல் நெஞ்சம் கறை படிந்ததாகத்தான் தெரியும். கண்ட கண்ட இடங்களிலெல்லாம் தலைவன் தலைவியைப் பற்றிப் பெண்டிர்கள் சொல்கின்ற அலர் மொழிகள், வளர்ப்புத் தாயாகிய செவிலித்தாய் காதிலும் நற்றாயாகிய பெற்ற தாயின் காதிலும் பலமாக விழத் தொடங்கின.

தலைவியின் வீடே ஒரே அமர்க்களம்!

'யாரோ ஓர் ஆண் மகன் தேரிலே வந்தானாம்; வந்தவன் நம் தலைவியின் நெஞ்சம் அழிந்திட ஏதேதோ சொன்னானாம்; அதனால் அவளும்...'

இப்படி அரைகுறையான அலர்கள் தலைவியின் தந்தை, தாயர் செவிகளிலே பட்டும் படாமலும் விழத் தொடங்கின.

இதனால் தலைவிக்கோ வீட்டிலே பலமான காவல்!

தலைவிக்குத் தலைவன் மட்டில் ஏற்பட்ட காதல் தொடர்பின் முழு விளக்கங்களையும் அவள் ஆருயிர்த் தோழியின் மூலமாக இன்றே கேட்டுத் தெரிந்துவிட வேண்டுமெனச் செவிலியும் எண்ணினாள். அவளுடைய எண்ணத்துக்கு உயிரளிப்பதுபோல் தோழியும் உடனே வந்துவிட்டாள். அவள் வந்த சமயமோ தன் எண்ணத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு ஏற்ற சமயந்தானெனச் செவிலியும் உணர்ந்தாள்.

–'மகளே! உன்னிடம் ஒன்றைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென நெடு நாளாய் எண்ணியிருந்தேன்.'

–'அன்னாய்! எதைப்பற்றி என்னிடம் தெரிந்து கொள்ள வேண்டும்!'

–'நம் தலைவியைப் பற்றித்தான்!'

–'அதுவா! – அன்னாய்! அன்றொருநாள்! – மாலைபோன்று நெருங்கிய நம் தோழியரோடு கடலிலே ஒருங்கு சேர்ந்து ஆடியும், அழகிய கடற்கரைக் கானல் மணலிலே சிறிய வீடு கட்டியும், சிறுசோறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிக் குவித்தும் வருந்திய வருத்தம் திர யாம் சிறிது இளைப்பாறியிருந்தோம். அப்பொழுது ஓர் ஆண்மகன் எம் அருகே வந்தான்! அவன் வந்ததும், 'பெரிய மென்மையான மூங்கில்போன்ற தோளினையும், மடப்பத்தையுமுடைய நல்ல இயல்பான குணமுடைய நங்கையரே! பகலும் தன் ஒளியினை இழந்துவிட்டது. மிகவும் தளர்ச்சியையுடையேன் ஆதலால், மெல்லிய இலைப்பரப்பிலே நீங்கள் இடும் விருந்தை யானும் உடன் உண்டு - கல்லென்ற ஆரவாரமுடைய இச்சிறிய இல்லத்தில் தங்கிச் சென்றால் என்னவோ?' என்று கேட்டான். அவன் கேட்டதும் நாமோ நாணுற்றுக் கவிழ்ந்த முகத்தினராக ஒருவர் முதுகுக்குப் பின் மற்றொருவராக ஒளிந்து நின்று இது இழிந்த கொழுமீனால் ஆகிய உணவு' - என்று இழும் என்னும் மெல்லிய குரலில் உரைத்தோம். அதற்கு அவனோ, 'நெடுங்கொடிகள் அசைந்து பறக்கும் நாவாய்கள் தோன்றுகின்றன. அவற்றையேனும் காண்போமோ?' - எனக்கூறி எம் மணல்வீட்டைக் காலால் சிதைத்துவிட்டு எம்மருங்கே நில்லாது, அப்பாலே பெயர்ந்தான். பெயர்ந்தவன் தலைவியைக் குறித்து நோக்கும் நோக்கமோடு, 'நல்ல நுதலினையுடையவளே! நான் போகட்டுமோ?' - என்று அவள் நெஞ்சம் அழிந்திட அவளிடமே கேட்டான். அதற்கு அவளோ - 'நீ பெயர்க!' - என்றாள். என்றதும், அவளேயே நோக்கியவனாகத் தனது தேரின் கொடிஞ்சியினைப் பற்றிக்கொண்டு நின்றான். அவன் நின்ற அதே நிலை இன்னும் அவள் கண்ணுக்குள் நிற்பதுபோலத்தான் இருக்கின்றது. இதை அவள் எளிதில் மறப்பதென்பது முடியாததொன்று. மேலும், இதுபற்றி எல்லோரும் அலர் தூற்றுதலைக் கேட்டு யான் இச் சம்பவங்களையெல்லாம் மூடி மறைக்கலாம் என்றுதான் நினைத்தேன். அதற்குத் தலைவியோ ஒத்து வரவில்லை. அவளோ அண்மையில் ஒரு நாள் தலைவனுக்கும் எமக்கும் நடந்த சம்பவங்களையும், அதில் தலைவனும் தானும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டமையையும், கடைசி முறையாகத் தேர்க் கொடிஞ்சியினைப் பற்றி நின்று தலைவன் தன்னை நோக்கியதையும், அந் நோக்கிநின்ற நிலையைத் தான் இன்றுவரை மறவாமையையும் என்னிடம் கூறினாள். அப்படிக் கூறியவள் இதனை என்றோ ஒருநாள் அன்னை அறியத்தானே போகின்றாள்! அப்படியானால், அன்னை அறியினும் அறியட்டும்! அலர்கூறும் வாயினரான அச் சேரியினர் கேட்பினும் கேட்கட்டும்! இஃதன்றிப் பிறிதொன்றும் இல்லாததனை நீயே அறியுமாறு கூறு. அப்படி நீ அறியுமாறு கூறியவற்றிலும் அவர்களுக்கு நம்பிக்கை பிறக்காவிட்டால் யான் கூறியவைகள் தாம் தலைவனுக்கும் எனக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்த உண்மையான நிகழ்ச்சி; இவற்றைத் தவிர வேறு ஏதேனும் அவர்மட்டிலும் நடக்கவேயில்லை; என்பதைக் கொடுஞ்சுழிகள் மேவிய புகாரிடத்திலுள்ள தெய்வத்தை நோக்கி யானே கடிய சூழும் (சத்தியம்) செய்து தந்துள்ளேன் என்பதைக் கூறு; - என்றாள். அன்னாய்! தலைவியைப் பொறுத்த மட்டில், யானும் இதைத்தவிர வேறொன்றையும் அறியேன் என்று கூறிமுடித்தாள் தோழி.

*'அன்னை அறியினும் அறிக அலர்வாய்*
*அம்மென் சேரி கேட்பினும் கேட்க*
*பிறிதுஒன்று இன்மை அறியக் கூறிக்*
*கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கிக்*
*கடுஞ்சூள் தருகுவான், நினக்கே கானல்*

*தொடலை ஆயமொடு கடல்உடன் ஆடியும்,*
*சிற்றில் இழைத்தும், சிறுசோறு குவைஇயும்,*
*வருந்திய வருத்தம் தீர, யாம்சிறிது*
*இருந்தன மாக எய்த வந்து,*
*'தடமென பணைத்தோள் மடநல் லீரே!*

*எல்லும் எல்லின்று; அசைவுமிக உடையேன்;*
*மெல்இலைப் பரப்பின் விருந்துஉண்டு, யானும்இக்*
*கல்லென் சிறுகுடித் தங்கின்மற்று எவனோ?*
*எனமொழிந் தனனே ஒருவன்; அவற்கண்டு,*
*இறைஞ்சிய முகத்தெம் புறம்சேர்பு பொருந்தி,*

*'இவைநுமக்கு உரிய அல்ல; இழிந்த*
*கொழுமீன் வல்சி' என்றனம்; இழுமென*
*'நெடுங்கொடி நுடங்கும் நாவாய் தோன்றுவ*
*காணாமோ? எனக் காலின் சிதையா,*
*நில்லாது பெயர்ந்த பல்லோருள்ளும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*என்னே குறித்த நோக்கமொடு, 'நன்னுதல்!*
*ஒழிகோ யான்?' என அழிதகக் கூறி,*
*யான் 'பெயர்க' என்ன, நோக்கித், தான்தன்*
*நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி*
*நின்றோன் போலும் இன்றும்என் கட்கே.'*

*(அகநானூறு - 110)*

காதலெனும் அகத்துக்குரிய அறத்தின் வழியில் நின்ற தோழி, தலைவியைப் பற்றி உரைத்த மொழிகளைச் செவிலித்தாய் நன்றாக உற்றுணர்ந்தாள். அவ்வுணர்வின் மேலீட்டால் மேற்கொண்டு தலைவியின் பொருட்டு செய்வதற்குரிய கருமங்களில் தன் உள்ளத்தை ஓடவிட்டாள்!

அப்பொழுது கிழக்குவான் மேடையில், நாட்டிய நங்கை தன் முகத்தைச் சபையோர் முன் தூக்கி வணக்கம் தெரிவிப்பதுபோல், முழு நிலா தன் பால் வதனத்தை உலகத்தார் காணுமாறு காட்டியது.

## தலைவியின் நெஞ்சம்

**இ**ந்த உலகம் - பொல்லாத உலகம். என்னைப் பற்றியும் என் நெஞ்சத்தைக் கவர்ந்த தலைவனைப் பற்றியும் ஏதேதோ பேசித் தீர்க்கின்றது. எம் நல் வாழ்வுக்கு வித்திடும் நோக்கம் உலகத்தார்க்கு இருக்குமென்றால் வாய்க்கு வந்தபடி பொல்லாத மொழிகளைக் கூடிக் கூடிச் சொல்வார்களா? அப்படிச் சொல்வதற்கு என்மட்டில் என்னதான் நடந்துவிட்டது! வழக்கத்துக்கு மாறாக அன்று மாத்திரம் என் தோழிப் பெண்களுடன் புது இடம் சென்றேனா? இல்லையே!

அன்று தினமும் ஆடிப்பாடும் கடற்கரைக் கானலுக்குத்தானே சென்றோம். முதலில் வழக்கம்போல் கடலில் விளையாடினோம். அதன்பின் கடற்கரைக் கானல் மணலிலே சிற்றில் இழைத்தும் சிறுசோறு ஆக்கிக் குவித்தும் விளையாடினோம். அதிகநேரம் விளையாடியதால் எம்மிடையே களைப்புத் தோன்றியது. களைப்பு நீங்கத்தான் அவ்விடத்தே சிறிது நேரம் இளைப்பாறி இருந்தோமே தவிர யாதொன்றையும் எதிர்பார்த்து இருக்கவேயில்லை. அப்படியிருக்கும் வேளையிற்தான் அத் தொன்தமிழ்த்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைவன் அவ்விடத்தே வந்தான். அவன் வருவானென்று நாம் எள்ளளவேனும் எதிர்பார்க்கவேயில்லை.

அவ் ஆண்மகன் அவ்விடத்தே வந்த வருகையை நான் என்னென்றுதான் உரைப்பேன்! அத்துணைச் சிறந்ததொரு சேர்ப்பானை என் வாழ்நாளில் இதற்கு முன் பார்த்ததேயில்லை. அவன் துணிவோடு எம் அருகில் வந்து எடுத்த எடுப்பிலேயே 'பெரிய மென்மையான மூங்கில் போலும் தோள்களையும் மடப்பத்தையும் உடைய நல்லீரே!' என்று முதலில் எம்மை வருணித்தான். அதன்பின், 'பகலும் தன் ஒளியினை இழந்தது; மிக்க தளர்ச்சியையுடையேன்; மெல்லிய இலைப்பரப்பிலே நீங்கள் இடும் விருந்தினை நானும் உண்டு, கல்லென்ற ஆரவாரமுடைய இந்தச் சிறு குடிலில் தங்கிச் சென்றால் என்னவோ?' என்று கேட்டான். இக் கேள்வியை அவன் எழுப்பிய மாத்திரத்திலேயே நாம் இறைஞ்சிய முகத்தினராக நிலம்பார்த்து ஒருவர் முதுகுக்குப்பின் மற்றொருவராக ஒளிந்து நாணி நின்றோம். ஏதோ ஒருவாறு துணிந்து நாணமுற்று இழும் என்று மெல்லிய குரலில் 'இவை நுமக்கு உரியன அல்ல; இழிந்த கொழுமீனால் ஆகிய உணவு;' என்றோம். குழைந்த குரலில் அவன் கூறிய மொழிக்கு யாம் கூறிய அந்தப் பதில் மொழி, சிறிது கடுமையுள்ள மொழியாகத்தான் எனக்குப் பட்டது. ஏதோ எல்லோரும் சொல்லும்போது நானும் வாய்க்கு வந்தபடி அப்படி சொல்லி விட்டேன். எப்படியோ என் நாவானது, 'இவை நுமக்கு உரியனவல்ல; இழிந்த கொழுமீனால் ஆகிய உணவு' என்று சொன்னாலும் என் உள்ளம் மாத்திரம் அதை சொல்ல மறுத்துவிட்டது.

வெண்மையான கடற்கரை மணலைக் குவித்து விளையாட்டாக நாம் கட்டிய சிறிய மண்வீடும் ஆக்கிய சிறுசோறும் உண்மையானவையல்ல. வெறும் மண்ணால் ஆனவை என்பது தலைவனுக்கு நன்றாகத் தெரியும். அப்படித் தெரிந்தும் அவை உண்மையான உணவெனவும் சிறிய இல்லமெனவும் நினைத்துக் கேட்பதுபோல், எம் சிறு சோற்றை உண்பதற்கும் சிறிய மண்வீட்டில் தங்குதற்கும் இடம் கேட்டானே!

தலைவன் எம்மிடம் கேட்ட அந்த மொழிகள், விளையாட்டும் துடுக்கும் நிறைந்த மொழிகளல்ல. அத்தனையும் பொருள் நிறைந்த அன்போடு இழைத்த மொழி என்பதை இப்பொழுதுதான் உணர்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணாலாகிய சிறுசோற்றையும் சிறிய இல்லத்தையும் உணர்ச்சியோடு பார்க்கின்றபோது - அவை உருவத்தின் அமைப்பில் உண்மையுள்ளவை போலத் தென்படலாம்; ஆனால், அதே சிறுசோற்றையும் சிறிய இல்லத்தையும் உணர்வோடு பார்க்கின்றபோது அவை நமக்கு உண்மைக்குப் புறம்பானதாகத் தெரிகிறதா என்றால், இல்லை! உண்மையில் அச் சிறுசோற்றை உண்டு பசியாறவோ மண்ணினால் நாம் விளையாட்டாகக் கட்டிய சிறிய இல்லத்தில் தங்கி இளைப்பாறவோ முடியாத காரியம் என்பதைத் தலைவன் அறிந்தும், எம் மண் சோற்றை உண்ணும் உணவாகவும் சிறிய இல்லத்தைத் தங்கும் மனையாகவும் கண்டான். அவன் அவ்வாறு கண்டதற்கு அவனுடைய அழகுணர்வுதான் காரணம். கலையில் மலர்ந்த அந்த அழகுணர்வை எம்முடைய சிறுசோற்றிலும் சிறுமனையிலும் விட அவற்றை ஒரு விதத்தில் கண்டானென்றாலும், உண்மையில் அவற்றை ஆக்கி இழைத்த எம்மிடமே அவ்வுணர்வைப் பெரிதாகக் கண்டான் போலும்.

உணவோ, மண்ணாலே ஆக்கப்பட்டிருக்கலாம். ஆனால், அந்த உணவை விருப்போடு உண்ணக்கூடிய உள்ளம் வேண்டுமே! இல்லமோ காற்றினால் சிறுபொழுதில் தூர்ந்து அழிந்துபோகக் கூடிய மண்ணால் தொடுத்துக் கட்டியதாக இருக்கலாம். ஆனால், அந்த அழிவுள்ள குடிலில் வாழக்கூடிய உயிர்கள், அன்போடு இணைந்த - என்றும் அழியாத காதல் நெஞ்சத்தின் உயிர்களாக இருக்கவேண்டுமே!

மனிதன் உண்ணக் கூடிய உணவு - மண்ணாகவும் இருக்கலாம்; நெல்லாகவும் இருக்கலாம்; இழிந்த கொழுமீனால் ஆகிய சிறு சோறு உணவாகவும் இருக்கலாம். அவன் தங்கி வாழக்கூடிய குடில், மண்ணாகவும் மரமாகவும் அமையலாம். எப்படியாக இருப்பினும் அவையெல்லாம் அவன் உடலை வளர்ப்பதற்கும், அவ்வுடலை ஓரிடத்தில் இளைப்பாறி இருக்கச் செய்வதற்கும் அவனாலேயே ஆக்கப்பட்டவை தவிர வேறொன்றுமில்லை.

வாழ்வு என்பது வெறும் உடலைத்தான் பொறுத்தது என்றால், அவ் வாழ்வுக்கு உணவும் குடிலும் பற்றிய செயல்கள்தாம் முக்கியம். அப்படியென்றால், எம் சிறுசோறும் சிறிய இல்லமும் உடலை முக்கியமாகப் பேணிவாழும் புறவாழ்வுக்கு முற்றிலும் பொருத்தமற்றதுதான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், - வாழ்வு என்பது - வெறும் உடலை மாத்திரந்தான் கொண்டது எனத் தலைவனும் நினைத்திருந்தால் எம் சிறுசோற்றை உண்பதற்கும் சிறு குடிலில் தங்குதற்கும் எண்ணியிருக்க மாட்டான்.

அவன் எண்ணமும், வாழ்வும் உண்மை நிறைந்த அன்பின் வாழ்வு என்பதை இப்பொழுதுதான் உணர்கிறேன். அவ்வாழ்வுக்கு உண்ணக்கூடிய உணவும் தங்கக்கூடிய குடிலும் முக்கியமன்று. உள்ளந்தான் முக்கியம்! ஆமாம் உள்ளந்தான் முக்கியம்.

இணைந்த உள்ளத்தின் அன்பிலே மலர்வதுதான் வாழ்வு! அவ்வுண்மை நிறைந்த வாழ்வுக்கு நிலைக்களமாக விளங்கும் தலைவனின் உள்ளம் மண்ணாலாகிய இழிந்த கொழுமீனை உண்பதற்குப் பின்வாங்கவேயில்லை. அதிலும், அவ்வுணவை எம் விருந்தாகத் தன்மட்டில் ஏற்றுக்கொண்டதோடு அதையே சிறந்த உணவாகப்பேணி விருந்தாக உண்ணவும் தலைப்பட்டானன்றோ! எம் இழிந்த உணவையும் உயர்ந்த உணவாகப் பேணிக்கொண்ட தலைவனது உள்ளத்தின் உயர்ந்த பண்பை, யான் எப்படித்தான் வியந்து கூறுவேன். இப்பொழுது மாத்திரம் வியந்து கூறுவதில் என்னதான் பயன் உண்டு? இதை அப்பொழுதே உணர்ந்து அவனுடைய உள்ளத்தின் உயர்ந்த பண்புக்கு மதிப்பளித்தன்றோ இருந்திருக்க வேண்டும்! சிறிதேனும் மதிப்பளிக்கக்கூடிய நெஞ்சம் எமக்கு உண்டென்றால், 'இவை நுமக்கு உரியன அல்ல; இழிந்த கொழுமீன் - கொழுத்த பெரிய மீன் உணவு' என்று படக்கென்று சொல்லியிருக்க மாட்டோமே!

நாம் அவ்வாறு சொல்லியதும் ஒரு விதத்தில் பொருத்தமாகத்தான் இருந்தது. அவன் எம் உணவையும் சிறிய இல்லத்தையும் வெறும் மண்ணினால் ஆகியவை என்பதைத் தெரிந்துதானே அவற்றை உண்மையான உணவாகவும் சிறிய வீடாகவும் கொண்டு எம்மிடம் அவ்வாறு கேட்டான். அவன் அவ்வாறு கேட்டாலும், யாம் மண்ணாலாகிய உணவை உண்ணுதற்கும் சிறிய இல்லத்தில் தங்குதற்கும் பொருள் அமையுமாறு சொல்லியிருப்போமானால் அவனை ஏளனம் செய்வதுபோல் ஆகிவிடுமே! தலைவனை ஏளனம் செய்யுமாறு - 'இதோ எம் உணவு; இவற்றை நன்றாக உண்க' என்று சொல்லியிருப்போமானால் எம் பெண்மைக்கு எத்துணை இழுக்கு நேர்ந்திருக்கும்? அவன் உள்ளமோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் உணவை வெறும் உணவாகக் கொள்ளாது, விருந்தாகக் கொள்ளுமளவுக்குப் பண்பட்டு உயர்ந்திருக்கும்போது, எம் உள்ளமும் பண்பு நிறைந்த உயர்ச்சியை உடையதாகத்தானே இருக்கவேண்டும்!

இல்லறத்தின் நல்லறமாகத் திகழும் பெண்கள் விருந்தினை ஓம்பிப் பேணும் நல்லியல்பு உடையவராக இருக்கவேண்டும். அதனால்தானே அவனும் எடுத்த எடுப்பிலேயே எம்மை முன்னிலைப்படுத்தி மொழியுங்கால், 'பெரிய மென்மையான மூங்கில் போலும் தோளினையும் மடப்பத்தையுமுடைய நல்லீரே!' என்றான். அம்மொழித் தொடரிலுள்ள நல்ல இயல்பினை உடையவர் என்ற சொல் பெண்மைக்கு இருக்கவேண்டிய நல்ல இயல்பினை உணர்த்தியதன்றோ! அச் சொல்லினால் எம் பெண்மைக்கு அளவற்ற மதிப்பை அளித்திருக்கின்றான் என்பது கலங்கரை விளக்கம் போல் வெளிப்படையாகத் தெரிகின்றது! எம்மை – எம் பெண்மையை மதித்து நல்லீரே என்று சொன்னவனுக்கு, யாம் பெண்மை உணர்ச்சியும் உணர்வும் அற்றவர்போல் விளங்குதல் முறையோ? அதற்குரியதாக நாம் படைக்கும் உணவும் நல்விருந்தாக இருக்க வேண்டாமோ?

நம்முடைய உணவு – இழிந்த கொழுமீனால் ஆகிய உணவா? இல்லையில்லை! அவை வெறும் மண்ணால் ஆகிய உணவுதான். இருப்பினும் அம்மண் குவியலை உண்மையுடைய உணவாக உணர்வு கொண்டு அவற்றைத் தான் உண்பதற்காக உணர்ச்சியோடு கேட்டானல்லவா!; அதனால்தான் நாமும் எம்முடைய வெறும் மண்குவியலை உண்மையுடைய உணவுபோல் கொண்டு, 'இவை நுமக்கு உரியன அல்ல – இழிந்த கொழுமீன் உணவு என்றோம்.

எம் உள்ளமோ அவனுக்கு உயர்ந்த உணவைத்தான் விருந்தாகப் படைக்க எண்ணியதே தவிர, இழிந்த உணவையல்ல. அவை இழிந்த உணவெனக் கொண்டு அப்பொழுது அவனுக்கு விருந்திட மறுத்தாலும் உயர்ந்த உணவைத்தாம் அவனுக்கு விருந்தாகப் படைக்கப் பெரிதும் விருப்பமுடையோம் என்பதை அவன் அறிவானோ? அன்று நிகழ்ந்த சூழ்நிலைபோல் இன்னுமொரு சூழ்நிலை என் வாழ்க்கையில் நிகழாதோ? அவ்வாறு நிகழ்வதாக இருந்தால் அத் தலைமகனுக்கு உயர்ந்த உணவை எம் அன்பின் படைப்பாக – இல்லையில்லை – என் அன்பின் படைப்பாகவே தன்னந் தனியனாய்க் காத்திருந்து படைப்பேனே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் படைப்போ என் உள்ளம் நிறைந்த படைப்பாக இருக்கும். என் உள்ளமோ அவன்பால் முழுமையும் கட்டுண்ட அன்பின் உள்ளமன்றோ! அவ்வன்பின் உள்ளத்தை எம்மட்டில் அவன்தான் ஏற்படுத்தினான். அவன் விருந்தாக உண்ணக் கேட்ட உணவுக்கும், தங்குவதற்குக் கேட்ட குடிலுக்கும் இடமளிக்காதவாறு நாம் மறுப்புரை கொடுத்ததுதான் தெரியும்! உடனுக்குடனே 'நீண்ட கொடிகள் அசைந்து பறக்கும் நாவாய்கள் தோன்றுகின்றன; அவற்றையேனும் காண்போமோ?' என்று கூறினான். கூறியவன், மீண்டும் அவ்விடத்தே நிற்கவில்லை. கூறிய கூற்றோடு எம் சிற்றிலைக் காலால் சிதைத்துவிட்டு அங்கு நில்லாது பெயர்ந்தான். பெயர்ந்தவன் பலருள்ளும் என்னையே குறித்து ஒரு பார்வை பார்த்தானே! – அந்தப் பார்வையின் பொருள்தான் என்னவோ?

தலைவன் என்னையே குறிவைத்துத் தன் கண்ணோடு கண்ணிணையாக நோக்கிய அந்நோக்கிலே, அழியாத அன்பின் பெருக்கைக் கண்டேன். இதுவரை எவர்க்குமே இடமளிக்காத என் நெஞ்சம் முன்னேயுள்ள நிலையிலிருந்து அக்கணமே அழிந்துவிட்டதே! அவனின் பெயர்ச்சியால் மண்ணாலாகிய சிறிய இல்லம் எவ்வாறு அழிந்ததோ! – அதேபோல் என் நெஞ்சமும் அவன்பால் அழிந்துவிட்டதே! முற்றிலும் என் நெஞ்சம் அவனையே இடமாகக் கொண்டு மாறிய புதிய மாற்றத்துக்கு வித்திட்டது போலத்தானே கடைசியாக என்னைப் பார்த்து அவன் கூறிய மொழியும் அமையலாயிற்று.

–'நல்ல நுதலினையுடையவளே! யான் போகட்டுமோ?'...

இதுதான் அவன் என்னைப் பார்த்துக் கூறிய கடைசி வார்த்தை. இந்த வார்த்தை வெறும் சொற்களால் மாத்திரம் இழைத்ததன்று. என்னை விட்டு நீங்குதற்கு மனம் பொறுக்காத தன் காதல் உணர்ச்சிகளை இழைத்துக் காட்டிய அன்பின் வார்த்தை என்பதை அப்பொழுதே உணர்ந்துவிட்டேன்.

'நன்னுதல்! ஒழிகோ (போகட்டுமோ) யான்! – என்று என்னை விட்டுப் பிரியப்பெறாத அவனுடைய பிரியாவிடையின் கடைசி வார்த்தைக்கு யான் கூறிய மறுவார்த்தை.

–'பெயர்க!' என்ற ஒரேயொரு சொல்லைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் அவன் அவ்விடத்தே விட்டுப் பெயர்வதற்கு என் மனம் மேவவேயில்லை. அப்படியிருந்தும் 'பெயர்க!' என்று நாவால் அசை போட்டுவிட்டேன். வெறுமனே என்நா 'பெயர்க! பெயர்க!' என்று ஆயிரந்தடைவ அசை போடலாம். ஆனால், என் உள்ளத்தின் அடித்தளம் அவ்வாறு அசைபோட்டதா?

இல்லவே இல்லை!

'வருக! மீண்டும் வருக! என்ற ஒலிகள்தாம் அசைபோட்டன. இன்றுவரை என்னுள்ளத்தில் அவ்வொலிகள்தாம் அசை போடுகின்றன. அவ்வொலிப் பெருக்கை என் அன்னை அறிவாளோ? அழகிய சிறிய இச்சேரியில் வாழும் அலர்தூற்றும் பெண்கள்தாம் கேட்பாரோ? அல்லேல், என் நெஞ்சத்திலுள்ள அக் கொஞ்சுந் தமிழ்க் கோமான்கூட உற்றுக் கேட்பானோ? உற்றுக் கேட்கக் கூடிய அளவுக்கு அவன் நெஞ்சமும் எம்மட்டில் பதிந்து இருக்குமோ?

நான்தான் ஏதோ அவனைத் தவறாக எடை போடுகின்றேன். உண்மையில் அவனும் என்மீது காதல் நெஞ்சத்தைக் கொண்டவன்தான். அவ்வன்பின் நிலைக்களம், - என்றோ ஒருநாள் தன் பட்டினத்துக்கு என்னை உடன் கூட்டிச் செல்லுமாறு அவனை இங்கு வழியனுப்பி வைக்கும். அல்லாமலும், என்னைத் தம் மணப்பெண்ணாகக் கொண்டு தான் வாழும் கடல் தழுவும் துறைதூர்ந்த ஊருக்கு அழைத்துச் செல்வதற்காயினும் என்பால் வந்துதான் தீருவான் என்பதில் எனக்கு முழுக்க முழுக்க நம்பிக்கை உண்டு. அத் திடமான நம்பிக்கையின் உள்ளத்தை என்மட்டில் ஏற்படுத்தியவனும் அவன்தானே!

'பெயர்க!' - என்று நான் கூறிய அக் கணமே அவன் பெயர்ந்தானில்லை! காற்றிலும் விரைவாய்ச் செல்லக்கூடிய தன் தேரை உடனுக்குடனே செலுத்தியும் இருக்கலாம். அப்படி அவன் செலுத்தவும் இல்லை. தேரைச் செலுத்துவதற்கு முன் தன் தேரின் கொடிஞ்சியினைப் பற்றிக் கொண்டவனாக வைத்த கண் இமைக்காது என்னையே நோக்கி நின்றான்.

அவன் நின்ற அந்த நிலை! - என்மீது தான் கொண்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழியாத அன்பின் நிலையன்றோ! என் உள்ளத்தில் என்றும் வாடாத காதற் பூங்காவை மலர்வித்த தெய்வ நிலையன்றோ! அத்தெய்வ நிலை – இன்னும் என் கண்ணுள் நிற்பதுபோல் இருக்கின்றதே!

'திருமண வாழ்க்கை, ஒருநாளில் தீர்ந்து விடக்கூடிய களியாட்டம் அல்ல; அது சாகும்வரையும் நின்று, அடுத்த பிறவிக்கும் இணைவான அன்புக்கு வழி கோலும் தெய்வீக வாழ்வுக்கு வழிசமைப்பதாகும்.'

எனக்குக் காலா காலத்தில் திருமணத்தைச் செய்து வைக்கத் துடிதுடிக்கும் பெற்றோர் என் உள்ளத்தின் ஈடுபாட்டை அறிந்து இனிமேலாயினும் அந்தத் தெய்வீகமான வாழ்வை எனக்குத் தேடித்தரட்டும். தேடித்தரக்கூடிய அளவுக்கு என் தந்தைக்கு அதிக சிரமங்களைத் தலைவன் கொடுக்க மாட்டான். அப்படிக் கொடுக்கும் அளவுக்கு என்னை மறந்து வாழவும் மாட்டான்.

அவன் வந்ததும்; எம்முடன் பேசியதும்; என்னையே குறித்து நோக்கி 'நன்னுதல் ஒழிகோ யான்?' என விடை கேட்டதும் யானே கவிழ்ந்த முகத்தோடு 'பெயர்க!' என்றதும்; கடைசி முறையாகத் தேர்க் கொடிஞ்சியினைப் பற்றிக் கொண்டு என்னையே நோக்கி நின்றதும்; இவையெல்லாம் அவனோ யானோ எளிதில் மறந்து வாழக் கூடியவைதாமோ?

எப்படி மறப்பது? யாதேனும் ஒரு தொடர்பு இல்லாத மக்களே, அன்று நடந்த அந் நிகழ்ச்சியை வைத்துத்தானே இன்றுவரை மறவாது என்மீதும் என் தலைவர் மீதும் கண்டபடி அலர் தூற்றுகின்றனர். அவர்களாலே மறக்க முடியவில்லையென்றால், யாம் எப்படித்தான் மறந்து வாழ முடியும்? யானோ அவனோ மறந்து வாழக்கூடிய அளவுக்கு அவன் நோக்கு அமையவில்லையே! அவன் என்னையே நோக்கும்போது தேர்க்கொடிஞ்சியினைப் பற்றிக் கொண்டுதான் நின்றான். ஆனால், அப்பற்றைவிடத் தன் நோக்கினால் தன் உயிரோடு உயிராய் என்னைப் பற்றிக் கொண்டானே! அப் பற்றுதலின் பேற்றை என்னுடன் நின்ற தோழியரும் முற்றிலும் அறியமாட்டாரே! அதை ஓரளவேனும் என் அன்னை அறியும் பொருட்டும், அலர் கூறும் வாயினரான அழகிய இச் சிறிய சேரியினர் கேட்கும் பொருட்டும், என் செவிலித்தாய் மகளான ஆருயிர் தோழியிடம் மாத்திரந்தான் சூளுரைத்துச் சொன்னேனே! அவற்றை எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை சொல்லியிருப்பாளே? முதலில் அவள் என் செவிலித்தாயிடந்தான் சொல்லியிருப்பாள். செவிலித்தாய் அறிந்தாள் என்றால், 'என்னை ஈன்ற நற்றாயும் அறிந்து விடுவாள்தானே!'

இதுவரை என்னைக் கொன்ற கொடிய இரவுக்குக் கூட இன்று மட்டும் என்மேல் கருணை பிறந்துவிட்டது. அதனால்தான், இத்துணை விரைவில் தன் ஆணவத்தின் ஆட்சியைப் பகலவனுக்குக் கொடுத்துவிட்டு மறையப் போகின்றது போலும்.

இப்படி என் நெஞ்சத்தை எத்தனை இரவுகள்தாம் அவன்பால் அலையவிடுவது!

'தன் காலால் எம்முடைய மண்ணாலாகிய சிறிய மனையை அழித்ததோடு என் நெஞ்சமும் தன்பால் அழிந்து உருகுமாறு செய்தவன் – என்றோ ஒருநாள் வரத்தான் போகிறான்! வரத்தான் போகிறான்!' – என்று சொல்வதுபோல் ஞாழல் மரத்தில் தங்கி வாழும் அன்றில் பறவைகள்கூடத் தம் மென் சிறகை அடித்து ஏதோ தமக்குள் சொல்லிக் கொள்கின்றன. இதோ இக்கொடிய கடல் மாத்திரம் எதிர்மறுத்து என் நெஞ்சத்தை அச்சுறுத்துகின்றதே!

கடல் நினைக்கலாம் 'தான் என்றும் காதல் கொள்வதற்கு அழகான கரை இருக்கிறதே' என்று.

அப்படியானால், எனக்கு?

தலைவன் இருக்கிறான்! ஆருயிர்த் தலைவன் இருக்கின்றான்!

அவன் வருகை பொய்த்து விட்டால்? –

ஐயகோ! அப்படி நேரக்கூடாது! அப்படி நேரக் கூடாது!

நேர்ந்தால்?

'என் நெஞ்சம் இவ்வாறு அவன்பால் அழிந்து அழிந்து உருக வேண்டியதுதான்! உருக வேண்டியது தான்!!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவிலித் தாயின் புலம்பல்

பரபரப்பு!

அதிகாலையில் இருந்தே என்றும் இல்லாததொரு புதிய பரபரப்பு!

செல்வத்தாலும் சீர்மையாலும் இன்பத்தாலும் எந்நாளும் புதிய ஒளியோடு பிரகாசித்துக் கொண்டே இருக்கும் அந்த செல்வமனை, உதயணன் வருகை ஒளியிலும் உயிரற்றுப் பொலிவற்றுக் காணப்பட்டது.

தாழ்ந்த நரைமுடியும், ஆழமான குழிவிழுந்த பொக்கை வாயுமுடைய முதிர்ச்சியின் சிகரமாய் அம்மனைக்கு உரித்தாய் விளங்கும் பாட்டியானவள் நடுத்திண்ணையில் இருந்துகொண்டே, 'எப்படி இருந்தவள் இப்படி ஆகிவிட்டாளே! ஏன்தான் ஓடினாளோ! ஒரு வார்த்தை அவளே என்னிடம் சொல்லி இருந்தால், வீட்டிலேயே சீருஞ் சிறப்போடும் காரியத்தை முடித்து என் கண்ணையே மூடி இருப்பேனே!' என்று தன் தலையை ஆட்டி ஆட்டி இதுவரையும் பல தடவைகள் இடையிடையே பெருமூச்சுடன் சொல்லிக் கொண்டே இருந்தாள்.

முறுக்கேறிய மீசையை ஒரு கையால் வருடிக் கொண்டும், ஏறிய நெற்றியைக் கவிழ வைத்துக்கொண்டும், குறுக்கும் மறுக்குமாக, அவ்வழகு மனையின் ஒப்பற்ற தலைவர் ஆழ்ந்த சிந்தனையோடு நடந்துகொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தார். அவர் நடப்பதற்கு எதிர்ப்புறம் உள்ள தூணோடு தூணாய் முண்டிக்கொண்டு அவருடைய மனையாள் கலக்கம் அடைந்த முகத்தோடு வாயடைத்துப் போய் – 'கன்றைப் பிரிந்த பசுவைப்போல்' அங்கலாய்த்து நின்றாள்.

அப்படி என்னதான் தலைமுழுகிப்போன விடயம் அவ்வீட்டில் நிகழ்துவிட்டது?

நிகழாமலென்ன; அவ்வெழில் இல்லத்துக்கு உரியவளான ஒயிலான கன்னி, ஊர் பேர் தெரியாத ஓர் ஆண்மகனைக் கைப்பிடித்து எங்கோ சென்றுவிட்டாள்! சென்ற இடம் எதுவென இதுவரை யாருக்குமே தெரியவில்லை. எப்படியோ கண்டுபிடித்து – தலைமகனையும் தலைமகளையும் வீட்டுக்கு அழைத்து வந்து – உரிய சீர்முறையோடு திருமணத்தை நடத்தி முடித்திட வேண்டும் என்பதே தலைவியினுடைய பெற்றோரின் ஆவல். அந்த ஆவலைப் பூர்த்தி செய்வதில் தலைவியின் வளர்ப்புத் தாயான செவிலித் தாயும் அதிக அக்கறை எடுத்தாள். அவள் எடுத்த அக்கறையினால்தானோ என்னவோ – அவளும், 'ஆனிரைகளைக் கவரும் மறவர்போல்' தலைவியைக் கவர்ந்து வர காட்டின் வழியே செல்லத்தலைப்பட்டாள்.

செவிலி சென்ற வழியோ, ஓமை மரங்களும் உழிஞை மரங்களும் பாலை மரங்களும் செறிந்ததாகும். இடையே மண்டிய நீர்ச்சுனை! அச் சுனையின் கரையெ இளமை பொருந்திய பெண்மான் ஒன்று தன் கலையாகிய ஆண் மானை எதிர்பார்த்துக் காத்து நிற்பதுபோல் நின்றது. இதைக் கண்ணுற்ற செவிலிக்கு அவள் மகளின் நினைவுதான் மேல் எழுந்தது. அந்த அழகிய மடமான் அவள் மகளாகவே இருந்தால் அவளுக்கு எத்துணை ஆறுதலாக இருக்கும்.

அவளை அறியாமலே அவளுடைய கால்கள் அந்த மடமான் அருகே நகரத் தொடங்கின.

மானும் அவளைத் தன் தாயினமென்று கருதித்தானோ என்னவோ, வெருண்டு ஓடாது அவள் கருணை என்னும் பார்வைக்கு அடிபணிந்து – பதுமையைப்போல் நின்றது. செவிலியோ, தான் இக் காட்டில் – அதிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்து இவ்விதம் வரநேர்ந்த காரணத்தை மானுக்குச் சொல்லத் தொடங்கினாள்.

என் அருமை மகள், அவளை நான் பெறாவிட்டாலும் வளர்த்தேனல்லவா! எத்துணை உரிமையோடு – அன்போடு – பாசத்தோடு வளர்த்தேன் தெரியுமா? அந்த உரிமையும் அன்பும் பாசமும் கொண்டுதான் ஏதோ சிலவற்றைச் சொல்ல வேண்டுமென என் நெஞ்சம் துடிக்கின்றது.

'நின் முலைகளும் முகங் கூட்டி, பெண்ணின் பருவத்தால் நிரம்பியுள்ளன. கூர்மையான நின் பற்கள் புதிய ஒளியினைப் பெற்றுள்ளன. அதற்கேற்றாற்போல் தண்மையான தழை ஆடையினையும் நீ உடுத்துகின்றாய். நாற்புறமும் சுற்றிச் சுழன்று எம் தினைப்புனம் எங்கும் திரிகின்ற நின்னுடைய ஆயத்தாருடன் நீ வழக்கம்போல் ஆடிப்பாடிக் கூடிக் குலாவுவதை அடியோடு விட்டொழிந்து எவ்விடத்திலேனும் செல்லாதிருப்பாயாக. இதை யான் ஏன் சொல்கிறேன் என்றால், இவ்வூர் பழைமை வாய்ந்தது, அதிலும் பழைமை வாய்ந்த தொல்பதியை உடையது இவ்வூர்ப் புறங்கள். இங்கு தாமே தாக்கி வருத்தும் பல அணங்குகளும் உள்ளன. அதனால், நீ எம் காவலுக்கே உள்ளவளாகி விட்டாய். வீட்டின் பின்புறம் உள்ள கடை வாயிலுக்கும் நீ போகாது இருப்பதே நன்று.

அறிவுள்ளவளான எம்மகளே! நீ இன்னுமே பேதைப் பருவத்தினள் என்றுதான் நினைக்கின்றாய் போலும். உண்மையில் அப் பருவத்தையே கடந்துவிட்டாய்! இப்போது பெதும்பைப் பருவத்தின் மலர்ச்சியிலே ஒதுங்கியவளாய் உள்ளனை என்பதையும் உணர்ந்துகொள்' என்றேன்.

'இவற்றை எல்லாம் கேட்ட அவள்தான் என்ன செய்தனள் தெரியுமோ?'

மானும் தனக்கு ஒன்றுமே தெரியாததைப்போல் ஒருமுறை தலையை ஆட்டி மருண்ட கண்களோடு செவிலியைப் பார்த்தது. செவிலி மீண்டும் தன் உரையைத் தொடர்ந்தாள்:

'அறத்தாலும் வளத்தாலும் இன்பத்தாலும் நல்ல ஒளியினைப் பரப்பும் சிறந்த எம் வீட்டின் அருமையுடைய காவலையும் மீறி எப்படியோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் ஒருவருக்குமே தெரியாமல் கடந்துவிட்டனள். தான் களவிலே ஒழுகி வரும் காதல் ஒழுக்கமான தன் சிதைவினை யாம் அறிந்துவிட்டோமோ எனப் பயந்தனள் போலும்!

'இனிதாக முழங்கும் ஆண் மானை உடைய மான் இனத்தினைச் சார்ந்த, நல்ல உயிர்ப்புடன் விளங்கும் இளம் பெண்மானே கேளாய்!' –

வலையினைக்கண்ட பெண்மான் வெருவி அயற்புறம் விரைந்து ஓடுவதுபோல், எம் இல்லின் நின்றும் வெளியேறிச் சென்றுவிட்டனள். இவ்விடத்தே, வெள்ளிய வேலினை ஏந்திய விடலை ஒருவனுடன்தான் அவள் சென்றாள். இவர்கள் இருவரும் இக்காட்டின் வழியாகத்தான் வந்திருக்கவேண்டும். அதனால்தான், அவள் வந்த அக்கணமே, அருஞ்சுரத்துக் கள்வர்கள் தொழுவங்களில் உள்ள பசுக்களைக் கவர்ந்து செல்ல, அவரைப் பின்தொடர்ந்து வெருட்டிச் சென்று, போரிட்டு, அவற்றை மீட்க விரையும் அப்பசுக்களுக்கு உரிமையுடைய மறவர்போல, நானும் அவளை அவ்விடலையிடம் இருந்து மீட்டு எம் இல்லத்துக்குக் கூட்டிச் செல்ல அவளைப் பின்தொடர்ந்து வந்தேன்! வந்ததும் இதுவரை அவளை அனுகவும் பெற்றிலேன்!'

மடமானே! அவள் யார் என்று நீ என்னிடம் வினவலாம். அவளோ, பலாப் பழத்தினது கொட்டைகளை விட்டுவிட்டு, அதன் சிறந்த சுளைகளை மட்டுமே அங்கு வாழும் குரங்கினங்கள் உண்ணும்; அவை உண்டு உதிர்த்த – தலையிலே ஆர்க்கினையுடைய வெண்மையான பலாக் கொட்டைகள் எம்மருங்கும் சிதறிக் கிடக்கும்; இப்படிப்பட்ட இயல்புடைய இம் மலைநாட்டிலே விளங்கும் சிறுகுடி இருப்பினனான எம் கானவன் மகளேதான் அவள்!

அவள், 'பொன்னோடு புலிப்பல்லையும் கோத்து, அத்துடன் ஒலிக்கும் மணிகளையும் இணைத்துக் கட்டிய தாலியினை அணிந்தவள்; மேலும், தழைத்த பசுமையான அசோகின் தளிரினால் அமைந்த தழை ஆடையினைத் தரித்தவள்;' அப்படிப் பட்டவளைத்தான் தேடி இவ்விடத்தே ஓடோடி வந்தேன்.

மானே, நின்னிடம் யான் வினவுவதைக் கேளாய்! இவ்வழியாக அவள் போக நீ கண்டனையோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*‘முலைமுகம் செய்தன; முள்ளெயிறு இலங்கின;*
*தலைமுடி சான்ற; தண்தழை உடையை;*
*அலமரல் ஆயமொடு யாங்கணும் படாஅல்;*
*மூப்புடை முதுபதி தாக்கு அணங்கு உடைய;*
*காப்பும் பூண்டிசின்; கடையும் போகலை;*

*பேதை அல்லை மேதையம் குறுமகள்!–*
*பெதும்பைப் பருவத்து ஒதுங்கினை, புறத்து’ என,*
*ஒண்சுடர் நல்லில் அருங்கடி நீவி,*
*தன்சிதைவு அறிதல் அஞ்சி - இன்சிலை*
*ஏறுநடை இனத்த, நாறுஉயிர் நவ்வி!–*

*வலைகாண் பிணையின் போகி, ஈங்குஓர்*
*தொலைவில் வெள்வேல் விடலையொடு, என்மகள்*
*இச்சுரம் படர்தந் தோளே. ஆயிடை,*
*அத்தக் கள்வர் ஆதொழு அறுத்தென,*
*பிற்படு பூசலின் வழிவழி ஓடி,*

*மெய்த்தலைப் படுதல் செல்லேன் இத்தலை*
*நின்னொடு வினவல் கேளாய்!– பொன்னோடு*
*புலிப்பல் கோத்த புலம்புமணித் தாலி,*
*ஒலிக்குழைச் செயலை உடைமாண் அல்குல்,*
*ஆய்சுளைப் பலவின் மேய்கலை உதிர்த்த*

*துய்த்தலை வெண்காழ் பெறூஉம்*
*கல்கெழு சிறுகுடிக் கானவன் மகளே.’*

*(அகநானூறு - 7)*

இவ்வாறு செவிலி புலம்பிப் புலம்பிக் கடைசியாக வற்புறுத்திக் கேட்டாளே! அக் கேள்விக்கு மடமான் என்னததான் பதில் சொல்ல முடியும்!

–அப்பொழுது எங்கேயோ ஒரு மூலையில் இருந்து ஆண் மானாகிய கலை மான் ஒன்று ஓடோடி வந்துகொண்டு இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த கலைமானோ நின்ற மடமானின் தாடைப் புறத்தைத் தன் முகத்தால் தடவிக் கொடுத்தது. மடமானோ நாணத்தால் ஆட்கொள்ளப்பட்டுத் தன் முகத்தைக் கலைமானின் தாடைப் புறத்துக்குள் புதைத்துக்கொண்டு அதன் அருகே ஆனந்தமாய் நின்றது.

சில நிமிடங்கள் கழிந்தபின் கலைமான் புறப்பட்டது! அம் மான் சென்ற வழியே அதனைப் பின்தொடர்ந்து மடமானும் சென்றது. இடையே இரு மான்களும் இணைந்து ஒன்றை ஒன்றைத் தழுவிக்கொண்டு பின் திரும்பிச் செவிலியை ஒரு முறை ஏறிட்டு அலட்சியமாய்ப் பார்த்தன!

செவிலியோ, பேரதிர்ச்சியால் தாக்குண்டவளைப் போல் அவற்றின் போக்கினை வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டே நின்றாள்!

அவளுடைய கட்புலனுக்கு அப்பொழுது அம்மான்கள் தென்படவில்லை. தலைவியும், அவள் அன்போடு – பற்றோடு – ஆசையோடு கைப்பிடித்த நல்ல ஆண்மகனான தலைவனுந்தான் தென்பட்டனர்.

'அவள் வேல்தாங்கிய விடலையோடு சென்றதில் எவ்வித தவறுமே இல்லை! உலகத்தின் இயல்பும் இதுவே. இவ்வியல்புதான் அவர்கள் இருவரையும் உடன் போக வைத்தது. 'அவர்களின் உடன்போக்கில் பேதலித்து அதிர்ச்சி அடைகின்ற நம் நிலைதான் முற்றிலும் பரிதாபத்துக்கு உரியது' என்று செவிலி தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள்.

களிநடை போட்ட மான்களும் மறைந்து வெகு நேரம் ஆகிவிட்டன.

செவிலித் தாயும் வந்தவழியே திரும்பத் தொடங்கினாள்!

**முற்றும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்யுட்களின் சொற்பொருள்

**அணங்கு**– கண்டாரைத் தன் அழகால் வருத்தும் தெய்வமகளிர்.
குறள் 1081 பக்கம் 2.

**தானை** – சேனை.
குறள் 1082 பக்கம் 2.

**யாப்பினுள்** – யாப்பினால் ஆய அற்புப் பயிரினுள்.

**அட்டிய** – வார்த்த.
குறள் 1093 பக்கம் 7.

**மடல்** – பனங் கருக்குமட்டைகளால் செய்யப்பட்ட குதிரை.
குறள் 1131 பக்கம் 14.

**காமம் உழந்தும்** – காமநோயினை அனுபவித்தும்.
குறள் 1137 பக்கம் 16.

**ஒண்தொடி** – ஒளிபொருந்திய தொடி.
குறள் 1101 பக்கம் 18.

**முறி** – தளிர். **முத்தம்** – முத்து. **வெறி நாற்றம்** – நறு நாற்றம்.

**வேய்** – மூங்கில்.
குறள் 1113 பக்கம் 23.

**கால்** – காம்பு. **நுசப்பு** – இடை.
குறள் 1115 பக்கம் 24.

**தூவி** – சிறகு.
குறள் 1120 பக்கம் 27.

**கரப்பாக்கு அறிந்து** – மறைதலை அறிந்து.
குறள் 1127 பக்கம் 32.

**வேபாக்கு அறிந்து** – வெப்பமாகிய தன்மையை அறிந்து.
குறள் 1128 பக்கம் 32.

**நுதிப்பேம்** – அவிப்பேம்.
குறள் 1148 பக்கம் 36.

**இறவா** – கழலா.
குறள் 1157 பக்கம் 45.

**துயிற்றி** – உறங்க வைத்து.
குறள் 1168 பக்கம் 48.

**பெட்டார்** – விரும்பியவர்.
குறள் 1178 பக்கம் 55.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆர் அஞர்** – மிக்க துன்பம்.

குறள் 1179 பக்கம் 55.

**வீழ்வார்க்கு** – தம்மைக் காதலித்தார்க்கு. **அளி** – அன்பு.

குறள் 1192 பக்கம் 64.

**உறாஅர்க்கு** – உறாதார்க்கு. **செறாஅஅய்** – தூர்க்க முயற்சி செய்.

குறள் 1200 பக்கம் 65.

**உள்ளினும்** – (இன்று) நினையா நிற்கவும்.

குறள் 1207 பக்கம் 74.

**சினைப்பது போன்று** – அரும்புதல் போன்று.

குறள் 1203 பக்கம் 75.

**முயங்கிய** – தழுவிய.

குறள் 1238 பக்கம் 86.

**தண்வளி** – குளிர்ந்த காற்று. **போழ** – நுழைய.

குறள் 1239 பக்கம் 86.

**பைதல் நோய்** காம நோய்.

குறள் 1266 பக்கம் 89.

**பெட்டாங்கு** – விரும்பியபடி.

குறள் 1293 பக்கம் 93.

**கவை** – கவைக்கோல். **பொறுத்தல்** – சுமத்தல். **எகினம்** – அன்னம். **திளைக்கும்** – விளையாடும். **பிணை** – பெண்மான்.

அகநானூறு 34 பக்கம் 104,105

**கோழிலை** – கொழுவிய இலை. **கோள்** – காய். **வீஅடுக்கம்** – பூப்படுக்கை. **வெறுத்த** – மிக்க. **கங்குல்** – இரவு. **ஒள்இணர்** – ஒளி பொருந்திய பூங்கொத்துக்கள்.

அகநானூறு 2 பக்கம் 113.

**அவிர்** – மலர்ந்த. **புரையும்** – ஒக்கும். **நவிலா** – பழக்கப்படாத. **விழையும்** – விரும்பும். **செத்தனள்** – கருதினள். **பொலம்கலம்** – பொன்னாலாகிய அணிகலன்கள்.

அகநானூறு 16 பக்கம் 130.

**சூள்** – சபதம். **தொடலை** – தழைமாலை. **ஆயமொடு** – தோழியரோடு. **எல்லும்** – பகலும். **அசைவு** – தளர்ச்சி. **இறைஞ்சிய** – கவிழ்ந்த. **வல்சி** – உணவு. **நுடங்கும்** – அசையும்.

அகநானூறு 110 பக்கம் 142.

**எயிறு** – பற்கள். **படாஅல்** – வெளிப்படாது இருப்பாய். **காப்பு** – காவல். **கடை** – வீட்டின் கொல்லைப்புறத்துக் கடை வாயில். **சிதைவு** – களவு ஒழுக்கம்.

அகநானூறு 7 பக்கம் 155.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆன்மிகம் மதங்களுக்கும் மதவாதங்களுக்கும்
அப்பாற்பட்டதொன்று. ஆன்மாவின்
இருக்கையும் அதன் தேடலுமே ஆன்மிகமாகும்.
ஆன்மாவின் தூய்மையின் அடித்தளம்தான்
ஆன்மிகத்தின் ஊற்று. இவ்வுண்மையைப்
'பழந்தமிழ் மக்களின் ஆன்மிகம்' என்னும்
அண்மையில் வெளிவந்த எனது நூலில்
ஆங்காங்கு வலியுறுத்தியுள்ளேன்.

தொடர்ந்து இதுவிடயமாய் என் தேடலைத்
தமிழ் மக்கள் அனைவரும் வரவேற்பார்கள்
என நம்புகிறேன்.

**ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தமிழ் அன்பர்களே!*

சங்க இலக்கியங்களான அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய நூல்களில் இருந்து அகம் – புறம் பற்றிய என் இலக்கியக் கட்டுரை ஆக்கங்கள் பழைய திங்கள் இதழ்களில், விவேகி, கலைவாணி ஆகிய சஞ்சிகைகளில், சிறப்புமலர்களில் வெளிவந்துள்ளன.

இவ்வாக்கங்கள் பற்றிய தேடலில் நான் ஈடுபட்டுள்ளேன். தங்கள்வசம் இவ்வாக்கங்கள் இருந்தால் தயவுசெய்து அப்பிரதிகளை எமக்கு அனுப்பிவைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

திரும்பவும் தங்களிடம் சேர்ப்பிப்பதற்கு உதவியாக தங்களது முகவரியை தெரியப்படுத்தினால் நலமாக இருக்கும்.

இதுபற்றிய தங்களின் முயற்சியையும் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறேன்.

அன்புள்ள

**வேல்மாறன்**

01.05.2007

இல. 9, ஓடைக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
021/222 9040



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்மொழியை ஆழமாகவும் அகலமாகவும் கற்றுணர்ந்த வல்லவர்கள், நம்மவர் மத்தியில் அருகிவருகின்ற இக்காலகட்டத்தில் தமிழ் மூதறிஞர் வாயிலாய் சிதம்பரம் ஆறுமுகநாவலர் ஆதீன உயர் தமிழ்க் கலாசாலையிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் பல்லாண்டு காலங்களாக தமிழ்மொழி இலக்கணம், இலக்கியங்கள், வரலாறு ஆகியவற்றை முறையாய்ப் பயின்று இன்று முதிர்ச்சியின் நிலையில் தளர்ச்சியுறாது யாழ். புனித சவேரியார் குருமடக் கல்லூரியிலும், மரியதாஸ் அறிவகத்திலும் மொழிப்பணியையும், சமூகக் கல்விப் பணியையும் செம்மையாய் ஆற்றிவருகின்ற புலவர் 'வேல்மாறன்' அவர்களை நம் தமிழ் சமூகம் மறந்துவாழ முடியாது.

அண்மையில் வெளிவந்த அவரது பழந்தமிழ் மக்களின் ஆன்மிகம் பற்றிய நூலும், பழந்தமிழ் இலக்கியத்தின் வாயிலாய் தமிழ் மக்களின் காதல் உணர்வுகளை எடுத்துச்சொல்லும் இந்நூலும் தமிழ் மக்கள் மத்தியில் எக்காலத்தும் நல்ல வரவேற்பைப்பெறும் என்று நம்புகிறோம்.

புலவர் அவர்களின் அரும்பணி மென்மேலும் சிறப்புற நெஞ்சார வாழ்த்துகின்றோம்!

ISBN 955-1629-00-0
9789551629007

**Published by**
**NEO CULTURAL COUNCIL**
**28/1, St. James West Street,**
**Jaffna. 021/222 3224**

ஜெயந்த் சென்ரர் 021-222 9021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org